கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(06.08.2017 - 06 ஆவணி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 165, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ஞான ஒளி (Sinhala) GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



விண்ணக மண்ணக அரசியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

ஆவணி 15

நம் காலத்து ஓவியங்கள், நமது படைப்பாற்றல் வழியாகப் படைப்பின் அழகை ஒவ்வொருவரும் கண்டுணர உதவும்படியாக மன்றாடுவோம்.

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்



# ஒவ்வொரு பிள்ளையின் முகமும் இயேசுவின் முகமே.



## அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கொழும்பு, மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்ற திருப்பாலத்துவ சபையின் தேசிய நிகழ்வில் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒவ்வொரு பிள்ளைகளின் முகத்தில் இருப்பது இயேசுவின் முகமே. அது சில வேளைகளில் புண்படுத்தப்பட்டு வேதனைக்குள்ளாகிறது. இதற்கு காரணமாக அமைவது மனிதர்களின் பாவமே. எனவே அத்தகைய முகங்களை மகிழ்ச்சி நிறைந்த முகங்களாக மாற்ற நீங்களும் நானும் ஒன்றிணைய வேண்டும்" என்று தெரிவித்த ஆண்டகை அவர்கள் தனது உரையில் மேலும், "இச்சபையின் ஊக்குவிப்பாளர்கள் என்பவர்கள் இக்குழந்தைகளை இறைவன்பால் இட்டுச்செல்வதற்காக விசேட விதமாக அழைப்புப் பெற்றவர்கள். காரணம் இன்றைய காலத்தில் சிறுவர்களின் உலகமானது பலவித தீமைகளினால் அசுத்தமாகி அழிவுக்குட்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகளின் உள்ளத்தில் பலவிதமான தீமைகள் விதைக்கப்பட்டும், தீமையான விடயங்களுக்கு குழந்தைகள் பாவிக்கப்பட்டும், பிள்ளைகளுக்குரிய மதிப்பினை .....

15

## திருத்தந்தையின் 5ம் ஆண்டு தலைமைப்பணி நினைவுப் பதக்கம்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆற்றிவரும் தலைமைப்பணியின் 5ஆம் ஆண்டை நினைவுகூரும் வகையில், வத்திக்கான் வடிவமைத்துள்ள நினைவு பதக்கம்...

15

## கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு - 2017

கத்தோலிக்க மறைபாடசாலைகளில் பணியாற்றும் மறையாசிரியர்களுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வுக்கான விண்ணப்பப்படிவங்கள், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நாட்டின் அனைத்து பங்குகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மறைப்பாடசாலையின் முதல்வரான பங்குத் தந்தையினால் மட்டுமே இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள்....

15



கொழும்பு செக்கடித்தெரு பங்கு தனி பங்காக உருவாகி 50ம் ஆண்டு ஜுபிலி விழாவில் புனித அன்னம்மாள் ஆலய திருவிழா 30.07.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது...

15

## கொழும்பு உயர் மறைமாவட்ட பேச்சுப்போட்டி 2017



முதலாம் இடம்



மூன்றாம் இடம்

15



கொழும்பு புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா ஆலயத்திற்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த மாதம் 22ம், 23ம் திகதிகளில் வருகை தந்திருந்த போது...



கொழும்பு புதுக்கடை பங்கில் மருதமடு அன்னையின் திருவிழா 09.07.2017 அன்று வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருவிழாச் சிறப்புத் திருப்பலியை பேராயரின் பதிலாளர் அருட்தந்தை மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளார் நிறைவேற்றுவதை படத்தில் காணலாம். **தகவல் : டிக்சன் பர்னாந்து**

## ஞானோதயம் - அக்குவானஸ் உயர் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது.



இலங்கையில் 170 வருடங்களாக பல்வேறுபட்ட பணிகளை ஆற்றிவரும் அமலமரித்தியாகிகள், மாணவர்களின் ஆரம்ப, இடைநிலைக் கல்வி விருத்தியில் நீண்ட காலமாகப் பணியாற்றிவருவது யாவரும் அறிந்ததே. தற்பொழுது, உயர் கல்வியின் முக்கியத்துவத்தை தெரிந்துகொண்ட வடமாகாண அமலமரித்தியாகிகள் மன்னாரில் இயங்கிவரும் "ஞானோதயம்" எனும் அமலமரித்தியாகிகளின் ஆன்மீகக் கல்வி மையத்தை கொழும்பு அக்குவானஸ் உயர் கல்லூரியுடன் இணைந்த ஒரு உயர் கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தி உள்ளார்கள். இத் "தரமுயர்த்தல்" நிகழ்வு கடந்த 11.07.2017 அன்று கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் இல்லத்தில் இடம்பெற்றது. கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும், அமலமரித்தியாகிகளின் வடமானில முதல்வர் அருட்கலாநிதி எட்வின் வசந்தராஜா, அ.ம.தி அடிகளாரும் உத்தியோகபூர்வ ஒப்பந்தமொன்றில் கைசாத்திட்டு ஆங்கில டிப்ளோமா கற்கைநெறியை, ஆரம்பத்தில், அக்குவானஸ் உயர் கல்லூரியுடன் இணைந்து நாடாத்துவதற்கான அனுமதியை பெற்றிருக்கிறார்கள். இவ் அனுமதியைப் பயன்படுத்தி வடமாகாண அமலமரித்தியாகிகள் மன்னார் மாவட்டத்தில் மாத்திரமல்ல அவர்கள் ...

2

**ஆண்டவரே, உம் பேரன்பையும் மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். (திபா 85)**

## தல்கஸ்வலையில் அன்னை தெரசா ஆலயம்



**‘அமைதியின் தூதர்**
**எங்கள் அன்னை தெரசா**
**அல்பேனிய தேசத்தில் பிறந்தாயே**
**அன்புப் பணி மூலம் அகில உலக மக்களின்**
**அன்னை ஆனாயே...**

**அனாதைகளின் வாழ்வில் ஒளியேற்றினாய்**
**குருடர் முடவர் வாழ்வு பெற வழி செய்தாயே**
**மனிதரிலே இயேசுவை கண்ட அன்னையே**
**எங்களுக்காய் இறைவனிடம் மன்றாடுமே’**

இவ்வாறு, உலக மக்களால் புகழப்படும் புனித கல்கத்தா தெரசாவுக்கு இலங்கை தேசத்தில் முதல் ஆலயம் காலி மறைமாவட்டத்தில் உள்ள தல்கஸ்வலை தோட்டத்தில் 2010ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வாலயம் கட்டப்படுவதற்கு முன்பு இவ்வூரில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதற்கு என்று ஆலயம் ஒன்று இருக்கவில்லை. வீடுகளிலும் மர நிழல்களிலும் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இவ்வாலயம் கட்டப்பட்ட பின்பு இவ்வூரும் ஆலயமும் பல்வேறு விதங்களில் வளர்ச்சி அடைந்து வருகிறது. மேலும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் திருப்பயணிகளின் எண்ணிக்கை இங்கு நடக்கும் புதுமைகளுக்குச் சான்றாக அமைகிறது.

தல்கஸ்வலை புனித அன்னை தெரசா ஆலயத் திருவிழா இவ்வருடம் 13.08.2017 கொடியேற்றத்துடன் தொடங்கி 20.08.2017 அன்று காலி மறைமாவட்ட ஆயர் தேமகு றேமன்ட் விக்கரமசிங்க ஆண்டகையின் தலைமையில் திருப்பலியோடு நிறைவுபெறும். இத்திருவிழாவிற்கு அனைவரும் வருகை தந்து புனித கல்கத்தா தெரசாவின் வழியாக இறைவனின் அற்புதங்களையும், ஆசீரையும் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**திருவிழா கூட்டுத் திருப்பலி – தேர்பவனி 2017 ஆவணி 20 காலை 9.30க்கு**

**திருப்பயணிகளின் தொடர்புக்கு**

**அருட்பணி அருண் றெக்ஸ் 075 0473011,**
**அருட்பணி. ஆரோக்கியசாமி 075 5063199,**

**கொழும்பிலிருந்து பேருந்தில் வர**
**077 3455096, 072 2907466, 077 7514968**

**தேவாலயத்திற்கு வரும் வழி**

**கொழும்பிலிருந்து எல்பிட்டியவுக்கு 70வது கிலோமீற்றர். எல்பிட்டியிலிருந்து 18 கிலோமீற்றர் தொலைவில் தல்கஸ்வல அமைந்துள்ளது.**

**தகவல் : கார்மேல் அருட்பணியாளர்கள், பங்கு மக்கள்,**
**புனித அன்னை தெரசா ஆலயம், தல்கஸ்வலை.**

## உயர்மறைமாவட்டம் திருப்பாலத்துவ சபையின் சின்னம் வழங்கும் வைபவம்

உயர் மறைமாவட்டம் திருப்பாலத்துவ சபை வடகொழும்பு வட்டாரத்தில் திருப்பாலத்துவ சபை நிரந்தர அங்கத்துவம் பெறுவதற்கான சின்னம் வழங்கும் வைபவம் 2017, ஆடி மாதம் 22ம் திகதி சனிக்கிழமை அன்று, கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில், உயர்மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை குருசன்குமார் பெரேரா அவர்களின் அனுசரனையுடன் வடகொழும்பு வட்டார இயக்குனர் அருட்தந்தை இயேசுராஜ் அவர்களின் தலைமையில் பேராயரின் பதிலாளர் அருட்தந்தை மனோகுமாரன் நாகரட்ணம் அவர்களினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சின்னம் அணிவிக்கப்பட்டது. திருப்பாலத்துவ சபை 117 மாணவர்கள் நிரந்தரமான அங்கத்தவர்களாக்கப்பட்டனர். கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் தனித் தமிழ் மொழியில் திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கான சின்னம் வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். மேலும் அருட்தந்தை குருசன்குமார் அவர்கள் உயர்மறைமாவட்டத்தில் தமிழ் பங்குகள் உள்ள மறைவட்டாரங்களிலும் சின்னம் வழங்கும் நிகழ்வினை தொடர்ந்து நடத்துமாறு கேட்டுக் கொண்டார்கள்.

**தகவல் : அருட்தந்தை குருசன்குமார் பெரேரா, இயக்குனர்,**

## 01 ஞானோதயம் – அக்குவனாஸ் உயர்....

தற்போது பணிபுரியும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற ஏனைய மாவட்ட மாணவர்களின் நன்மைகருதி அம்மாவட்டங்களிலுள்ள தம் நிறுவனங்களில் மாணவர்களை இவ் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிக்கு ஆயத்தப்படுத்தி மன்னார் ஞானோதயம் உயர்கல்வி நிறுவனம் மூலமாக அக்குவானஸ் பல்கலைக்கல்லூரியின் ஆங்கில டிப்ளோமாவிற்கான சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். இவ்வாங்கில டிப்ளோமாவிற்கான வகுப்புக்கள் இவ்வருட க.பொ.த உயர்தர பரீட்சைகள் முடிவடைந்த பின்பு புரட்டாதி மாத முற்பகுதியில் ஆரம்பமாகும். எதிர்காலத்தில் ஏனைய துறைசார்ந்த டிப்ளோமா மற்றும் இளநிலை பட்டப்படிப்பு கற்கைநெறிகளும் இவ்வுயர்கல்வி நிறுவனத்தினால் கற்பிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## வெலிமடை புனித அன்னம்மாள் திருவிழா



ஆடி மாதம் முழுவதும் புனித தேவதாயின் அன்னையாகிய புனித அன்னம்மாளுக்கு விழா எடுக்கும் மாதமென்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஊவாமாகாணத்தில் அமைந்துள்ள வெலிமடையில் எழுந்தருளியிருக்கும் அன்னம்மாள் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. இம்மாதம் 16.07.2017 அன்று திருநாள் திருப்பலி பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்ஸ்டன் பெர்ணான்டோ (S.S.S) ஆண்டகையின் தலைமையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. திருப்பலியின் முடிவில் அன்னம்மாளின் திருச்சுரூபம் வெலிமடை நகர் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆசீரும் வழங்கப்பட்டது. இவ்வாலயம் பல ஆண்டுகள் பழமை வாய்ந்தது. புதுமையான அருளடையாளங்கள் திகழ்கின்றது என்பது பக்தர்களின் விசுவாசம். பதுளை, பண்டாரவளை, நுவரெலியா போன்ற வெளிப்பங்குகளிலிருந்தும் பக்தர்கள் கலந்து சிறப்பித்தார்கள். தேவதாயின் தாயார் என்றும் இயேசுபிரானின் பாட்டியாகவும் புனித அன்னம்மாள் சிறப்பிக்கப்படுகின்றாள். கேட்கும் வரங்களை இறையேசுவிடம் பெற்றுத் தரும் அன்னம்மாளிடம் எமது குடும்பங்களுக்காக வேண்டிக்கொள்வோம்.

புனித அன்னம்மாளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம், ஆசிரியை**

## “அருட்தந்தை வில்ஃபிறட் அடிகளார் இறைமக்களுக்கு சிறந்த ஆயனாகவும், குருமாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்”



இறுதி அஞ்சலி நன்றித் திருப்பலியில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை அவர்கள் இவ்வாறாக தெரிவித்தார்.

37 வருட காலமாக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் குருவாக குருத்துவ வாழ்வில் தம்மை இணைத்து தமக்குரிய பணிகளை நிறைவேற்றி இன்று இறைவனடி சேர்ந்திருக்கும் அருட்பணி. வில்.்.பிறட் பிந்து அடிகளார் பன்னிரண்டு வருடங்கள் தாம் பணியாற்றிய பங்குகளில் வாழ்ந்த மக்களுக்கு சிறந்த ஆயனாகவும், பதினைந்து ஆண்டுகளாக குருமாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் இருந்தார்” என்று, துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை அவர்கள் கடந்த திங்கட் கிழமை, இறைவனடி சேர்ந்த அருட்பணி வில்.்.பிறட் பிந்து அடிகளாரின் இறுதி அஞ்சலி நன்றித் திருப்பலியின் போது கூறினார்.

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற இத்திருப்பலியில் உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களள் உட்பட குருநாகலை மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெரல்ட் அந்தனி ஆண்டகை ஆகியோருடன் ஏராளமான குருக்கள் துறவியர் கலந்து கொண்டனர். அன்றைய தினம் ஆலயத்தில் நடைபெற்ற இறுதிச்சடங்கின் வழிபாட்டை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் ஓய்வு பெற்ற பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் நடாத்தியதுடன், சேமக்காலையில் இறுதி வழிபாட்டை குருநாகல் மறைமாவட்ட ஆயர் நடாத்தினார்.

இத்திருப்பலியில் இறைவனடி சேர்ந்த வில்.்.-பிறட் பிந்து அடிகளார் பணியாற்றிய பெரியதெரு, பல்லன்சேனை, குரனை, மாபோலை ஆகிய பங்குகளில் இருந்து ஏராளமான மக்கள் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலி அருட்தந்தைக்கு செலுத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு புதுச்செட்டித் தெரு புனித வியாகுல மாதா ஆலய பங்கில் இம்மாதம் நடைபெறவிருக்கும் உறுதிபூசுதல் அருட்சாதனத்தை முன்னிட்டு, அவ்வருட்சாதனத்தைப் பெறவிருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு 29.07.2017 சனிக்கிழமை மாலை 4.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இக்கருத்தரங்கை குடும்ப நலப் பணியகக் குழுவின் சார்பாக திரு. றொமிலஸ் பர்னாந்து, திரு. ஜோசப் ஞானாகர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பங்குபற்றிய பெற்றோர்களையும் வழிநடத்தியவர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : பீற்றர் றொபின்சன், மறையாசிரியர்.**

## இறைபதம் அடைந்தார்.



**அல்விறட் லோறன்ஸ் குணதிலக்க நிரந்தர வாழ்வை வெற்றி கொண்டார்.**

இலங்கை கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்தந்தை மகேந்திர குணதிலக்க அடிகளாரின் அன்புத் தந்தை அல்விறட் லோறன்ஸ் குணதிலக்க அவர்கள் கடந்த வாரம் இறைவனடி சேர்ந்துள்ளார். இவரது ஆன்மா இறைவனில் அமைதி காண ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.



கொம்பனித்தெரு, செபமாலை மாதா ஆலயத்தில் கடந்த மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையினால் மாணவ மாணவிகளுக்கு உறுதிபூசுதல் அருளடையாளம் வழங்கப்பட்டது. உறுதிபூசுதல் பெற்ற மாணவர்களையும், ஆயர் அவர்களையும், பங்குத் தந்தை பீட்டர் சுபராஜ்அடிகளாரையும், மற்றும் உதவிப்பங்குத் தந்தை ரவீந்திர பீரிஸ் அடிகளாரையும் படத்தில் காணலாம்.

**தகவல் மற்றும் படங்கள் : டிக்சன் பர்னாந்து**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
06 ஆவணி, 2017 ஞாயிற்றுக்கிழமை.

## அழகும் அர்த்தமும் மிகுந்த மரியாவின் வாழ்வைப்போன்று எமது வாழ்வும் அழகும் அர்த்தமும் பெற வேண்டுமென்றால் நாமும் இயேசுவை பின்பற்றி வாழ வேண்டும்.

**‘என்னில் விசுவாசம் கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்கள்’**

எல்லா விழாக்களுக்கும் ஒரு வரலாறு இருப்பது போன்று அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவிற்கும் ஒரு வரலாறு உண்டு. இவ்விழாவானது கி.பி. 450ல் இருந்து “துயில் கொள்ளும் விழா” என்னும் பெயரில் கொண்டாடப்பட்டு வந்தது. “மரியா கடவுளை தாங்கியவர்” என்ற விழாவோடு இணைக்கப்பட்டது. கி.பி.6ம் நூற்றாண்டில் அரசர் ஜஸ்டின் உரோமை அரசு முழுவதும் இவ்விழா கொண்டாடப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். கீழை நாட்டு திருத்தந்தையர்கள் ஆட்சி செய்தபோது இவ்விழா மேலை நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வந்தது. கி.பி. 8ம் நூற்றாண்டில் திருத்தந்தை அட்ரியன் என்பவர் இவ்விழாவிற்கு “கன்னி மரியின் விண்ணேற்பு” என்று பெயர் சூட்டினார்.

மரியாவின் விசுவாசப் பயணத்தின் உச்ச நிலையும், மரியன்னையின் அர்ப்பண வாழ்விற்கு கடவுளால் கொடுக்கப்பட்ட பரிசுதான் மரியாவின் விண்ணேற்பு. மரியா இயேசுவின் உண்மையான மற்றும் முழுமையான சீடத்தியாக இருந்ததால்தான் மீட்பின் பயனை அடைய முடிந்தது. இயேசுவின் விண்ணேற்பு, மரியாவின் விண்ணேற்பு இரண்டிற்கும் வித்தியாசங்கள் உள்ளன. இயேசு விண்ணகத்திற்கு தாமாகவே எழுந்தருளி சென்றார். ஆனால் மரியா விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். “என்னில் விசுவாசம் கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்கள” எனும் இயேசுவின் வார்த்தைகள் மரியன்னையின் விண்ணேற்புக்கு மிகப் பொருத்தமாகவே உள்ளன. அழகும் அர்த்தமும் மிகுந்த மரியாவின் வாழ்வைப்போன்று எமது வாழ்வும் அழகும் அர்த்தமும் பெற வேண்டுமென்றால் நாமும் இயேசுவை பின்பற்றி வாழ வேண்டும். அப்போது எமது வாழ்விலும் புதியவைகளையும் அதிசயங்களையும் இயேசு செய்வார்.

மனித வாழ்வின் இறுதி நிகழ்வுதான் மரணம். மரணத்தை சந்திப்பதற்கு பலருக்கு அச்சம். காரணம் எமது பாவநிலை. ஆனால் மரியாள் சற்றும் சலனமற்று மரணத்தை துணிவோடு சந்தித்தவர். அத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ள தன்னையே தன் வாழ்வையே தயாராகிக் கொண்டவர். தனது அன்பு மகனின் மரணத்தின்போது உடனிருந்தவர். அதுபோன்று எமது வாழ்விலும் சரி சாவிலும் சரி நிச்சயம் உதவி செய்பவர் மரியாள். அதனால்தான் அருள் நிறைந்த மரியே என்ற செபத்தை சொல்லும்போது அர்ச்சிஷ்ட மரியாயே சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எப்பொழுதும் எங்கள் மரண வேளையிலும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று செபிக்கின்றோம்.

இறையாசிருடன்
ஆசிரியர்

# விண்ணேற்பு அடைந்த இறைவனின் தாய்



இதோ! உம் அடிமை என்ற நீ
விண்ணரசியானாய்
இறைவனின் சித்தம் என்ற நீ
அதன் தத்துவம் ஆனாய்
‘உம் வார்த்தையின் படி
‘ஆகட்டும்’ என்ற நீ
‘வார்த்தையின் தாய்’ ஆனாய்
இறையரசில் அமர்ந்து பரிந்து
பேசுபவள் ஆனாய்


இறைவனின் மாசற்ற அன்னையும் என்றும் கன்னியுமான மரியாள் அவளது இவ்வுலக வாழ்க்கைப் பயணம் நிறைவுற்றதும் உடலுடனும் ஆன்மாவுடனும் விண்ணக மாட்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள் என்பது இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடு என நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்துவம், புனித இராயப்பர், சின்னப்பர், அதிகாரத்தாலும் நாம் அறிக்கையிட்டு எடுத்துரைக்க வரையறுத்துக் கூறுகின்றோம்” என்று கூறி திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் 1950ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் திகதி மரியாளின் விண்ணேற்பை விசுவாச உண்மையாக வெளியிட்டார். கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் விடுதலை என்றால் என்ன? என்று பார்க்கின்றபோது யார் ஆவியானவரால் இயக்கப்படுகின்றார்களோ அவர்களே சுதந்திரமானவர்கள், விடுதலை அடைந்தவர்கள், ஏனெனில் ஆவியானவர் எங்குண்டோ அங்கே உண்மையான சுதந்திரம் உண்டு (2 கொரி 3:17) மரியாள் ஆவியானவரால் முழுமையாக இயக்கப்பட்டாள், எனவே அவள் உண்மையான விடுதலை அடைந்தவள், அதை அனுபவித்தவள். மரியாள் எதிலிருந்து விடுதலை பெற்றாள்? ஆண்டவர் இயேசு இவ்வவனியிலே பிறக்க ஒரு பெண் தேவைப்பட்டாள். அவளும் பாவமே இல்லாதவளாக இருக்க வேண்டும். எனவே ஆவியானவரே அன்னையை அவளது பிறப்பிலிருந்து, பாவத்தினின்று விடுதலையளித்து பாதுகாத்து வந்தார். எனவேதான் இவனைப் புதிய ஏவாள் என்கிறோம். விண்ணேற்பு என்பது அமலோற்பவ அருட்கொடையால் நான், எனது, என்னுடைய என்ற தன்னல சிறையிலிருந்து விடுதலை பெற்ற மரியாள் கன்னிமை வரத்தால் திறந்த இதயத்தோடு இயேசுவை தன் உடலில், உள்ளத்தில் ஏற்ற மரியாள் முற்றிலும் இயேசுவின் உயிர்ப்பில் பங்கு பெறுகிறாள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆதியில் ஆண்டவரின் வாக்கை புறக்கணித்ததால் அவரோடு இந்த பேரின்ப பாக்கியத்தை இழந்தாள் ஏவாள். ஆனால் அகில உலகத்தையே அர்த்தமுள்ளதாக்கி அசைப்போட வைத்த “ஆகட்டும்” என்ற சொல்லாலே (லூக் 1:38) அவனிக்கு வெளிச்சம் கொடுத்த அன்னை மரியாள், இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால் மீட்பின் பணியில் முழுப்பங்கு ஆற்றியதால் இழந்து போன அந்த பேரின்ப வாழ்வு மீண்டும் மரியாளுக்கு ஏன் மானுடம் அனைத்திற்குமே கிடைத்தது என இயம்புவது விண்ணேற்பு.

தன் மகனைப் போலவே விண்ணகத்தில் விண்ணக ராணியாக வலம் வந்து கொண்டிருக்கிறார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்து, பன்னிரு விண்மீன்களை மணி மகுடமாகச்சூடி (தி.வெ 12:1) விண்ணகத்திலே விண்ணரசி என்ற பெயரைத் தாங்கி, மண்ணக மாந்தருக்காக, அவர்களின் நலனுக்காகத் தன் மகனிடம் பரிந்து பேசுபவராக இருந்து கொண்டு அநேக ஆயிரமாயிரம் புதுமைகளை இன்றும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவரின் உடலும், ஆன்மாவும் கல்லறையில் அழிவுற வேண்டும் என்பது நம் கடவுளின் சித்தமும் அல்ல, விருப்பமும் அல்ல. எனவே விண்ணகத்தில் தம் அருகிலேயே உயர்ந்த ஒரு அரியணையைக் கொடுத்திருக்கின்றார். மண்ணக வாழ்வில் மரியாள் இயேசுவோடு கொண்ட தோழமை இன்றும் விண்ணகத்தில் தொடர்கின்றது. இதன் நிமித்தமாக விசுவாசத்தின், வீரநங்கையாம் தாய் மரியாள் விண்ணக மண்ணக அரசியாக விளங்குகின்றார். தன்னையே முழுவதும் அர்ப்பணமாக்கி, இறைத்திட்டமே தனது வாழ்வாக்கி இறையன்பைப் பெற்றுத்தரும் அருட்சுணையாய் அவரை அண்டிவரும் அனைவருக்கும் அக்கறையும், பரிவும் கொண்டு பாசத்தோடு பரிந்துரைக்கின்றார். ஏனெனில் அவர் சொல்ல, அவர் கட்டளையிட அதே இடத்தில் அற்புதம் அரங்கேறும் என்பதை (யோவா1:1-11) கானாவூர் திருமண நிகழ்ச்சியின் வழியாக வேதாகமத்திலே மிகவும் வெட்ட வெளிச்சமாகப் புரிந்து கொள்ளலாம்.

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் தாய் புனித கன்னிமரியாள்



**‘அருள் நிறைந்தவளே வாழ்க ஆண்டவர் உம்முடனே’ (லூக் 1:28) என்ற வார்த்தைகள் அன்னையின் புனிதத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அன்னை மரியாள் இறைவனிடம் இருந்து பெற்ற மாபெரும் அழைப்பு இறைவனின் தாயாகும் அற்புத நிலை.**

இறைவன் தனது மீட்புத் திட்டத்தில் மரியாளை இறைமகனின் அன்னையாக முன் குறித்து வைத்தார். காலம் நிறைவுற்ற போது தமது மேலான திட்டத்தைக் கபிரியேல் தூதுர் மூலமாக அவளுக்கு வெளிப்படுத்தினார். அதற்கேற்ப இறைவன் அவளுக்கு கொடுத்ததுதான் தாய்மை என்னும் கொடை. ஒரு பெண்ணானவள் இந்த உலகில் அடையக்கூடிய பெரும் பேறு தாய்மைப் பேறாகும். அது ஒரு குழந்தைக்கும் அதன் தாய்க்கும் இடையிலான உறவை எடுத்துரைக்கின்றது. இதனால் தான் தாய்மைப்பேறு மிகவும் பொறுப்பு வாய்ந்தது. தனது பிள்ளையின் நலனில் அக்கறை கொண்டு, அதன் வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதில் தான் ஒரு தாயானவள் தனது தாய்மையின் முழுமையை அடைகின்றாள். இத்தகைய தாய்மையின் முழுமைக்கு இலக்கணம் என்றால் அது எமது அன்னை மரியாளே.



“அருள் நிறைந்தவளே வாழ்க ஆண்டவர் உம்முடனே” (லூக் 1:28) என்ற வார்த்தைகள் அன்னையின் புனிதத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அன்னை மரியாள் இறைவனிடம் இருந்து பெற்ற மாபெரும் அழைப்பு இறைவனின் தாயாகும் அற்புத நிலை. இறைவனின் அழைப்புக்கு மரியாளின் கீழ்ப்படிதல், தனக்கு வரப்போகும் அனைத்து துன்பங்களையும் எண்ணாது இறைவனே எல்லாம் என்று இறைவனில் அவள் கொண்ட நம்பிக்கை, பாலகனைப் பெற்றெடுத்த நாள் தொடக்கம் அவள் இம்மண்ணில் அனுபவித்த துன்பங்கள், அவற்றின் மத்தியிலும் இறைவனை தன்னில் வாழ்ந்த வாழ்வு என்பன மரியாளின் தாய்மையை எமக்கு விளக்குகின்றன. பரிசுத்த ஆவியின் வல்லமையால் தாய்மைப் பேற்றினை அடைந்த மரியாள் தனது மகனின் வாழ்வோடு தன்னை முற்றிலும் இணைத்து, தாய்மையின் முழுமையை நோக்கி முன்னேறினாள். தனது விருப்பு வெறுப்புக்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி மகனின் மீட்பு அலுவலில் தன்னை இணைத்து கொள்கிறாள். கிறிஸ்துவின் பிறப்பில் தொடங்கிய அவளது தாய்மை அவரது சிலுவை மரணம் வரை தொடர்ந்து, இன்றுவரை எம்முடன் பயணிக்கிறது. இன்று எமது சமுதாயத்தில், நாட்டில், உலகில் வாழும் அனைத்து பெண்களுக்கும் முன்னுதாரணமாக தாய்மை என்னும் உயரிய கொடையின் மணிமுடியாக திகழ்பவள் புனித கன்னிமரியாள் என்றால் மிகையாகாது.

அன்று இஸ்ராயேல் சமுதாயத்திலும் இஸ்ராயேல் மக்களை சுற்றி வாழ்ந்த மக்கள் மத்தியிலும் காணப்பட்ட பெண்ணடக்கு முறைகள், ஆணாதிக்கம் என்பவற்றின் மத்தியிலும் புரட்சிப் பூபாளம் இசைக்கும் வீர நங்கையாக, பெண்மைக்கும் தாய்மைக்கும் இலக்கணம் தந்தாள் அன்னை மரியாள். அன்று பல்வேறு அழிவுகளின் மத்தியிலும் அந்நிய ஆதிக்கங்களிலும் நின்று இஸ்ராயேல் மக்களைக் காத்த பெருமை அன்றைய வீரப் பெண்மணிகளான தெபோரா, யுதித், எஸ்தர் போன்றோரையும் சாரும். அவர்கள் வரிசையில் இஸ்ராயேல் மக்களுக்கு மட்டுமல்ல முழு உலகிற்கும், தாய்மைக்கு இலக்கணம் தந்தவர் கன்னிமரியாள். இவ்வுலகிற்கு மட்டுமல்ல விண்ணுலகிற்கும் அதைக் கொண்டு சென்றாள் அன்னை என்பதை அவளது மாண்புறு விண்ணேற்பு எமக்கு எடுத்துரைக்கிறது.

இன்று எமது சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றி சிந்திப்பது எமது பொறுப்பாகும். அழிவுக் கலாச்சாரத்தினால் வாழ்வியல் சீர்கேடுகள் எங்கும் மலிந்து காணப்படுகின்றன. பெற்ற அன்னையை விற்றுப் பிழைக்கும் மக்கள் எம்மத்தில் இல்லாமல் இல்லை. பெண்மையை நசுக்கி அவர்களின் பெலவீனத்தில் தங்கள் பலத்தை சோதிக்கும் ஆண்கள் மிக அதிகம். பெண்களின் கற்பைக் காத்து அவர்களின் மானத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த மகான்கள் வாழ்ந்த இம்மண்ணில் வாழும் நாம், தாய்மையின் மேன்மையை தன் வாழ்வால் காட்டிய எமது அன்னையின் பாதுகாவலில் கிறிஸ்தவர்கள் என்ற உரிமையோடு வாழுகின்ற நாம் எமது சமுதாயத்தில் நிலவுகின்ற பெண் அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுத்து, அனைத்து பெண்களையும் எமது தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும் அன்பு செய்து வாழும் மனப்பக்குவத்தை எம்மில் வளர்த்துக் கொள்வதோடு எமது வாழ்வால் பிறருக்கும் மாதிரி காட்ட முன்வரவேண்டும் என்பதே விண்ணில் இருக்கும் எம் அன்னையின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

புனித கன்னிமரியாள் இம்மண்ணோடும், மக்களோடும், மக்களின் ஏக்கங்களோடும் இரண்டற இணைந்தவர். இறையாட்சி இவ்வுலகில் உருவாக முற்றுமுழுதாக தன்னை அர்ப்பணித்தவர். பிளவுகளும் பிரிவுகளும் அகன்று, அநீதிகளும் அக்கிரமங்களும் மறைந்து, சமத்துவ சகோதரத்துவ சமுதாயம் விரைவில் மலரும் என்பதை நம்பிக்கையோடும், துணிச்சலோடும் முழக்கிமிட்டவர். அதற்காக இயேசுவோடு இணைந்து செயலாற்றியவர். இன்று விண்ணில் இருந்து எம்மெல்லோருக்காகவும் இறைவனிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அன்னையின் வாழ்வில் அவரது புனிதமும், இறைநம்பிக்கையும், கீழ்ப்படிவும், பொறுமையும் மேலாக அவரது வீரமும் அவரது மகிமைக்கு வலுச்சேர்த்தன. அன்னையின் அந்த நல்ல பண்புகளை ஒவ்வொரு தாய்மாரும் தம்மில் பிரதிபலிக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் அன்னை மரியாள் போல காட்சி தர வேண்டும். அன்னை மரியாள் தன் புனிதத்தால் புண்ணியம் சேர்த்தது போல இவ்வுலகப் பெண்களெல்லாம் அன்னையை முன்னுதாரணமாகக் கொண்டு தங்கள் வாழ்வால் இவ்வுலகை மாற்ற முன்வரவேண்டும். விண்ணக மண்ணக அரசியாக விளங்கும் அன்னையின் அன்புக் குழந்தையாக ஒவ்வொருவரும் மாற அனைவரும் ஒன்று திரண்டு அன்னையின் வழியில் இயேசுவோடு பயணிப்போம்.

**ஆக்கம்**
**அருட் தந்தை. யா. றமேஸ் அ.ம.தி**
**யாழ் மறைமாவட்டம்**

## மரியன்னையின் விழாக்களும், நம்பிக்கை செய்திகளும்

**மரியன்னையின் விழாக்கள் ஒவ்வொன்றும் நலம் தரும் நம்பிக்கைச் செய்திகள் பலவற்றை வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக.**

**தை 01ந் திகதி** தூய கன்னி மரியா இறைவனின் தாய், தாயின் உடனிருப்பையும் கடவுளின் பராமரிப்பினையும் உணரச் செய்கின்றது.

**மாசி 11ந் திகதி** தூய லூர்து அன்னை - நலம் தரும் இறைவனின் நம்பிக்கை

**பஙகுனி 25ந் திகதி** கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு - இறைவன் முன் தாழ்த்தினால் இறைவன் நம்மை உயர்த்துவார்.

**வைகாசி 13ந் திகதி** பற்றிமா அன்னை - செபம், தவம், ஆகிய இறை உதவியைப் பெற உதவும் இனி வழி முறைகள்.

**வைகாசி 31ந் திகதி** அன்னை மரியாள் எலிசபெ-த்தைச் சந்தித்தல் - பிறருக்குச் செய்யும் சேவை இறைவனுகே செய்வது

**ஆனி 28 திகதி** தூய மரியாவின் மாசற்ற இதயம் உளத்தூய்மை உடையோர் இறையரசை உரிமையாக்குவர்.

**ஆடி 16ந் திகதி** தூய கார்மேல் அன்னை - அன்னையின் மேல் அன்புடையோர் ஆண்டவர் மீது அன்புடையோரே.

**ஆவணி 15ந் திகதி** பனிமய அன்னை இறைவன் இரக்கம் உள்ளவர்.

**ஆவணி 22ந் திகதி** அரசியான தூய கன்னி மரியாள் வெற்றி கொள்வோருக்கு அரியணை உண்டு.

**புரட்டாதி 08ந் திகதி** தூய கன்னி மரியாளின் பிறப்பு - மீட்பின் கருவிகள் நாம்.

**புரட்டாதி 15ந் திகதி** தூய வியாகுல அன்னை - துன்பங்கள் நமக்கும் சொந்தம் அல்ல.

**ஐப்பசி 7ந் திகதி** தூய செபமாலை அன்னை - செபமே ஜெயம் தரும்.


**கார்த்திகை 21ந் திகதி** தூய கன்னி மரியாளைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் அர்ப்பண வாழ்வு ஆசி நிறை வாழ்வு.

**மார்கழி 08ந் திகதி** தூய கன்னி மரியாளின் அமல உற்பவம். தூயவரான இறைவனைப் பிரதிபலித்தல்.

**இத்தகைய விழாக்கள் ஒவ்வொன்றும் அன்னை என்றும் எம்மோடு இருக்கிறாள் என்பதை எமக்கு வெளிப்படுத்துகின்றன.**

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா



19

## வெனசுவேலாவில் பணி

ஆயருடைய அழைப்பை ஏற்று அன்னை தெரசா வெனசுவேலாவுக்கு வந்தார். தம் சகோதரிகள் பணிசெய்யப்போகும் பணித்தளங்களைத் தாம் முதலில் பார்க்க வேண்டுமல்லவா? காரக்காசின் பக்கத்தில் பார்க்கிசி மெட்டோ என்னும் விமான நிலையத்தில் அன்னை வந்திறங்கினார். அங்கிருந்து இரு இஸ்பானிய குருக்களுடன் தெரசா ஏழைமக்கள் வாழும் பகுதிகளைப் பார்வையிடச் சென்றார். தாமஸ், மனுவேல் ஆகிய இவ்விரு குருக்களுடன் அன்னை முதலில் நிக்ரோக்களின் குடியிருப்பாகிய "சோனா நீக்ரோ"வுக்குப் பயணமானார். அன்னையின் கண்ணில்பட்டதெல்லாம் மூங்கில் தட்டிகளாலும் களிமண்ணாலும் செய்த குடிசைகளே. அவர்களுடைய தோட்டங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டே போனார் அன்னை. மக்காச்சோளம் நிறைந்த வயல்கள், வாழைத்தோட்டங்கள், மாந்தோப்புக்கள், கரும்புத் தோட்டங்கள் மற்றும் தென்னந்தோப்புகள் நிறைந்த இக்கிராமங்கள் நல்ல வருவாய் தரக்கூடியவைதான். ஆனால், அவர்கள் கல்வியறிவில்லாத பாமர மக்கள். எளிதில் வியாபாரிகளால் ஏமாற்றப்படுகின்றனர். சேமிப்பு முறைகள் தெரியாதவர்கள்.

அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு அன்னையும் இரு குருக்களும் "சான் பிலிப்பே" என்னும் ஊருக்கு வந்தனர். இது பெரிய ஊர். இதற்குப் பக்கத்தில் கொகொரேதே என்னும் சிற்றூர் ஒன்று உள்ளது. அங்கே ஒரு கோவிலும், அதன் பக்கத்தில் குருக்கள் தங்குவதற்கான ஓர் இல்லமும் இருந்தன. அவற்றைப் பார்த்த அன்னை தம் சகோதரிகள் தங்கிப் பணிபுரிவதற்கான இடம் அதுதான் என உடனே நிச்சயம் செய்து கொண்டார். தம் சகோதரிகளை அங்கே அனுப்புவதாகக் கூறிவிட்டு அன்னை இந்தியாவுக்குத் திரும்பினார்.

அன்னையின் சகோதரிகள் முதல் முதலாக வெளிநாட்டிற்குப் புறப்படப் போகின்றனர் என்னும் செய்தி சகோதரிகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. இதுவரை ஆண்டுகள் பலவாக வெளிநாட்டிலிருந்துதான் குருக்களும், துறவறச் சகோதரர்களும் சகோதரிகளும் நம் நாட்டுக்குப் பணிபுரிய வந்து கொண்டிருந்தனர். இப்போது இதோ, அன்னை தெரசாவின் சகோதரிகள் இந்திய நாட்டிலிருந்து வெளிநாட்டுக்குச் செல்கின்றனர். இதில் அவர்கள் மகிழ்ச்சியும், பெருமையும் அடையலாமன்றோ?

ஆனால், இங்கிருந்து வெனசுவேலா போகிற-தென்றால் பயணத்துக்கே பணம் நிரம்பத் தேவைப்படுமே! இவ்வளவு பணத்தையும் கொடுப்பது யார்? இப்பிரச்சினை நிவர்த்தி செய்ய அமெரிக்காவில் ப்ருக்ளின் என்னுமிடத்-திலுள்ள மகளிர் மன்றத்தார் முன்வந்தனர். அவர்கள் அச்செலவை ஏற்றுக்கொண்டனர்.

அடுத்து, யாரை வெனசுவேலாவுக்கு அனுப்புகிறது என்னும் பிரச்சினை எழுந்தது. நல்ல அனுபவம் வாய்ந்த நான்கு பேரை அனுப்புவதென தெரசா முடிவு செய்தார். இந்நான்கு பேரும் இந்தியா-விலேயே பயிற்சி பெற்றவர்கள். சகோதரி நிர்மலா நேப்பாள நாட்டு இராணுவ அதிகாரி ஒருவரின் மகள். இவர் காட்னாவில் மகளிர் கல்லூரி ஒன்றில் பி.ஏ., பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருந்தார். அப்போது ஜுபிலி என்னும் பத்திரிகையில் அன்னை தெரசாவைப் பற்றியும் அவருடைய பணிகளைப் பற்றியும் எழுதப் பெற்றிருந்த கட்டுரையைப் படித்திருக்கிறார். பத்திரிகையில் கண்ட யாவும் உண்மைதானா என நேரிலேயே பார்த்து அறிய அவர் உடனே கல்கத்தாவுக்குப் புறப்பட்டுவிட்டார். பின்னர் 1958ல் தெரசாவின் சபையில் சேர்ந்து பணியாற்றி வந்தார்.

வெனசுவேலாவுக்குச் செல்ல இருந்த மற்றொருவர் சகோதரி பவுலின். இவர் வங்காள தேசத்தின் தலைநகரான டாக்காவில் பிறந்தவர். ஆயினும், வளர்ந்ததும் படித்ததும் கல்கத்தாவிலே. கோவாவிலுள்ள மடத்தின் தாயாராகப் பணிபுரிந்து வந்தார். வங்காளம், ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் கொங்கணி மொழிகள் தெரிந்தவர். இஸ்பானிய மொழியையும் கற்றுக்கொண்டு வெனசுவேலாவுக்குச் செல்லத் தயாராக இருந்தார்.

சகோதரி ஜஸ்டினும் சகோதரி ரொசாரியோவும் சோட்டா நாகபுரியிலுள்ள ஒராவோன் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒராவோன் தான் அவர்களது தாய்மொழி. அத்தோடு ஹிந்தியையும், வங்காள மொழியையும் கற்றுக்கொண்டார்கள். இப்போது வெனசுவேலா செல்வதற்கு ஆயத்தமாக இஸ்பானிய மொழியைக் கற்று வந்தனர்.

இவர்கள் நால்வரையும் அன்னை தெரசா



வெனசுவேலாவுக்கு முதலில் அனுப்பி வைத்தார். மூன்று மாதங்களுக்குப் பின் வேறு இரு சகோதரிகளையும் அங்கே அனுப்பினார். இவர்களில் ஒருவர் சகோதரி பால், மங்களமான மங்களுரைச் சேர்ந்த இவர் ஆங்கிலம், மற்றும் பிரஞ்சு மொழிகளை நன்கு கற்றறிந்தவர். மற்றவர் சகோதரி டொலோரஸ், கேரளா மாநிலத்தைச் சேர்ந்தவர். கேரளாவில் உயர்நிலைப்பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டிருக்கும் வேளையில் கல்கத்தாவின் உதவி ஆயராக இருந்துவந்த மேதகு பிக்காச்சி ஆண்டகை அப்பள்ளி மாணவியருக்கு அன்னை தெரசாவைப் பற்றி உரை நிகழ்த்தியிருக்கிறார். இதைக்கேட்ட மாணவி மேரிக்குட்டிக்கும் தெரசாவின் சபையில் சேர்ந்துகொண்டு தொண்டு புரியும் எண்ணம் உதயமானது. அவர் இச்சபையில் சேர்ந்து டொலோரஸ் என்னும் பெயர் பூண்டிருக்கிறார். இவருக்கு வெனசுவேலா மிகவும் பிடித்திருந்தது. காரணம், தென்னை மரங்களுடனும் மாமரங்களுடனும் பலவகை வாழை மரங்களுடனும் காட்சி அளித்த வெனசுவேலா இவருக்கு மற்றொரு கேரளாவாகவே தென்பட்டது.

இச்சகோதரிகள் கொகொரோதே என்னும் சிற்றூருக்குச் சென்று அங்கிருந்த கோவிலைத் தங்களது பணி மையமாக்கிக் கொண்டனர். கோவிலின் பக்கத்தில் பாழடைந்து கிடந்த குருக்கள் இல்லத்தை தங்களது மடமாக மாற்றி பணிபுரியலாயினர். உள்ளூர் பெண்களுக்கு ஆங்கிலம் கற்றுத் தந்தனர். அவர்கள் சகோதரிகளுக்கு வெனசுவேலாவில் பேசப்படும் கலப்பட இஸ்பானிய மொழியைக் கற்றுக் கொடுத்தனர். இம்மொழியைக் கற்ற சகோதரிகள் ஊர்களுக்குச் சென்று மக்களுக்கு மறைக்கல்வி வகுப்புக்கள் நடத்தத் தொடங்கினர். வெகுவிரைவில் இச்சகோதரிகள் மக்களோடு மக்களாக மாறிவிட்டனர்.

ஒருநாள் அச்சகோதரிகளும் அன்னை தெரசாவும் சேர்ந்து "தாரியா" என்னும் கிராமத்துக்குள் சென்றனர். வீடுவீடாகச் சென்று மக்களுடைய குறைகளை நேரில் கேட்டு அறிந்துகொண்டனர். இதோ, அன்னை ஒரு வீட்டுக்குள் நுழைகிறார். அங்கே உட்காருவதற்கு எவ்வித வசதியுமில்லை. நாற்காலி, மேசை, கட்டில் எதுவுமே இல்லாத வீடுகள் தான் அவை. அவ்வீட்டின் தாய் வந்து சகோதரிகளைச் சந்திக்கின்றாள். "என் கணவரால் வேலை செய்ய முடியவில்லை. காலில் வீக்கம் வந்து இதோ, பாயும் படுக்கையுமாகப் படுத்திருக்கிறார்". அன்னை அந்நோயாளியின் காலைப் பரிசோதித்துப் பார்க்கிறார். "இது யானைக்கால் நோய்" என்கிறார்.

அதற்குப் பின் வீட்டுக்குள் நுழைந்து சுற்றுமுற்றும் பார்க்கிறார். அங்கே ஒரு கழுதை, இங்கே ஒரு பன்றிக்குட்டி, அந்த மூலையில் ஒரு நாய், இந்த மூலையில் ஒரு குழந்தை நடக்க முடியாமல் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. "எனக்கு நான்கு பிள்ளைகள். இவள்தாள் ரோஸ்மேரி" சகோதரி நிர்மலா உள்ளே சென்று அக்குழந்தையைக் கழுதை, பன்றி, கோழி, நாய் இவற்றின் மத்தியிலிருந்து தூக்கி சூரிய ஒளிக்குக் கொண்டு வருகிறார். நல்ல அழகான தோற்றம். அகன்ற கருவிழிகள், கால்கள் இரண்டும் காய்ந்த குச்சிகள் போல் சூம்பிப் போயிருந்தன.

"இவள் எப்போதாவது கால் ஊன்றி நடந்ததுண்டா?" அன்னை வினவினார். "ஆம் மற்ற குழந்தைகளைப் போல் இவளும் நடந்து கொண்டிருந்தவள்தான். இடையில் இவளுக்கு ஆஸ்தமா கண்டது. மருத்துவமனைக்குத் தூக்கச் சென்றோம். மருந்து எல்லாம் கொடுத்தார்கள். ஆனால் அவளால் நடக்கவே முடியாமற் போயிற்று. இப்போது அவளுக்கு வயது ஆறு ஆகிறது" என்றாள் அத்தாய்.

அக்குழந்தைக்கு இளம்பிள்ளைவாதம் பிடித்திருந்ததை அந்தத் தாய் அறிவாளா? "அவளையும் தூக்கிக்கொண்டு கோவிலுக்கு வருகிறதுதானே. நாங்கள் மருந்து கொடுப்போமே" "குழந்தைகளுக்குத் துணிமணி எதுவுமே இல்லை. என் கணவர் குணமடைந்த பிற்பாடு...."

"அடுத்த தடவை நாங்கள் வரும்போது உன் குழந்தைக்கு மருந்தும் துணிமணியும் நாங்களே கொண்டுவருகிறோம். நாங்கள் வரட்டுமா, ரும்போ" எனச் சகோதரி நிர்மலா அக்குழந்தையிடம் கேட்டார். அதற்கு அதன் தாய் "ரும்போ என்கிறது என் பெயர். குழந்தைகளெல்லாம் ரும்பிட்டோக்கள். எனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை. அதனாலேதான் குழந்தைகளுக்கு என் பெயரை வைத்திருக்கிறோம்" என்றாள்.

அங்கிருந்து புறப்பட்டு பல்மரேகோ என்னும் அடுத்த ஊரை அடைந்தனர் தெரசாவும் அவரது சகோதரிகளும். அந்த ஊர் மக்கள் கோவிலில் ஒன்று கூடினார்கள். அன்னை அவர்களுக்கு ஆங்கிலத்தில் போதித்தார். அதைச் சகோதரி நிர்மலா மொழிபெயர்த்தார். கோவிலை விட்டு வெளியே வந்ததும் அம்மக்கள், "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என வினவினர். "நாங்கள் இந்தியாவிலிருந்து வருகிறோம்" "இந்தியாவா? அது எங்கே இருக்கிறது?" என்றனர்.

அதன் பின்னர் வெனசுவேலாவின் தலைநகராகிய காரக்காசில் ஏழைமக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என அறிய விரும்பினார் அன்னை. காரக்காஸ் மலை அடிவாரத்திலுள்ள ஒரு நகர். அந்த மலை அடிவாரத்தில் ஆறு பெரிய கட்டடங்கள் எழுப்பப் பெற்றிருக்கின்றன. அவை யாவும் ஆறு மாடிக் கட்டடங்கள். அவை "பிளாக்" என அழைக்கப்படுகின்றன. சற்று தூரத்தில் பதினாறு மாடிகளைக் கொண்ட சில கட்டடங்களும் தெரிந்தன. அவை "சூப்பர் ப்ளாக்" என அழைக்கப்படுகின்றன. ப்ளாக்குகளுக்கும் சூப்பர் ப்ளாக்குகளுக்கும் என்ன வேறுபாடு? ப்ளாக்குகளில் வாழ்கின்றவர்கள் செல்வந்தர்கள். தண்ணீர், மின்சாரம், எரிவாயு போன்ற எல்லா வசதிகளும் ப்ளாக்குகளில் உள்ளன.

ஏழைகள் வாழும் கட்டடங்கள்தான் சூப்பர் ப்ளாக்குள். இங்கே போய்ப் பார்த்தால் அறைகள் யாவும் சுத்தமும் சுகாதாரமற்ற சூழலில் வாழும் இம்மக்கள் பலவிதமான நோய்களுக்கு இலக்காகி இறக்கின்றனர். இந்த ஏழை மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் தங்கள் கடமை என எண்ணிக்கொண்டு தெரசாவும் சகோதரிகளும் கொகொரோதேக்குத் திரும்பினர்.

அங்கிருந்து அன்னை உரோம் நோக்கிப் பயணமானார். அங்கிருக்கும்போது அவருடைய சகோதரர் லாசரைச் சந்திக்க நேர்ந்தது. தெரசா தமது தாயார் டிரானாவையும் சகோதரி ஆஜேயையும் பற்றி லாசரிடம் விசாரித்தார். இருவரும் அல்பேனியாவில் பொதுவுடைமை அரசின் ஆட்சியில்தான் இருக்கின்றனர் என்று லாசரிடமிருந்து அன்னை தெரிந்து கொண்டார். அங்கு செல்ல அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. டிரானாவுக்கு ஒரே ஓர் ஆசை. தான் இறப்பதற்கு முன் ஒரு முறை தெரசாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று. ஆனால், தெரசாவால் அவ்விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் போயிற்று. எவ்வளவு முயன்றும் டிரானாவும் ஆஜேயும் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இரண்டு ஆண்டுகளில் டிரானா தெரசாவின் முகத்தைப் பார்க்காமலே கண்களை மூடிவிட்டாள்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது ஏதோ துறவறத்திற்கும் குருத்துவத்திற்கும் மட்டும்தான் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கின்றது. ஆனால் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியில் இல்லறத்தாருக்கும் பங்கு உண்டு என்பதை அறியாதிருக்கின்றோம்.

**இல்லறத்தாரின் பங்கு என்ன?**

கடமை என்ன? நாம் நமது பணித்தளங்களிலும், குடும்பங்களிலும், நமது சொல், சிந்தனை, செபங்கள் மூலமாகக் கூட நற்செய்தியை அறிவிக்கலாம். அதெப்படி?

- நமது சொல் பிறரை போற்றுகின்றதா? தூற்றுகின்றதா? போற்றினால் அது ஒரு நற்செய்தி அறிவிப்புப் பணியே



# நற்செய்தி அறிவிப்புப் பணி

- நமது சொல் பிறரை வாழ்த்துகின்றதா? அல்லது வீழ்த்துகின்றதா? வாழ்த்தினால் அது ஒரு நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது சொல் பிறருக்குச் சாதகமாக அமைகின்றதா? பாதகமாக அமைகின்றதா? சாதகமானால் அது ஒரு நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது சிந்தனை பிறரை உயர்த்துகின்றதா? தாழ்த்துகின்றதா? உயர்த்தினால் அது ஒரு நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது சொல் உருக்கொடுக்கிறதா? அல்லது உருக்கி வைக்கிறதா? உருக்கொடுத்தால் அது ஒரு நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது சொல் ரோஜாவாய் மணக்கிறதா? முள்ளாய் குத்துகின்றதா? ரோஜாவாய் மணந்தால் அது ஒரு நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துகிறதா? சீற்றத்தை ஏற்படுத்துகிறதா? மாற்றத்தை ஏற்படுத்தினால் அதுவும் நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது பேச்சு அன்பில் கனிகிறதா? பகைமையில் காய்கிறதா? அன்பில் கனிந்தால் அதுவும் நற்செய்தி அறிவிப்புப் பணியே
- நமது பேச்சு பிறருக்கு இதமான உணர்வை ஏற்படுத்துகிறதா? அல்லது இறுக்கமான உணர்வை ஏற்படுத்துகிறதா? இதமான உணர்வை ஏற்படுத்தினால் அதுவும் நற்செய்தி அறிவிப்புப் பணியே

**நாம் செய்யும் நல்ல செயல்கள் தாம் நாம் சொல்லாமலேயே நமக்குப் பின்னால் நம்மைப் பற்றி சொல்லிக் கொண்டேயிருக்கும்.**






**தலைமைத்துவத்திற்கான இலக்கணம்**

தலைவர் என்பதை ஆங்கிலத்தில் Leader என்று சொல்லுவார்கள்.

L - leading வழிநடத்தல்
E - Education கற்றறிவு, பட்டறிவு
A - Active சுறுசுறுப்பு
D - Dedication அர்ப்பணம்
E - Enthusiasm ஆர்வம்
R - Respect மரியாதை

**கருணை இருந்தால்**
**வள்ளலாகலாம்,**
**கடமை இருந்தால் வீரராகலாம்,**
**பொறுமை இருந்தால்**
**மனிதனாகலாம்**
**மூன்றும் இருந்தால்**
**தலைவராகலாம்.**

**இவை மூன்றும் இருந்தால்**
**தலைவனாகலாம்.**



# மன அமைதிக்கான வழி

எந்த ஒரு பொருளையும் நாம் மனதில் சிந்திக்கச் சிந்திக்க அதனுடைய தன்மையை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும். வாழ்வில் ஏன் துன்பங்கள் வருகின்றன? நல்ல சிந்தனைகளையே ஏற்படுத்திக் கொண்டு மனிதரால் தன் வாழ்நாள் முழுவதும் இன்பமாக வாழ முடியாதா? என்பதைச் சிந்திக்க சிந்திக்க விடையும் விடுதலையும் நமக்குக் கிடைக்கும்.

மகிழ்வு நிறைந்த வாழ்வு வாழ எத்தனையோ பெரியோர்கள் பல நல்வழிகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்களின் கூற்றுக்களில் இடம் பெற்றிருப்பதெல்லாம், "ஆசையே வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூல காரணம். ஆசையை ஒழித்துதான் துன்பமில்லா வாழ்வைப் பெறமுடியும்" இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்படியில் கணனி கால விஞ்ஞானத்தின் வேகமான வளர்ச்சியில் ஆசையில்லாத வாழ்வு சாத்தியமா?

எத்தனையோ வகையான எண்ணங்களை அனுபவித்திருக்கிறோம். ஆசை என்பது ஒன்றின் மீதான பற்றினால் (விருப்பம்) மனிதன் ஓர் உணர்ச்சிவயப்பட்ட நிலையிலே தோன்றுகின்ற ஒருவகை எண்ணமே! மனதில் தோன்றுகின்ற எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. நாம் சிறிது விழிப்பு நிலை தவறினால்கூட அது நம்மை ஏமாற்றிவிட்டு, அசுத்தம் நோக்கிச் செல்ல முயலும். அவற்றை நாம்தான் கவனமாக இருந்து தவிர்க்கவேண்டும். இல்லையேல் அது பிறர் மனதையோ, உடலையோ பாதித்து நமக்கும் அவருக்கும், பிறருக்கும் துன்பத்தைத் தோற்றுவித்துவிடும். தீய எண்ணங்கள் தோன்றாமல் இருக்க நல்ல எண்ணங்களை நாமே விரும்பி மனதில் ஏற்றுத் தொடர்ந்து இயங்கவைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

ஒரு குழந்தையைக் காட்டிக் "கள்ளங்கபடமற்ற மனசுப்பா" என்று எத்தனையோ பேர் சொல்லக் காண்கின்றோம். நாமும் ஒருநாள் இந்தக் குழந்தையைப் போல்தானே கள்ளம், கபடமற்ற, நிறைவான மனதுடனே இருந்திருப்போம். இன்று ஏன்? நம் மனதில் இத்தனை கவலைகள்! விருப்பு வெறுப்பு உணர்வுகள்!

ஒரு மனிதர் அடிக்கடி கோபமும் கவலையும் பட்டுக்கொண்டிருக்கிறார். அப்போது அவரையும் அறியாமல் உடற்செயலியல் (Physiological) மாற்றங்கள் மூலம் அவரின் வாழ்நாளில் பெரும் பகுதி அழிகின்றது. நாம்கூட எத்தனையோ செயல்களில் கோபம் கொண்டிருந்திருப்போம். அந்தச் செயலின் முடிவு பெரும்பாலும் தோல்வியிலேயே முடிவுற்றிருக்கும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க, காவாக்கால் தன்னையே கொல்லும் சினம். (குறள் 305)

ஒருவர் மீது நாம் கோபப்படுகின்றோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நாம் மட்டும் பாதிப்படைவதோடுமில்லாமல் பிறர் மனதையும் புண்படச் செய்கிறோம். இருப்பினும் மனவியாதிகள், இருதயநோய்கள், உயர் இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, கண்நோய்கள், வயிற்றுப் புண் என இங்குப் பட்டியலிட முடியாத எத்தனையோ நோய்களின் மூல காரணமாகக் கோபம் இருப்பதை நாம் அறிகிறோம்.

கவலை என்பது, செயல்கள் நமக்குச் சாதகமாக அமையாதபோதும், உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பிறர்மீது கோபப்பட்டு முடிந்த பின்பும் தான் பெரும்பாலும் ஏற்படுகிறது. இந்தச் செயல்கள் எல்லாம் நமக்குச் சாதகமாக அமைந்தால் நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? நாம் ஏன் பிறர்மீது கோபப்பட வேண்டும்? இங்குதான் உலகியல் செயல்களுக்கு மூலகாரணமான "ஆசை" முக்கியபங்கு வகிக்கிறது. நம் மனதில் ஓர் எண்ணம் உண்டாகுமேயானால் அதை உடனேயே ஆராய்ந்து உணரவேண்டும். எண்ணங்களை நம் மனதின் இயக்கத்திற்கு விட்டுவிட்டால்...

15ம் பக்கம்




## ஆண்டவரின் தோற்றமாற்ற விழா
## (பொதுக்காலம் – 18ஆம் ஞாயிறு) (06.08.2017)

**வாசக விளக்கம்:**

**உலகனைத்தையும் ஆளும் உன்னதராம் ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்**

இன்று பொதுக்காலத்தின் 18வது ஞாயிறாகும். இன்று திருச்சபையானது ஆண்டவரின் தோற்ற மாற்ற விழாவினை கொண்டாடுகின்றது. இதில் மூனறு முக்கிய நிகழ்வுகள் உள்ளன. 1. இயேசுவின் தோற்ற மாற்றம் 2. மோசேயும் எலியாவும் இயேசுவிடம் பேசுதல் 3) மேகத்தில் இருந்து ஒலித்த தந்தையாம் இறைவனின் குரல். இந்நிகழ்வுகளில் பழைய ஏற்பாட்டின் இறையனுபவங்கள் பொதிந்துள்ளன. மோயீசனுக்கு இறையனுபவம் கிடைத்தது, சீனாய் மலையில் எலியாவின் இறையனுபவம் குறித்து நாம் காண்கின்றோம். இயேசு தம் இறைத்தன்மையை வெளிப்படுத்தியது ஒரு மலையில். அது அவரது உயிர்ப்பிற்கு ஒரு முன்னோட்டமாக அமைந்திருந்தது. இயேசுவுடன் உரையாடிய மோசேயும் எலியாவும் முறையே திருச்சட்டத்தையும், இறைவாக்குகளையும் பிரதிபலிக்கிறார்கள். இறைத்தந்தையின் வாக்கு இயேசுவை அவரது அன்பார்ந்த மகனாக அறிமுகப்படுத்தி அவருக்கு நாம் செவிசாய்க்க வேண்டும் என்ற கட்டளையையும் தருகிறது. ஆனால் பேதுரு அங்கேயே தங்கிவிட விரும்புகின்றார். ஆனால் இயேசுவோ சிலுவையும், பாடுகளும் இல்லாது உயிர்ப்பின் அனுபவம் இல்லை என்பதை உணர்த்துகின்றார். இயேசுவின் இறையனுபவத்தைப் பெற்றுள்ள நாமும் நம் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். தந்தையாகிய இறைவனின் கட்டளைகளை ஏற்று இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிசாய்ப்பவர்களாக வாழ அருள்வேண்டி இப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**தானியேல் 7: 9–10,13–14**

அவருடைய ஆடை வெண்பனி போல இருந்தது

**பதிலுரைப் பாடல்**

உலகனைத்தையும் ஆளும் உன்னதராம் ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்.

**2 பேதுரு 1: 16–19**

விண்ணிலிருந்து வந்த இக்குரலொலியை நாங்களே கேட்டோம்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி**

அல்லேலூயா, அல்லேலூயா! என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத்தேயு 17: 1-9

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

என் அன்பார்ந்த மகன் இவரே என இயேசுவை எமக்கு அறிமுகம் செய்திடும் இறைவா, உம்மை எங்களுக்கு வழங்கிட நீர் அளித்துள்ள திருச்சபையையும் அதனை வழிநடத்தும் தலைவர்களையும், பணி புரியும் ஒவ்வொருவரையும் உமது ஆவியினால் நிறைத்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பின் தந்தையே இறைவா உண்மையான இறையனுபவத்தைப் பறைசாற்றிய பேதுவைப் போன்று நாங்களும், போலி புகழ், பெருமைக்கு ஆசைப்பட்டு போலியான விடயங்களில் அடிமைப்பட்டு விடாமல், எங்கள் சொல், செயல் சிந்தனைகளால் உம்மைப் பறைசாற்றி உம் வார்த்தையை வாழ்வாக்கி வாழ்ந்திட தேவையான ஆவியின் அருள் வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று

உருமாற்றத்தின் தேவனே, உம்மை இன்னும் அறிந்து கொள்ளாத எல்லா மக்களும் நீரே உண்மையான இறைவன் என்பதை அறிந்து கொள்ள உதவி செய்யும். அவர்களும் உம்மை ஏற்றுக் கொண்டு, நித்திய பேரின்ப வீட்டை வந்தடையவும், இவ்வுலகில் எமக்கு வரும் துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் சோர்ந்து போகாமல், உம்மை பின்பற்றி வாழ்ந்திடவும் தேவையான வரங்களை பொழிந்திட வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 19வது ஞாயிறு
## (13.08.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 19வது ஞாயிறாகிய இன்று, இறைவனுக்கு நன்றிப் பலி செலுத்த ஒன்று கூடிவந்துள்ள அன்பு நெஞ்சங்களே! இன்றைய இறைவார்த்தைகளானது எமக்கு அப்பம் பலுகுதல், கடல் சீற்றத்தை அடக்குதல், கெனசரேத்தில் நலமளித்தல், ஆகியவற்றின் வழியாக இயேசு எவ்வாறு நம்பிக்கையோடும், உறுதியோடும் செயலாற்றுகின்றார் என்பது பற்றி எடுத்துக் கூறுவதோடு, இவற்றை காணும் போது மக்களும் இயேசுவை அறிந்து நம்பிக்கைக்கொண்டு நலம் பெறுகின்றனர் என்பதையும், எமக்கு வெளிப்படுத்துகின்றது. அத்தோடு இயேசுவோடு இருக்கும் சீடர்கள் நம்பிக்கை அற்று இருப்பதைக் கண்டு அவர்களில் நம்பிக்கைய ஏற்படுத்த தம் வல்ல செயல்களின் வழியாக தன் இறைத்தன்மையை வெளிப்படுத்தி அவர்களில் விசுவாசம் ஏற்படச் செய்வதையும் நாம் காண்கின்றோம். எனவே நாமும் எம் வாழ்க்கைப் பயணத்தில் வரும் அனைத்து விதமான சவால்களுக்கு நம்பிக்கையோடு முகங்கொடுத்து இறைவனைப் பற்றிப் பிடித்து வாழ்ந்திடத் தேவையான இறையருளை இத்திருப்பலியின் வழியாக வேண்டிநிற்போம்.

**முதல் வாசகம் : 1 அரசர்கள் 19: 9– 11–13ய**

என் திருமுன் வந்து நில்.

**பதிலுரைப் பாடல்**

ஆண்டவரே, உம் பேரன்பையும் மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

**இரண்டாம் வாசகம் : உரோமையர் 9: 1–5**

என் சகோதரர் சகோதரிகளுக்கு மீட்பு கிடைப்பதற்காக நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகக்கூட விரும்பியிருப்பேன்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி**

அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன். என் நெஞ்சம் காத்திருக்கின்றது. அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 14: 22–33**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பின் இறைவா இறைவாக்கினர் எலியாவை அழைத்ததுபோல உம் மறையுடலாம், திருச்சபையை ஆண்டிட நீர் அழைத்துள்ள தலைவர்கள் தங்கள் அழைப்பின் மாண்பினை உணர்ந்து பணி செய்து இறைமக்களை உம் பாதையில் நடத்திச் சென்றிடும் ஞானத்தை அருளிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்லாவற்றிற்கும் மேலான இறைதந்தையே, எம்மை உம் அன்புப்பிள்ளைகளாக தேர்ந்துக்கொண்டமைக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். இந்த அழைப்பினை ஏற்று உமக்கு சான்று பகரும் வாழ்க்கை வாழ்ந்து இறுதிவரை உம்மில் நிலைத்திட ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பின் இறைவா எங்கள் வாழ்வில் ஏற்படும் அனைத்து விதமான சிக்கல்கள், குழப்பங்கள், நோய் நொடிகள் இழப்புகளில் நாங்கள் பேரச்சம் கொண்டு நிலைத்தடுமாறி விழுந்துவிடாமல், உம்மில் நம்பிக்கைக் கொண்டு நீர் எங்கள் அருகில் இருக்கின்றீர் என விசுவசித்து வாழ்ந்திட ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்

## சுதேச குருக்களே... துறவியரே...

## என்னுடையவனாகி எனது அடையாளமாயிரு

பரிசுத்த குருக்களை பாருக்களித்திட்ட
பரமனே இறைவா
பாரெங்கும் உன்நற்செய்தியை பரப்பிட அழைத்தவனே
உம் பாதம் பணிந்து நாளெல்லாம் பணிபுரிய
பகலவனே பகிருவாய் உம்
அருள் வரங்களை இறைவா

என்னுடையவனாகி எனது அடையாளமாயிரு
என இயம்பியனே,
எந்நாளும் உன்னுடையவனாய், உனக்குரியவனாய்
என்றும் வாழ உம் குருக்களை வழிநடத்திடுவாய்
ஏற்றிடுவாய் எம் மன்றாட்டினை காத்திடுவாய்
காவலனாய் காலமெல்லாம்

புனிதத்தின் நறுமணம் புவியெங்கும் பரம்பிட
பூளோக இராச்சியத்தில் புனிதர்கள் சேர்க்கப்பட
புண்ணியங்கள் விதைக்கப்பட்டு, புவியில்
அழைத்தல்கள் பெருகிட
புண்ணியவனே, பொலிவாய் உம் அருள்கொடைகளை
சேர்த்திடுவாய் இளம் நெஞ்சங்களை உன்பால் இறைவா!

இறை இயேசுவின் இறைபணி
இகமெங்கும் தொடர்ந்தாற்றப்பட
இருள் சூழ்ந்த உலகில் அருள் விளக்கு ஏற்றப்பட
இறை அழைத்தலை ஏற்ற திருப்பணியாளர்களை
திடப்படுத்தம்பட
இறைவா இன்னருளை இகத்தினில் வழங்கி உம்
குருக்களை காத்திடுவாய்

திருச்சபையின் திருத்தூதர்களாக இறையரசை
நாடெல்லாம் பரப்பிட
திருவருட்சாதனம் மூலம் இறையுயிரை
இறைமக்களுக்கு ஊட்ட
திரிபோல் எரிந்திடு தியாகிகளாய் தினமும் ஒளிர
தீமையெனும் பாவ நோய் தீர்க்கும் மருத்துவராய்
உம் குருக்கள் மிளிர
தினமும் அவர்களை வழுநடத்துவாய் இறைவா!

அன்பின் சாட்சிகளாய் அருட்திரு ஆவியின்
வரங்களைப் பெற்று
அகிலமெங்கும் ஆண்டவர் இயேசுவின்
நற்தூதுவர்களாய் திகழ்ந்து
அனைத்து நெஞ்சங்களையும், ஒன்றிணைத்து வழிநடத்தி
அகத்தில் என்றும் பேரொளியேற்றப்பட்டு நற்சாட்சிகளாய்
திகழ உம் குருக்களை காத்திடுவாய் இறைவா!

ஆண்டவரே பரிசுத்த குருக்களை நீர் உருவாக்கும்
அருள் வாழ்வில் எம் குருக்கள் வாழ அருள் கூடும்
அறுவடையின் ஆண்டவரே உம்
அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு
அறுவடைக்கு தேவையான வேலையாட்களை
அறுவடைக்கு அனுப்பும் ஆண்டவரே



அழைத்தல்கள் பெருகிட தேவை அழைத்தல்கள்
தினமும் பெருகி
அநேக உள்ளங்கள் அழைக்கப்பட்ட
அனுதினமும் வேண்டுவோம்
இறையரசின் விழுமியங்கள் இகமெங்கும்
வளர்க்கப்பட இறை இயேசுவின்
மைந்தர்களாய் அழைக்கப்பட்டவர்களாய்
பிரமாணிக்கமாய் வாழ வேண்டுவோம்

குருத்துவத்தின் மேன்மை குவலமெங்கும் போற்றப்பட
குருத்துவ அழைத்தல்கள் குவலமெங்கும் பெருகிட
கோமகனே இறைவா இறையருள் புரிவாய்

**ஆக்கம்**

**அருட்சகோதரி டெலா றோஸ் அ.கா**



# 'டெங்கு' உயிர் கொல்லி நோய்

எம் தாய்திருநாட்டில் இன்று பரவலாக பேசப்படும் ஒரு விடயம் தான் "டெங்கு" என்ற நோய்க்கொல்லி பற்றி, குறிப்பாக இந்த டெங்கு என்ற வைரஸ் காய்ச்சலினால் இன்றளவும் பல மக்கள் தங்களது உயிரை ஈந்துள்ளனர். இந்த நான்கு ஆண்டு காலத்திற்குள் மட்டும் கிட்டத்தட்ட 260ற்கும் மேற்பட்ட பெரியவர்கள், சிறுவர்கள், இளம்வயதினர் இறந்துள்ளதாக இலங்கை சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது. அத்தோடு இந்நோயினால் 89,885 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வழங்கியுள்ளது.

இந்த ஆறு மாத காலத்திற்குள் எமது திருநாடு பல அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளதை நாம் அறிந்துள்ளோம். பாரிய மழை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு அத்தோடு இணைந்து மீதொடமுல்லை குப்பை மேடு வெடித்தது போன்ற நிகழ்வினால் மக்கள் வாழ்வினை இழந்து, பலர் அகதிகளாக்கப்பட்டு இன்றளவும் இதற்கான தீர்வுகளின்றி வாழும் சூழலில், இத்தினங்களில் கொழும்பு, நீர்கொழும்பு, போன்ற பொது வைத்தியசாலைகளில் டெங்குவினால் பீடிக்கப்பட்டு பலர் சிகிச்சை பெற்றுவருகின்றமையை நாம் நாளாந்தம் அறிகின்றோம். இந்த டெங்கு நோயினால் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு மத்திய, ஊவா, சப்ரகமுவ, தெற்கு, மேற்கு வடமேற்கு மாகாணங்களில் பலர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதில் அதிகமான மரணம் நிகழ்ந்துள்ளது மேல் மாகாணத்தில் ஆகும். குறிப்பாக இது நாம் வாழ்கின்ற மாகாணம். இந்த டெங்கு நோயைப் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் அறிந்து கொள்வது சாலவும் சிறந்தது. பல கட்டுரைகளை ஆய்ந்த பின், பல அறிக்கைகளை வாசித்த பின் இந்த நோய் பற்றி நான் அறிந்தவற்றை உங்களோடும் பகிர்ந்து கொள்கின்றேன்.

### அ] டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?
(Dengue Fever)

டெங்கு காய்ச்சல் அல்லது டெங்கி காய்ச்சல் என்பது டெங்கு வைரசால் ஏற்படும் ஒரு வகை தொற்று நோயாகும். இது கொசுக்களால் பரவுகின்றது. ஏடஸ் (Ades) என்ற ஒரு வகை கொசுக்களால் குறிப்பாக ஏடஸ் எஜிப்டி (Aedes Aegpti) என்ற வகை கொசுவால் டெங்கு நோய் பரவுகிறது. இது மற்ற கொசுக்களை போல் சாக்கடை நீரில் அல்லாமல், சுத்தமான நீரிலே வளரக்கூடிய தன்மையைக் கொண்டது. இது பெண் கொசுக்களால் பரவுகிறது. இரவு நேரங்களில் அல்லாமல் பகல் நேரங்களில் தான் மனிதர்களை கடிக்கின்றது. பெண் கொசுவானது, தனது முட்டை ஆரோக்கியமாக இருக்க நம் இரத்தத்திலுள்ள புரதத்தை உறிஞ்சி குடிக்கின்றது. அது நம்மை கடித்து இரத்தத்தை உறிஞ்சும்போது அதன் வயிற்றிலுள்ள வைரஸ் நம் உடலில் புகுந்து ஒரு கடியிலேயே நமக்கு வைரஸ் நோயை உண்டாக்குகின்றது.

### ஆ] இந்நோய் எங்கெல்லாம் பரவுகிறது?

வடக்கு ஆர்ஜென்டினா, வடக்கு அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பார்படோஸ், பொலிவியா, பெலிஸ், பிரேசில், கம்போடியா, கொலம்பியா, கியூபா, கௌதமாலா, குயான இந்தியா, இந்தோனேஷியா, இலங்கைப் போன்ற வறண்ட உலர் வெப்ப வலய நாடுகளில் இந்த நோய் பெரும்பாலும் பரவுகிறது.

### இ] இக்கொசுவின் வாழ்நாட்கள்.

ஏடஸ் கொசுவின் வாழ்நாள் இரண்டு வாரங்கள், இந்த இரண்டு வாரங்களில் 3 முறை முட்டையிடும். ஒவ்வொரு முறையும் 100 முட்டைகள் வரை இடும். சுத்தமான நீர், உணவு கிடைத்தால் குஞ்சு பொரிக்கும் அதன் மூலம் பெருகும் அனைத்து கொசுவிலும் இந்த வைரஸ் இருக்கும்

### ஈ] இந்த நோயினால் எளிதில் பாதிப்படைவோர் யார்?

இந்நோயினால் குழந்தைகளும், சிறுவர்களும் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

### உ] இந்நோயின் அறிகுறிகள்

கடுமையான தலைவலி, கண் பின்புறு வலி, பொதுவான உடல் வலி, (தலைவலி, மூட்டுவலி, குமட்டலும் வாந்தியும், வயிற்றுக்கடுப்பு, தோல் சினைப்பு , பசியின்மை, தொண்டைப்புண், நிணநீர்க்கணு வீக்கம், வெள்ளை அணுக்கள், குருதிச் சிறுதட்டுக்கள் குறைதல்.

### ஊ] நோய்த்தடுப்பிற்கான வழிகள் என்ன?

- ஏடிசு என்ற கொசு உருவாகாமல் தடுப்பதற்கான சிறந்த வழி சுற்றுப் புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதே. அதன் வதிவிடத்தை முற்றாக அழித்து, இனப்பெருக்கம் இடம்பெறாது தடுக்க வேண்டும்.
- தேங்கு நீர் நிலைகளை கண்டால் அவற்றை வெறுமைப்படுத்தல்.
- தேங்கு நீர் உள்ள இடங்களில் கிருமி நாசிகளை தெளித்தல்
- கிண்ணங்கள், தட்டுக்கள், யோகட் கோப்பைகள், இளநீர் குரும்பைகள் போன்ற நீர் தேங்கும் பொருட்களை அப்புறப்படுத்தல்.
- தோலை மூடக்கூடிய ஆடைகளை அணிதல்
- உறங்கும்போது கொசுவலையை உபயோகித்தல்
- கொசுக்கடிக்கு எதிரான கொசுவர்த்தி, கொசு விரட்டிகளைப் பயன்படுத்தல்

### இவற்றை செயற்படுத்துவதன் மூலம் டெங்கு நோயிலிருந்து எம்மைப் பாதுகாக்கலாம்

நாம் வாழ்கின்ற மேல் மாகாணத்தில் இன்று வரைக்கும் 136 மரணங்கள் இடம் பெற்றுள்ளன. அதாவது 47% டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் தான் அறியப்பட்டுள்ளனர். எனவே டெங்கு என்னும் உயிர்கொல்லியை எம் சமுதாயத்திலிருந்து விரட்டுவது எமது தலையாய பணிகளுள் ஒன்றாக விளங்குகின்றது.

குறிப்பாக கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் இம்மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை டெங்கு வாரமாக பிரகடப்படுத்தி அதாவது இதற்கான சிறப்பாக உபவாசம் இருந்து செபிக்கவும், திருமணித்தியாலயங்கள் விசேட வழிபாடுகளை ஒழுங்கு செய்து செபிக்கவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க சிரமதானப் பணிகளை முன்னெடுத்து மக்களை இது தொடர்பாக விழிப்புணர்வு செய்யும் படியாக அழைப்பு விடுத்தது மட்டுமல்லாமல் பேராயர் அவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலை சென்று டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பெரியவர்களை, சிறியவர்களை சந்தித்து உரையாடி அவர்களுக்கு ஆறுதல் கூறினார். தனது ஆசீர்வாதத்தையும் வழங்கினார்.

எனவே இலங்கை திருநாட்டின் பிரஜைகள் என்ற வகையில் இன்று தேசிய மட்டத்தில் பேசப்படுகின்ற "டெங்கு" என்ற உயிர் கொல்லியிடமிருந்து எம் உறவுகளை காப்போம். நாமும் விழிப்பாயிருந்து இது தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தி இந்நோயிலிருந்து விடுவித்துக்கொள்வோம். பொதுவாக இந்நுளம்பு விடியற்காலையிலும், பிற்பகலிலும் தான் கடிக்கின்றது. எனவே இந்நேரங்களில் கவனமுடன் இருந்து எமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது நாமும் எம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்.

எனவே டெங்கு" என்ற உயிர் கொல்லியை இல்லாது செய்வோம்.. உயிர் காப்போம். நீடுழி வாழ்வோம்

**தொகுப்பு**

**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் டெங்கு நோயினால் பாதிப்புற்றவர்களை நீர்கொழும்பு வைத்தியசாலையில் சென்று அவர்களை சந்தித்து ஆசீர்வதித்தபோது....**





# கொழும்பு செக்கடித் தெரு புனித அன்னம்மாள் பங்கின் 50ஆம் ஆண்டு யூபிலி திருவிழா

கொழும்பு செக்கடித் தெரு பங்கு தனி பங்காக உருவாகி 50ஆம் ஆண்டு ஜூபிலி ஆண்டில், புனித அன்னம்மாள் திருவிழாவை முன்னிட்டு 21.07.2017 அன்று கொடியேற்றப்பட்டு பங்கின் ஜூபிலி திருவிழா ஆரம்பமானது.

அனைத்து நவநாட்களும் பங்கின் ஒவ்வொரு வட்டாரத்திற்கான இளைஞர் குழுமங்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது இந்நவநாள் காலத்திலே சிறுவர்களின் முதல் நன்மை விழாவும் சிறப்பிக்கப்பட்டது. இவ்விழா நாட்களில் மறையுரையாற்றிய அருட்தந்தை அருள்ராஜ் (C.M) அடிகளார் இளைஞர்களை ஊக்கப்படுத்தி பங்குபெற செய்தது குறிப்பிடத்தக்கது.

30.07.2017 அன்று புனித அன்னம்மாள் திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று மாலை திருச்சுரூபப் பவனி நடைபெற்று, அது வட்டார ரீதியாக மக்கள் கலந்து கொண்டனர். நற்கருணை ஆசீர்வாதத்தை பங்குத்தந்தையின் தலைமையில் கீழ் அருட்தந்தை பிறிட்டோ அடிகளார் வழங்கினார். புனித அன்னம்மாளின் திருச்சுரூப ஆசீர்வாதம் பங்குத்தந்தையால் வழங்கப்பட்டது. அருட்தந்தை கிளேரியன், அருட்தந்தை ஒனாசியஸ் அடிகளார் ஆகியோருடன் ஏராளமான விசுவாசிகள் இவ்விழாவில் பங்குபற்றி சிறப்பித்தமைக் குறிப்பிடத்தக்கது












## புதுக்கடை பங்கில் வருடாந்தம் நடைபெறும் மருமடு அன்னைத் திருவிழா














## அதிமேதகு கர்தினால் ஆண்டகை, புதுச்செட்டி பங்கு மக்களை சந்தித்தபோது

ஆடி மாதம்
22 மற்றும் 23ஆம்
திகதிகள்




## மாணவச் செல்வங்களே! லூக்கா 10:30-37 பகுதியை வாசித்து பின்வரும் கதையை கண்டுபிடியுங்கள்






# எறும்பும் வெட்டுக்கிளியும்

சூரியன் பளிச்சென்று ஒளிவீசிக் கொண்டிருந்தது. வானம் நீலநிறத்துடன் காணப்பட்டது. கோடையில் இயற்கை அழகாய் இருந்தது. வயற்காட்டில் வண்ணத்துப் பூச்சிகளுடன் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த ஒரு வெட்டுக்கிளி தன்னுடைய நீண்ட கால்களால் குதித்து, ஆடிப்பாடிக் கொண்டிருந்தது. அப்போது வெட்டுக்கிளி ஒரு பெரிய கல்லைக் கண்டது. நிலத்தில் பாதி புதைந்திருந்த அந்தக் கல் ஒரு தானியக்கதிரின் அடியில் இருந்தது.

ஆடிப்பாடி குதித்து மகிழ்ந்ததில் வெட்டுக்கிளிக்கு களைப்பு ஏற்பட்டது. அதனால் அந்தக் கல்லின் மீது அமர்ந்து ஓய்வெடுத்தது. அப்போது ஒரு சிறு கறுப்பு எறும்பு அந்த வழியாகச் சென்றது. அதன் முதுகில் ஒரு பெரிய மஞ்சள் நிற தானியத்தை அது சுமந்து சென்றது.

"என் அருமை நண்பா! அதைத் தூக்கிக் கொண்டு நீ எங்கே போறே" என்று வெட்டுக்கிளி அதனிடம் கேட்டது. "என்னோட வீட்டுக்குக் கொண்டு போறேன்" என்றது எறும்பு. மூச்சிரைக்க ரொம்ப சிரமப்பட்டு அந்தத் தானியத்தை எறும்பு இழுத்துக் கொண்டு சென்றது.

"நீ ரொம்ப களைப்பா இருக்கியே! கொஞ்ச நேரம் இங்கே தங்கி ஓய்வு எடுக்கக் கூடாதா? என்னோட கொஞ்ச நேரம் இங்கே தங்கிப் பேசலாமே? இன்னிக்கு ரொம்ப அழகான நாளாக இருக்கு. இந்த வெயில் உன் முதுகில் பட்டால் இதமாக இருக்குமே" என்றது வெட்டுக்கிளி.

எறும்பு நின்று சுற்றுமுற்றும் பார்த்தது. அதற்கு முதுகு மிகவும் வலித்தது. நிஜமாகவே ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டது. ஆனால் அது தலையை ஆட்டி மறுத்தது. "வெட்டுக்கிளியாரே, உங்களுடன் உட்கார்ந்து பேச வேண்டும் என்று தான் தோன்றுகிறது. ஆனால் இன்று எனக்கு நிறைய வேலை இருக்கே" என்று எறும்பு பதில் சொன்னது.

"ரொம்ப வேலையா? என்ன சொல்றே?" என்றது வெட்டுக்கிளி. "இந்த தானியத்தை இப்போ நான் என் வீட்டுக்கு எடுத்துக்கிட்டு போகணும். அப்பத்தான் குளிர்காலத்திலே சாப்பிட எனக்கு உணவு கிடைக்கும்" என்றது எறும்பு. தொடர்ந்து "சீக்கரமாகவேஇங்கே நிலம் இறுகிவிடும், குளிர்காலம் வரும், பனி பொழியும். அப்போ உணவைக் கண்டு பிடிக்கிறது சுலபமில்லை" என்றது.

"உளறாதே நண்பா, உன்னைச் சுற்றி நிறைய உணவு இருக்கே" என்றது வெட்டுக்கிளி. ஆனால் எறும்பு தலையை அசைத்து மறுத்தது. கீழே கிடந்த தானியத்தை எடுத்துக் கொண்டு அது தன் வழியே சென்றது. ஒரு சில மாதங்கள் ஓடிற்று. சீக்கரமாகவே குளிர்காலம் வரத் தொடங்கியது. ஈரமான குளிர் காற்று வீசியது. ஒரு நாள் காலையில் வெட்டுக்கிளி வசதியான தன் இருப்பிடத்திலிருந்து தலையை நீட்டி வெளியே பார்த்தது. சத்தமே இல்லை. ஒருவரும் அங்கு இல்லை.

காட்டிலுள்ள எல்லா விலங்குகளும் இந்த நீண்ட குளிர்காலத்திலிருந்து தப்புவதற்காகத் தங்கள் இருப்பிடங்களிலேயே தங்கி இருந்தன. பறவைகளும் கூடுகளை விட்டு வெளியில் செல்லவில்லை. வண்டுகள் போன்ற சிறு பூச்சிகளும் அவ்வாறே பதுங்கி இருந்தன. வெட்டுக்கிளி தன் இடத்திலிருந்து கழுத்தை வெளியே நீட்டி வானத்தை எட்டிப் பார்த்தது. கீழேயுள்ள பனிக்கட்டியைப் போல மேகங்களும் வெண்மையாக இருந்தன. வெட்டுக்கிளி தலையை ஆட்டிக் கொண்டது. கடைசியாகத் தான் எப்போது சாப்பிட்டோம் என்பதே அதற்கு மறந்து போயிற்று. இப்போது அதற்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. தன் கூட்டுக்குள் வெட்டுக்கிளி மெதுவாக சென்றது. அங்குமிங்கும் பார்த்தது. சாப்பிட எதுவும் இல்லை.

"இப்போ நான் என்ன செய்வது? உணவை எங்கே போய்த் தேடுவேன்? எனக்கு ரொம்ப பசிக்கிறதே" என்று தனக்குள் சொல்லிக் கொண்டது. என்ன செய்வதென்று வெட்டுக்கிளிக்குத் தெரியவில்லை. அது மிகவும் வருத்தம் அடைந்து அழத் தொடங்கியது. அப்போதுதான் அது அவர்களைப் பார்த்தது. அந்தச் சிறிய கறுப்பு எறும்புகள் சிறு கறுப்பு கால்களோடு இங்குமங்கும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. அவைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. கோடை காலத்தில் சேகரித்த தானியங்களையும் விதைகளையும் அவைகள் பகிர்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தன.

அந்த நேரம் ஒரு வயது முதிர்ந்த எறும்பு அந்தப் பக்கமாக வந்தது. வெட்டுக்கிளியின் முகம் சோகமாக இருப்பதை அது பார்த்தது. "உனக்குப் பசிக்குமே. உன் மூக்கு கடுங்குளிரால் நீலநிறமாகி விட்டதே! தயவுசெய்து உள்ளே வா. எங்களோடு நீயும் சாப்பிடு. எல்லோருக்கும் கொடுக்கும் அளவுக்கு எங்க கிட்டே உணவு இருக்கு என்று கூறி உள்ளே அழைத்தது முதிய எறும்பு.


"நானா! என்னையா உங்களோடு சேர்ந்துக்கச் சொல்றே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது வெட்டுக்கிளி. "ஆம்!" என்றது கறுப்பு எறும்பு. "என் நண்பனே! நீ உள்ளே தாராளமாக வரலாம். ஆனா இப்போ நீ ஒரு பாடம் கத்துக்கிட்டே. போன கோடைக்காலம் முழுவதும் நீ பாடி, குதிச்சுகிட்டு இருந்தே. அதனால் ஒரு வேலையும் நீ செய்யலே இல்லியா?" என்று கேட்டது அந்த முதிய கறுப்பு எறும்பு.

"ஆமா அது நிஜம் தான். ஆனா அப்படி இருந்தது, தப்புன்னு இப்போ புரிஞ்சுக்கிட்டேன், நாளை என்பதற்கு நாம் இன்னிக்குக் கத்துக்கிட்டேன். அடுத்த கோடைக் காலம் வேற மாதிரியா இருக்கும். அந்த கோடையில் நாம எல்லோரும் ஒன்னா சேர்ந்து கடுமையா உழைப்போம் என்றது வெட்டுக்கிளி மகிழ்ச்சியுடன்.

## தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. இயேசு | 1. தண்ணீரை இரசமாக்கியது |
| 2. புனித பேதுரு | 2. ஒரு ஓவியர் |
| 3. தூய கன்னி மரியாள் | 3. நாசரேத் |
| 4. புனித லூக்கா | 4. அன்னம்மாள் |
| 5. இயேசு செய்த முதல் புதுமை | 5. நல்ல ஆயன் |
| 6. நானே | 6. மீன் பிடிப்பவர் |
| 7. இயேசு பிறந்த ஊர் | 7. 4 நாட்களில் |
| 8. மரியாளின் தாய் | 8. மாசற்றவர் |
| 9. இயேசு இலாசரை உயிர்ப்பித்தது | 9. இறைவனின் மகன் |

"தினமும் 2 பேருக்கு படிப்பு சொல்லிக் கொடுங்கள்".



## கலாமின் சிந்தனை

ஒவ்வொருவரும் இரண்டு மரக் கன்றுகளையாவது நடுவது

உங்கள் முழு சக்தியையும் பயன்படுத்தி கடமையை செய்தல்

**"நாளைய தேவைகளுக்காக இன்றே தயார் செய்து கொள்வது புத்திசாலித்தனம்"**

மாணவர்களே! இது உங்கள் பகுதி. இப்பகுதியில் நீங்களும் இணைந்து கொள்ள விரும்பினால் கீழ் காணும் முகவரியில் உங்களது ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். விரும்பினால் நேரில் கொண்டுவந்தும் கொடுக்கலாம். முகவரி

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08.

மாணவர் ஒளி



"அன்பு நண்பர்களே, ஒவ்வொரு நாளையும் இன்றே இறுதி நாள் என்று கருதிக் கொண்டு, ஒவ்வொரு நொடியையும் வீணாக்காமல் வாழுங்கள். காரணம் நேரம் உயிரை விட மேலானது."

# ஒரு மணி நேரம்! ஒரு பாடம்!

ஹெலன் கெல்லரை நன்கு அறிந்தவரான பிரேசியர் ஹண்ட் என்பவர் ஹெலன் கெல்லரோடு பணி செய்த காலத்தின் அனுபவங்களைக் கட்டுரையாக வடித்திருக்கிறார். அந்தக் கட்டுரையின் தலைப்பு "பார்வையில்லாத நமது கண்கள்" என்பதாகும். அதாவது பார்க்கின்ற திறன் இருந்தும் பல சமயம் நாம் பலவற்றைப் பார்ப்பதில்லை என்பதே அதன் அர்த்தம். ஒரு நாள் காலைப் பொழுதில் ஹெலன் கெல்லர் வசித்த காட்டுப் பகுதிக்கு ஒரு வாகனத்தில் சென்றார் பிரேசியர் ஹண்ட். ஹெலன் கெல்லரின் வசிக்குமிடத்தை நெருங்கிவிட்டதும், வாகனத்தில் இருந்து இறங்கி நடந்து செல்ல ஆரம்பித்தார். அந்தப் பகுதி காடுகள், செடி கொடிகள் நிரம்பிய பகுதி. ஹெலன் கெல்லருக்கு வழிகாட்ட ஒரு கம்பி இணைப்புத் தரப்பட்டிருந்தது.

ஹெலன் கெல்லர் தனது வீட்டிலிருந்து அப்போது வெளியே வந்தார். பிரேசியர் வந்திருப்பதை தெரிந்தவராக சூரிய ஒளி படும் பாதையை நோக்கி முன்னோக்கி நடந்து வந்தார். சாலையோரத்தில் இருந்த செடிகள் அருகில் நின்றவர், ஒவ்வொரு செடியிலும் இருந்த மலர்களைப் பறித்து முகர்ந்து பார்த்தார். பிறவியிலே பார்வையை இழந்த அவர் பாசத்தோடு அந்தச் செடிகளைத் தட்டிக் கொடுத்தவராக மலர்களின் வாசனையை நுகர்ந்தார். அதன் பிறகு சத்தமாக "என்ன அழகு" என்று வாயாரப் பாராட்டினார். அப்போது அவரது முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி தென்பட்டது.

இந்தச் செயலை அருகிலிருந்து கவனித்த பிரேசியர் ஹண்ட் தன்னை நினைத்து வெட்கப்பட்டார். இரண்டு கண்கள் நன்றாகப் பார்த்தாலும், அங்கே வந்து நின்றபோது தென்பட்ட மலர்களும் செடிகளும் இயற்கை அழகும் தனக்குச் சொல்லாத அல்லது தான் உணராத ஒன்றைப் பார்வையில்லாத ஒரு பெண் கண்டு கொண்டு மகிழ்ச்சியடைகின்றாரே என்று எண்ணிக் கண்ணீர் வடித்தார். ஒவ்வொரு பொழுதும் புலர்கின்ற போது நமக்குப் பல புதிய வரவுகளை, நன்மைகளைக் கொண்டு வரத்தான் செய்கின்றது. சில நாட்கள் கஷ்டங்களைத் தந்தாலும் அதன் பின்னே ஒரு அனுபவப் பாடத்தைப் புரிய வைத்துக் கொண்டு தான் வருகின்றது.

நாள்தோறும் வாழ்வை இரசித்து வாழவேண்டும் என்பதில் தன் வாழ்நாள் முழுவதும் தீவிரமாக இயங்கினார் ஹெலன் கெல்லர். இந்த அவரது வாழ்க்கை முறைதான் உலகின் எல்லா நாட்டுத் தலைவர்களையும் அவருக்கு மரியாதை தரச் செய்தது. கூடவே ஒரு பாடத்தையும் அவர் உணர்த்திச் சென்றார். உண்மையில் பார்ப்பது என்பது கண்களினால் செய்யப்படும் புறப் பார்வை அல்ல, மாறாக உள்முகமாக மனத்தின் எண்ணங்களால் பார்ப்பது என்பதே அந்தச் செய்தி. "கண்கள் இருந்தும் காணாதவர் யார்?" என்பதை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே நமது தெய்வப் புலவர் வள்ளுவர் சொல்லிவிட்டார்.

"வாழ்க்கை என்பது என்ன?" என்று ஒரு சமயம் புத்தர் தன் சீடர்களைக் கேட்டார். ஒருவர் "நூற்றாண்டுகள் நோயின்றி வாழ்வது" என்றார். இப்படிப் பல பதில்கள்! எதிலும் திருப்தியடையாத புத்தர் சிரித்துக்கொண்டே "வாழ்க்கை என்பது ஒரு மூச்சு" என்று சொன்னார். அதாவது ஒரு நிமிடம் மூச்சினைப் பிடித்தால் வாழ்க்கையில்லை. எனவே, வாழ்க்கை ஒவ்வொரு மூச்சிலும் உள்ளது என்று உணரச் சொன்னார்.

## முனிவர் சொன்ன பாடம்

ஒரு கிராமத்துக்கு ஒரு முனிவர் வந்து சில நாட்கள் தங்கினார். ஒவ்வொரு ஆண்டும் அவர் வருகின்றபோது மக்கள் அவரைச் சந்தித்துத் தம் கவலைகளைச் சொல்லி ஆறுதல் தேடுவார்கள். இவ்வாண்டு ஊரில் மழை பெய்யவில்லை. தண்ணீர் பஞ்சம் மக்களை வாட்டுகின்றது. பிள்ளைகள் சொல்பேச்சுக் கேட்பதில்லை, பொழுது வீணாகக் கழிகின்றது என்று பல புலம்பல்களை முனிவரிடம் சொன்னார்கள்.

அன்று இரவு ஊர் மக்கள் எல்லோரும் கூடிய நேரம் முனிவர் தன் உபதேசத்தைத் தொடங்கினார். முதலில் மக்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்த அவர், அவர்களிடம் "நேரத்தின் மதிப்பு எவ்வளவு? அல்லது அதை எதனோடு ஒப்பிடலாம்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார். முதலில் ஒருவர் "நேரத்தின் மதிப்பு பொன் போன்றது" என்று கூறினார். "காலம் பொன் போன்றது" என்ற பழமொழியே உண்டு என்று மக்களும் ஆமோதித்தார்கள். முனிவர் அவர்களிடம் "நேரம் பொன்னைப் போல் உயர்ந்ததுதான், மதிப்பு மிக்கதுதான். ஆனால், பொன் தொலைந்து போனால் அல்லது நம்மிடமிருந்து வேறு ஒருவரிடம் சென்றுவிட்டால் அதை மீண்டும் உழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் நேரத்தைப் பெற முடியாதே" என்று தெளிவுபடுத்தினார்.

மேலும், பல பதில்கள் வந்தன. எல்லாவற்றுக்கும் விளக்கம் தந்த முனிவர் அவர்கள் பதிலில் திருப்தி அடையவில்லை. அப்போது ஒருவர் "நேரம் கண் போன்றது, ஏனென்றால் கண் இல்லையென்றால் வாழ்க்கையே இருண்டு போகிறது!" என்று கூறினார். இந்தப் பதில் நன்றாகவே இருந்தது. முனிவர் இந்த நபரைப் பாராட்டினார். "நீர் சொல்வது ஓரளவு சரிதான். நேரம் கண்களைப் போல உயர்ந்தது. நமது உடலுறுப்புக்களில் மிகவும் உன்னதமானது கண்தானே!" என்று சொல்லிவிட்டு அன்பரே, கண்ணில்லாமல் கூட நமது மண்ணில் பலர் சாதனை படைக்கின்றார்களே! எனவே இந்தப் பதிலும் ஏற்க முடியாது" என்று கூறினார்.

முனிவரின் கருத்துக்களை முற்றிலும் ஏற்றுக்கொண்ட மக்கள் அவரிடம் "ஐயா, நேரத்தை எதனோடு ஒப்பிடலாம்? என்று தாங்களே கூறுங்கள்" என்று வேண்டினார்கள். முனிவர் பாசத்தோடு அவர்களை நோக்கி, "மக்களே, நேரம் உயிர் போன்றது, அதை உயிருக்கு ஒப்பிட வேண்டும். காரணம் உயிர் போனால் நம் வாழ்க்கையின் ஓட்டம் நின்று போகின்றது. போன உயிரை எப்படி மீண்டும் பெற முடியாதோ அவ்வாறே கடந்த நேரத்தை நம்மால் பெற முடியாது. ஆகவே, ஒவ்வொரு நிமிடத்தையும், நம்மைக் கடந்து செல்லும் ஒன்றாகக் கருதி உழையுங்கள். உங்களது பல பிரச்சினைகளுக்குத் தீர்வு அப்போது நிச்சயம் கிடைக்கும்" என்று போதனை செய்தார். காலம் கண் போன்றது, பொன் போன்றது என்பதைவிட "காலம் உயிர் போன்றது" என்ற உணர்வு நம்மிடம் வரவேண்டும் என்பதால் தான் "புத்தரும் வாழ்க்கை ஒரு மூச்சு" என்று கூறினார்.

இளைஞர்களில் பலர் சர்வ சாதாரணமாக நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதை எங்கிலும் காண முடிகிறது. கல்லூரியில் படிப்பதைவிட காதலில் மூழ்குவது, சிந்தனைக்கு வாசிப்பதைவிட ஒவ்வொரு திரைப்படமாகச் சென்று பார்ப்பது, நண்பர்களோடு பேசுவது என்று செல்பேசிகள் மூலம் மணிக்கணக்கில் மூழ்கிக் கிடப்பது என்று தம் நேரத்தை வீணடிக்கின்றனர். சமீபத்தில் ஒரு இளைஞனைச் சந்தித்துப் பேசிய போது அவனுக்குப் படிப்பதில் முன்போல் ஈடுபாடில்லை, என்று கூறினான். "சரி எதை விரும்புகிறாய்?" என்று கேட்ட போது "எதிலும் விருப்பமில்லை. ஆனால் சமீபத்தில் வந்த ஒரு நடிகன் படத்தை மட்டும் தியேட்டரில் சென்று இருபதுக்கும் மேற்பட்ட தடவை பார்த்தேன்" என்று கூறினான்.

இதைச் சொன்னபோது அவன் முகத்தில் வெட்கமோ, வேதனையோ துளியும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மகிழ்ச்சியோடு, பெருமையாகச் சொன்னான். "சரி, நீ திரைப்படத் துறைக்குச் செல்லப் போகிறாயா?" என்று கேட்டபோது, "ஐயோ எனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது. அந்த நடிகரைப் பிடிக்கும். அதனால் அவர் படம் எப்போது வந்தாலும் இப்படித்தான் வெறித்தனமாகப் பார்க்கின்றேன்" என்று திருவாய் மலர்ந்தான்.

நேரத்தை வீணடிக்கின்றோம் என்கிற வெட்க உணர்வே இல்லாத ஒரு சமுதாயத்தைச் சோறு போட்டு வளர்க்கின்ற சூழலை எண்ணி நம்மைப் போலச் சிலர் தான் வெட்கப்பட வேண்டியுள்ளது. அறிவியல், கணிதம், பொருளியல், வணிகவியல், மொழியில் இப்படி எல்லாத் துறைகளிலும் ஜாம்பவான்களாய்த் திகழும் அறிஞர்களாக நாம் வெளிநாட்டு அறிஞர்கள் பெயரைத் தான் சொல்லித் தருகிறோம். நமது பிள்ளைகளும் இதில் சாதனையாளர்களாக வரவேண்டுமெனில் அவர்கள் நேரத்தை உயிராகக் கருதி உழைத்தால் மட்டும் இது சாத்தியம் என்பதையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டியுள்ளது.

## இந்த நாள் இறுதி நாள்!

தனக்கு இரு சக்கர வாகனம் வேண்டும் என்று அடம்பிடித்த ஒரு பாடசாலை மாணவன், பெற்றோர் பெற்ற கடன் தொகையில் அதைப் பெற்றுக்கொண்டான். அதை மிக வேகமாக ஓட்டிச் சென்று வருகிறான் என்பது, அவன் பெற்றோருக்கு அந்த அந்த இருசக்கர வாகனத்தை அவன் பெற்றுக்கொண்ட பின்புதான் தெரிந்தது. எனவே, வருத்தப்பட்ட அவன் பெற்றோர், பலமுறை அவனிடம் "வேகத்தை குறைத்துக் கொள்" என்று அறிவுரை கூறியும் கூட அவன் கேட்கவில்லை.

அன்று காலை எட்டு மணிக்குத் தனது பைக்கில் பாடசாலை கிளம்பினான். அடுத்த அரை மணி நேரத்தில் சாலையிலிருந்து தூக்கி எறியப்பட்டான். அவன் உயிர் சிறிது சிறிதாகப் பிரிய இருந்த நேரம் ஒரு கடவுளின் தேவதை அங்கே வந்தது. அவன் அந்தத் தேவதையிடம் உயிர்ப்பிச்சை கேட்டான். அந்தக் கடவுளின் தேவதை அவனுக்கு ஒரே ஒரு வாய்ப்புத் தருவதாகச் சொன்னது. "சரி தாருங்கள்" என்று காலில் விழுந்தான். தேவதை அவனிடம் "ஒரே ஒரு மணிநேரம் மட்டும் நீ உயிரோடு இருப்பாய், அதற்குள் உன் இறுதி ஆசைகளை நிறைவேற்றிக் கொள்" என்றது.

இளைஞன் அழுதான், தேவதை சொன்னது "உன் நேரம் கடந்து கொண்டிருக்கிறது". அவன் சொன்னான் என்னை அன்போடு வளர்த்து ஆளாக்க ஆசைப்பட்ட என் பெற்றோரைக் கூட நான் இப்போது சென்று பார்க்க முடியாதே. என் வாகனம் நொறுங்கிப் போய்விட்டது. வீடும் தொலைவில் உள்ளது" என்று புலம்பினான். தேவதை "என்ன செய்வது நீ வாழ்க்கையைச் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டாய், வேகமாக வந்து இப்படி மாட்டிக் கொண்டாய்" என்றது. இளைஞன் மேலும் மேலும் அழுதான். "அமெரிக்கா செல்ல வேண்டும், உலகம் சுற்றிப் பார்க்க வேண்டும், என் உறவினர்கள் எல்லோரும் பாராட்டும் வண்ணம் புகழ் பெற வேண்டும், இப்படிப் பல ஆசைகள், கனவுகள் கண்டேனே! இப்படியாகி விட்டதே" என்று சொல்லிக் கதறினான். தேவதை "என்ன செய்வது, நீ கனவு கண்டது நிறைவேற வேண்டும் என்று உழைக்கவில்லை. இன்று கூட நீ கல்லூரிக்குச் செல்வதாகச் சொல்லிவிட்டு ஊரைச் சுற்றிவர நண்பர்களோடு கும்மாளம் போட இப்படி வேகமாக வாகனத்தில் வந்து மாட்டிக் கொண்டாய். நீ ஆசைப்பட்டது ஒன்று ஆனால் செய்வதோ வேறொன்று" என்றது....

15 பக்கம்




# பொதுநிலையினர், குடும்பம், வாழ்வு அவையின் புதிய இலச்சினை

பொதுநிலையினர், குடும்பம், வாழ்வு திருப்பீட அவை, புதிய இலச்சினை ஒன்றை உருவாக்கி, தன் புதிய வலைத்தளத்தை அண்மையில் தொடக்கி வைத்தது. கடந்த ஆண்டு புரட்டாதி முதலாம் திகதியன்று செயலாற்றத் தொடங்கிய இந்தப் புதிய திருப்பீட அவையின் இலச்சினை, திருஅவை, உலகெங்கும் உள்ள அனைத்துப் பொதுநிலையினரையும், குடும்பங்களையும் அணைத்து வழிநடத்துவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

புனித பேதுரு பசிலிக்காவுக்கு முன் உள்ள வளாகத்தில் பெர்னினி தூண்களுக்குப் பதிலாக, மக்கள் நிற்பதுபோல் உருவாக்கப்பட்டுள்ள இந்த இலச்சினை, அந்த வளாகத்தின் நடுவே நிற்கும் குடும்பங்களை இரு கரங்களைக் கொண்டு அணைப்பதுபோல் அமைந்துள்ளது. அணைப்பதற்கு நீண்டிருக்கும் இந்தக் கரங்களின் இறுதியில் வாழ்வைக் குறிக்கும் அடையாளமாக,




மலர்கள் பூத்திருப்பதுபோன்று இந்த இலச்சினை அமைக்கப்பட்டுள்ளது. இந்த இலச்சினையைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய வலைத்தளம் ஆங்கிலம், இத்தாலியம், இஸ்பானியம், போர்த்துகீசியம் ஆகிய நான்கு மொழிகளில் செயல்பட்டு வருகிறது.

## "ஒருபோதும் என, ஒருபோதும் சொல்ல வேண்டாம்!"

**- திருத்தந்தை**



"ஒருபோதும் என, ஒருபோதும் சொல்லாதே!" என்று, தன்னைத் திருப்பயணத்திற்கு அழைத்திருந்த, ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவனுக்கு எழுதிய நன்றிக் கடிதத்தில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அந்த்ரேயா (Andrea) என்ற ஒன்பது வயதுச் சிறுவன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தனது புதுநன்மைப் பரிசாக, லொரேத்தோ திருத்தலத்திற்கு, சிறாரோடு திருப்பயணம் செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது என்றும், இத்திருப்பயணத்தில், தங்களோடு இணையுமாறும், திருத்தந்தையைக் கேட்டுக்கொண்டுள்ளான்.

இக்கடிதத்திற்கு பதில் அனுப்பியுள்ள திருத்தந்தை, அன்பு அந்த்ரேயா, உனது அன்பான கடிதம் கிடைத்தது, UNITALSI அமைப்பு, லொரேத்தே திருத்தலத்திற்கு நடத்திய, சிறார் திருப்பயணத்தில் கலந்துகொண்ட உனது அனுபவம் பற்றி அறிந்து மகிழ்கின்றேன் என்று எழுதியுள்ளார். சிறாருடன் இருப்பது தனக்குப் பெருமகிழ்வைத் தரும் எனவும், உன்னோடு திருப்பயணம் மேற்கொண்ட சிறாருக்கும், பெற்றோருக்கும், தன்னார்வலர்களுக்கும் ஆசீரை வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, "ஒருபோதும் என, ஒருபோதும் சொல்லாதே!" என்று கேட்டுக்கொண்டுள்ளார். Ilsussidiario.net. என்ற இத்தாலிய வலைத்தள தினத்தாள், திருத்தந்தை எழுதியுள்ள இக்கடிதம் பற்றி, ஆடி 19, புதனன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# கால்களை இழந்த தொழிலாளியுடன் தொலைப்பேசியில் திருத்தந்தை



அர்ஜென்டினா நாட்டின் புவெனஸ் அயிரஸ் நகரில் வாழும் Maximiliano Acuña என்ற தொழிலாளி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களிடமிருந்து வந்த தொலைப்பேசி அழைப்பால் ஆனந்த அதிர்ச்சியடைந்தார் என்று CNA கத்தோலிக்கச் செய்தி கூறியுள்ளது.

துப்புரவு தொழில் செய்யும் 33 வயது நிரம்பிய Maximiliano அவர்கள், பங்குனி 22ம் திகதி, குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, வேகமாக வந்த ஒரு கார் அவர் மீது மோதியதால், அவர் தன் இரு கால்களையும் இழக்க வேண்டியதாயிற்று. புவெனஸ் அயிரஸ் நகர அதிகாரிகளில் ஒருவரான, Gustavo Vera அவர்கள், இந்த விபத்தைக் குறித்து திருத்தந்தைக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியதைத் தொடர்ந்து, திருத்தந்தை, Maximiliano அவர்களை, ஆடி 18, செவ்வாயன்று தொலைப்பேசியில் அழைத்துப் பேசினார்.

ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையான Maximiliano அவர்கள், இந்த விபத்திற்குப்பின் "கோமா" நிலையில் இருந்தார் என்றும், மூன்றாம் நாள் அவரே மீண்டும் சுயநினைவு அடைந்தார் என்றும் CNA செய்தி கூறுகிறது. திருத்தந்தையின் தொலைப்பேசி அழைப்பைக் குறித்து, அர்ஜென்டினா தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் பேட்டியளித்த Maximiliano அவர்கள், தான் காட்டிய நம்பிக்கையும், மன உறுதியும், ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் என்று, திருத்தந்தை தன்னிடம் கூறியதாக தெரிவித்தார். திருத்தந்தை தன்னை அழைத்தது, தனக்கு ஆறுதலும், நம்பிக்கையும் தந்தது என்றும், தன் இரு கால்களையும் இழந்தபோதிலும், வேறு பல வழிகளில் இறைவன் தன் அன்பை தனக்கு வெளிப்படுத்தி வருகிறார் என்றும், Maximiliano அவர்கள் இப்பேட்டியில் குறிப்பிட்டார்.

# ஒஸ்தி, திராட்சை இரசம் குறித்து ஆயர்களுக்குக் கடிதம்

ஆண்டவரின் இறுதி இரவுணவை நினைவுகூரும் திருநற்கருணைக் கொண்டாட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒஸ்தி மற்றும், திராட்சை இரசம் குறித்து, உலகின் அனைத்து ஆயர்களுக்கும், கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது, திருப்பீட திருவழிபாடு மற்றும், அருளடையாளப் பேராயம்.

திருநற்கருணைக்குப் பயன்படுத்தப்படும் ஒஸ்தி மற்றும் திராட்சை இரசத்தின் தரம் குறித்தும், அவைத் தயாரிக்கப்படும் பொருள்கள் குறித்தும், ஆயர்கள் கவனமாய் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது அப்பேராயம். திருப்பலியில் பயன்படுத்தப்படும் ஒஸ்தி மற்றும் திராட்சை இரசத்தை, அண்மைக் காலமாக, சில துறவறக் குழுக்களே தயாரித்துவந்தவேளை, தற்போது இவை பல்பொருள் அங்காடியிலும், ஏனையக் கடைகளிலும், வலைத்தளத்திலும்கூட கிடைக்கின்றன எனவும், இப்பேராயம் கூறியுள்ளது.

ஒஸ்தி மற்றும் திராட்சை இரசத்தை வழங்குபவர்கள் யார், இவைத் தயாரிக்கப்படும் பொருள்களின் மதிப்பு ஆகியவை குறித்து கவனம் செலுத்துமாறு, ஆயர்கள், அனைத்து அருள்பணியாளர்களுக்கு நினைவூட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். திருப்பலியில் பயன்படுத்தப்படும் ஒஸ்தி, புளியாத கோதுமை மாவினால் செய்யப்பட வேண்டும் என்றும், ஒஸ்திக்கென வேறு தானியங்களைப் பயன்படுத்துவதும், அந்த மாவில், பழம், சர்க்கரை அல்லது தேன் போன்றவற்றைச் சேர்ப்பதும் பெரும் தவறாகும் என்றும், அக்கடிதம் எச்சரிக்கின்றது.

திருப்பலிக்குப் பயன்படுத்தப்படும் திராட்சை



இரசமும், ஏனையப் பொருள்களின் கலப்பில்லாத, அழுகல் இல்லாத, சுத்தமான திராட்சைப் பழத்திலிருந்து தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. திருப்பலிக்கென ஒஸ்தி மற்றும் திராட்சை இரசத்தைத் தயாரிப்பவர்கள், இவை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து, நேர்மை, பொறுப்புணர்வு மற்றும், தகுந்த மரியாதையோடு தயாரிக்க வேண்டுமெனவும், ஆயர் பேரவைத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது, இப்பேராயம்.

இக்கடிதம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளின்பேரில் அனுப்பப்பட்டுள்ளதாக, திருப்பீட திருவழிபாடு மற்றும், அருளடையாளப் பேராயம் கூறியுள்ளது. இப்பேராயத்தின் தலைவர் கர்தினால் இராபர்ட் சாரா, அதன் செயலர் ஆர்த்தூர் ரோச் ஆகிய இருவரும் இக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

# ஆசியாவில் மனித வர்த்தகம் பற்றிய முதல் பல்சமயக் கருத்தரங்கு

மனித வர்த்தகத்திற்கெதிரான உலக நாளையொட்டி, அமைதிக்கான ஆசிய மதங்கள் அவை (ARCP), மனிலா புனித தாமஸ் பல்கலைக்கழகத்தில், பன்னாட்டு கருத்தரங்கு ஒன்றை நடத்தியுள்ளது.

"நவீனகால அடிமைத்தனத்திற்கெதிராக, பெண்களின் மேம்பாடு" என்ற தலைப்பில், கடந்த வாரத்தில் (ஆடி 20-22), ஆசியாவின் பல சமயத்தவர் முதல்முறையாக இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில், நலிவுற்ற பெண்களும், சிறாரும், மனித வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுவதை நிறுத்துவதற்கு, குடும்ப விழுமியங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மனிதத்தை கீழ்மைப்படுத்தும் நவீனகால அடிமைத்தனத்தின் கொடிய விளைவுகள் குறித்து, இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட, பல்வேறு மதங்கள், மனித உரிமை குழுக்கள், மற்றும், சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பகிர்ந்துகொண்டனர்.

2016ம் ஆண்டின், உலகளாவிய அடிமைத்தன குறியீட்டின்படி, உலகில், ஏறத்தாழ 4 கோடியே 50 இலட்சம் பேர், மனித வர்த்தகத்திற்குப் பலியாகின்றனர், இவர்களில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பகுதியினர் ஆசியர்கள் எனத் தெரிகின்றது.

மனித வர்த்தகத்திற்கெதிரான உலக நாள், ஒவ்வோர் ஆண்டும் ஆடி 30ம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது.




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வலட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்
Catholic Family Catechism



# வாழ்வின் நோக்கம்

வாழ்வின் நோக்கம் என்ன? அல்லது எதை நோக்கி வாழ்கின்றோம் என்னும் கேள்வி மனித குலத்தின் ஆரம்பத்திலிருந்தே எழுப்பப்படும் ஒரு கேள்வியாகும். பிறக்கும் ஒவ்வொருவரும் இறக்க வேண்டும் என்பது உண்மையும் வாழ்வின் நியதியுமாகும். இறப்பின் பின்பு என்ன நடக்கும்? அதன் பின்பு ஓர் வாழ்வு உண்டா போன்ற கேள்விகள் மீண்டும் மீண்டுமாக எழுப்பப்படும் வினாக்களாகும்.

இவைக்கான பதிலை ஓர் கிறிஸ்தவன் பின்வருமாறு பதில் இறுக்கக் கூடியவனாய் இருக்கி-ன்றான். ஒரு பிறப்பிலிருந்து இன்னொரு பிறப்புக்கு உட்படும் ஓர் வாழ்க்கை சக்கர சுழற்சியில் நமது பிறப்பு அமைந்துள்ளது அல்ல, மாறாக ஒரு கிறிஸ்தவனுக்கு வாழ்வு ஒரு ஆசீர், எனவே கடவுளிமிருந்து நாம் பெற்ற கொடை என்பதை உணர்ந்து பயன் நிறைவு கொடுக்கும் வாய்ப்பாக, முழு நம்பிக்கையோடு ஏற்று வாழ வேண்டியதொன்றாகும்.

எனினும், இவ்வுலக வாழ்வானது இன்றிலிருந்து நாளை மறையும் நிரந்தர மற்றதொன்றாகும். நித்தியத்துக்கும் நிலை பேறுடைய ஓர் வாழ்விற்குள் நாம் நுழைகின்றோம். எனவே, நமது இவ்வுலக வாழ்வானது, நித்திய வர்ழவிற்கான ஆயத்த வாழ்வாகும். ஆகவே அந்த நிரந்தர மகிழ்வுநிலை பரலோக வாழ்வை நோக்கிய பயணமாக வேண்டும்.

நமது இவ்வுலக வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைய நம்மைப் படைத்தவராம் அந்த இறைவனோடு என்றும் ஒன்றுபட்டு வாழ வேண்டும். கடவுளை அறிந்து அன்பு செய்ய வழிமுறைகள் இங்கே தரப்பட்டுள்ளன.

**1. இயேசு கிறிஸ்துவை நீர் பின்பற்றுகின்றீரா?**

ஆம், இறையருளோடு அவரைப் பின்பற்ற ஆசிக்கி-ன்றேன். கிறிஸ்தவர்கள், இயேசு கிறிஸ்துவின் படிப்பினைகளை ஏற்று அதன்படி வாழ்பவர்கள்.

**நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார் ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.**

**நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்.**

**( யோவான் 14:12,15)**

**2. இயேசுக் கிறிஸ்து உலகுக்கு கற்றுக்கொடுத்த செய்தி என்ன?**

அவர் கற்றுக்கொடுத்த செய்தியாதெனில், இறைவன் மனித குலத்தை மிக ஆழமாக, அளவிட முடியாத அளவு அன்பு செய்கிறார் என்பதே.

மேலும் இறைவன் நமது தந்தை, நாம் அவரது பிள்ளைகள். அப்படியாயின் சாதி, மத, குல, வேறுபாடுகளின்றி நாம் அனைவரையும் சொந்த சகோதரர்களாகின்றோம்.

நாம் இறைவனின் பிள்ளளைகள் என்ற மிக கௌரவம் நிறைந்த இந்தப் பேற்றை பேணி காக்கும்படியாக அவர் கற்றுத்தருகின்றார். அதற்கிணங்க இறைவனின் சாயலை நமதாக்கி வாழ வேண்டியவர்களாகின்றோம். இறைவன் நம்மை அன்பு செய்வதுபோல் நம் அயலவர் அனைவரையும் அன்பு செய்ய வெண்டும். அயலவரை அன்பு செய்வது ஒரு கிறிஸ்தவனின் சிறப்புப் பண்பாக விளங்க வேண்டும்.

**நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்து கொள்ளாததால் தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை. (1 யோவான் 3:1)**

**3. ஏன் கடவுள் நம்மைப் படைத்தார்?**

இவ்வுலகில் அவரை அன்பு செய்து அவருக்கு சேவை செய்யவும், மறுவாழ்வில் நித்தியத்துக்கும் அவரோடு மகிழ்ந்திருக்கவுமே கடவுள் நம்மைப் படைத்தார்.

மாந்தர் ஒவ்வொருவருமே மகிழ்ச்சியாக இருக்க ஏங்ககின்றார்கள். அவனது இந்த மகிழ்ச்சிக்கான தேடல் இவ் உலகைச் சார்ந்தவர்வற்றிலேயே தேடுகிறான். மகிழ்வை நோக்கி நமது தேடல் பணம், பதவி, பட்டம் சார்ந்தவையானதாக இருக்கிறது. இவ்வாறான மாறுபடும், மாயையுடைய இவற்றில், நிரந்தர மகிழ்வை நாம் ஒருபொழுதும் அடைந்து விட முடியாது. நிரந்தரமானதொன்றிலேயே. நிரந்தர மகிழ்ச்சி, மகிழ்வை நாம் அடைய முடியும். இறைவன் மட்டுமே என்ற நிலை பேறுடையவர்.

**மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கி-க்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?**

**(மத்தேயு 16:26)**

**4. விண்ணுலகில் நிரந்தர மகிழ்வை நமதாக்கிக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

நிரந்தர மகிழ்வு நமதாகிட, இவ்வுலகில் இறைவனை அறிந்து, நேசித்து அவருக்கு பணிசெய்து வாழ வேண்டும்.

விண்ணுலகில் நிரந்தர மகிழ்வை நமதாக்கிக் கொள்ள நமது இவ்வுலக வாழ்வின் குறிக்கோளாகும். நமது அறிவாற்றலாலேயே நாம் மகிழ்வை அனுபவிக்கின்றோம். மானிடர் மட்டுமே இந்த அறிவாற்றல் என்னும் தனியியல்பை பெற்றவனாக இருக்கின்றனர். இவ்அறக்கொடையானது, மிருகங்க-ளுக்கும் கிடையாது. உளவியலாளரின் கூற்றுப்படி மனிதனும், மிருகங்களும் ஒரே உடலமைப் கொண்டனவாகும். ஆனால் மானிடர் மட்டுமே, இந்த தனிப்பட்ட அறிவாற்றலை கொண்டவர்களாக உள்ளனர். இவ்வாறு, தேவதூதர்களை தவிர்த்து மற்றைய அனைத்து படைப்புக்களிலும் உயர்ந்த படைப்பாக திகழ்கின்றனர். இவ்வாறு தனித்துவம் வாய்ந்த இவ்வறிவாற்றல் என்னும் மனத்திறன் தான் “ஆன்மா”வாகும்.

மின்சாரம், மின் விளக்கினுள் புகுந்து ஒளியூட்-டுவது போன்று, நம்முள் இருக்கும் ஆன்மாவே நம்மை அறிவாற்றல் உள்ளவர்களாக்குகின்றது. மின்விளக்கின் ஒளியை காணும் நாம் மின்சார சக்தியை காண்பதில்லை. அதேபோன்றே ஆன்மாவை நாம் உணர முடியாவிடினும், அறிவாற்றலை கண்டுரணக் கூடியவர்களாகின்றோம்.

**என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப் போல் இருப்போம் ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம். (1 யோவான் 3:2)**

**4. இறைவனைப் பற்றி நாம் யாரிடமிருந்து கற்றுக் -கொள்கின்றோம்?**

இறைவனின் ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவிடமிருந்து இறவைனைப்பற்றி அறிந்து கொள்ள முடியும். இன்று தமது திருச்சபையாம், கத்தோலிக்க திருச்சபையின் மூலமாக கற்றுத்தருகின்றார்.

இறைவனின் மகனாம் இயேசு கிறிஸ்து, மனிதவதாரம் எடுத்து இவ்வுலகிற்கு வந்து, தமது தந்தையாம் இறைவனைப்பற்றி கற்றுக்கொடுத்தார். தமது பணியை தொடர்ந்தாற்ற அப்போஸ்தலர் குழு ஒன்றை நியமித்து, திருச்சபையை நிறுவினார். அந்த திருச்சபையே கத்தோலிக்க திருச்சபையாகும்.

**பாடங்கள் தொடரும்..**




# மடு அன்னை திருத்தலம்

மடு அன்னைத் திருத்தலம் 469 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைக் கொண்டது. 16ம் நூற்-றாண்டில் யாழ்ப்பாணம், யாழ்குடாப் பகுதிகள், மாந்தை பெருநிலப்பரப்பு, மன்னார் தீவு போன்றவை அரசாக விளங்கின. 1544ஆம் ஆண்டில் இந்தியாவின் தென்கரையோரங்களில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவைப் பற்றி அறிந்திராத மக்களுக்கு இறைவார்த்தையைப் போதிக்கத் தொடங்கினர். இதனால் 1583ஆம் ஆண்டில் 26 ஆலயப் பங்குகளில் 43 ஆயிரம் கிறிஸ்தவர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் விளங்கினர்.

669ஆம் ஆண்டில் ஒல்லாந்தர்கள், இலங்கைத் தீவை கைப்பற்றியபோது, அவர்கள் கத்தோலிக்கரை அடக்கி ஒடுக்கி நசுக்கினார்கள். இந்தக் கலவரத்-திலிருந்து தங்களையும், செபமாலை அன்னை திருச்சுரூபத்தையும் பாதுகாக்கும் பொருட்டு அதற்கு அடுத்த ஆண்டில் மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர். அருள்பணியாளர்களின் துணையில்லாத அந்த வேளையிலும், மாந்தையிலும் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை அன்னையின் திருச்சுரூபத்தைத் தூக்கிக் கொண்டு அடர்ந்த வன்னிக் காட்டினுள் புகுந்தனர். திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக “மருதமடு” என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி அன்னையின் வழிநடத்தலோடு வந்து சேர்ந்தனர். அதேசமயம், யாழ்ப்பாண நகரில் ஒல்லாந்தரின் கத்தோலிக்கருக்கு எதிரான அடக்குமுறையும் தொடர்ந்து கொண்டிருந்தது. எழுநூறு கிறிஸ்தவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்-காட்டிற்குள் புகுந்தனர். ஏற்கனவே அங்கு வந்திருந்த மாந்தைக் கிறிஸ்தவர்களோடு இவர்களும் சேர்ந்து அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து தப்பி வந்தவர்களில் போர்த்துகீசிய தளபதியின் மகளாகிய “எலேனா” என்பவரும் ஒருவர். இவர்தான் முதன் முதலில் மடு அன்னைக்கு சிறிய ஆலயம் அமைத்தார். இந்த இடம்தான் இன்றைய மடுத்திருத்தலப் பகுதியாகும்.

இந்த மடு அன்னையின் பரிந்துரையால் அன்று முதல் இன்றுவரை பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. மடு அன்னைத் திருச்சுரூபம், இப்பகுதிக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அதன் சுற்று வட்டாரத்தில் நச்சு உயிரினங்களின் ஆபத்துக்கள் வெகுவாகக் குறைந்தன. காலப்போக்கில் மடு அன்னை எழுந்தருளியிருக்கும் இடத்து மண்ணை மக்கள் நம்பிக்கையுடன் எடுத்துச் சென்று தங்களது தீராத நோய்களைத் தீர்த்தாக வரலாறு கூறுகின்றது. இத்திருத்தலத்தின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு முக்கிய ஆலயத்தின் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த மண்ணை மக்கள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று குணமளிக்கும் மருந்தாக பயன்படுத்துகின்றனர். “கோயில் மருந்து” என்று இது அழைக்கப்படுகின்றது. நோய்க்கு மருந்தாகவும், தீய சக்திகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் கவசமாகவும் மக்கள் இதைக் கருதி பயன்படுத்துகின்றனர். இந்த மண்ணை மக்கள் கரைத்து நோயாளிகளுக்கு குடிக்கக் கொடுக்கின்றனர். நெற்றியிலும், நெஞ்சிலும் பூசுகின்றனர். தீமைகள் தங்களை அணுகாவண்ணம் தங்கள் வீட்டு மூலைகளில் தெளிக்கின்றனர். இச்செயல் இன்றுவரை நிலைத்து நிக்கின்றது. பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இத்திருத்தலத்தை அடைந்து குணம் பெறுகின்றனர். என்பது மக்களின் ஆழமான விசுவாசமாகும். வன விலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் மத்தியிலே எழில்மிகு அன்னையாக கானகச் செல்வியாக மடு அன்னை இவ்வாலயத்தில காட்சியளிக்கின்றாள்.இன்னும் அந்த விசுவாசம் குறையாமல் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிகின்றது. மடு அன்னை ஆலயத்தில் அன்னையின் அருள் நாடி உதவி வேண்டி அன்னையிடம் செல்லாதவர்கள் யாருமில்லை. இன மத பேதமின்றி அன்னையின் பாதம் செல்பவர்கள் சொல்லிலடங்கா, அனைவரையும் அரவணைக்கும் அன்னை தன்னைத் தேடி வரும் பக்தர்களுக்கு, பிள்ளைகளுக்கு உதவி கரம் நீட்டாமல் அனுப்புவதில்லை. இன்று பிரச்சினைகள் நீங்கி சுயமாக மடு ஆலயம் சென்று வர முடியும் என்பதால் இறைமக்கள் ஒவ்வொரு மாதமும் அன்னைக்கு விழா கொண்டாடி வருகின்றார். ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னையின் ஆலயம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுகின்றது. அன்னையிடம் வந்து மக்கள் தங்களின் சுமை இறக்கிய உணர்வோடும், திருப்தியோடு வீடு திரும்புகின்றனர்.

மடு அன்னையின் திருவிழா இம்மாதம் 15ஆம் திகதி அன்னையின் விண்ணேற்பு விழா நாளில் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

அன்னையிடம் போவோம்
கரம் ஏந்துவோம்
பலன் பெறுவோம்
புகழ் பாடுவோம்



# பாத்திமா காட்சிகளின் சுருக்கம் 05

**காட்சி 05**

புரட்டாதி மாதம் 12ஆம் திகதி கோவா தா ஈரியாவுக்குச் செல்லும் பாதைகள் எல்லாம் மக்கள் கூட்டம் அன்று இரவை அவர்கள் திறந்த வெளியிலேயே கழித்தார்கள். மறுநாள் சூரிய உதயத்தில் பார்த்தால் இன்னும் கூட்டம் அதிகரித்து வந்தது.

பெருங் கூட்டமான மக்கள் இக்குழந்தைகளைக் காணும்படி காலையிலே அல்யுஸ்திரலுக்கச் சென்றார்கள். ஜெபமாலையும், பிரார்த்தனையும் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அன்றைய கூட்டம் மிகப் பெரியதாய் இருந்தது. போர்த்துக்களின் எல்லாப் பாகங்களிலுமிருந்து திருயாத்திரிகள் வந்திருந்தனர். சமூகத்தில் எல்லா தரப்பினரையும் அங்கு காண முடிந்தது. சுமார் 30,000 பேர் குழுமியிருந்தனர். முப்பது குரு மாணவர்களும் ஐந்தாறு குருக்களும் வந்திருந்தனர். குருக்கள் சற்று உயரமான ஒரு இடத்தில் காட்சி நிகழும் மரத்தை நன்றாகக் காணக்கூடிய வசதியுடன் நின்று கொண்டனர். அவர்களுள் சங். டாக்டர் மனுவேல் நூன் போர்மிகோ என்பவர் ஒருவர். இவர் சிறந்த இறையியல் ஆசிரியர். லிஸ்பன் நகர் பேராலய பங்குக் குரு. சான்டாராம் குரு மடத்தில் பாடம் நடத்தி வந்தவர். கல்விக்கும் நேர்மைக்கும் போர்த்துக்கல் முழுவதும் பெயர் பெற்றிருந்தார். இவர் இக்காட்சிகளைப் பற்றிய உண்மையை ஆய்ந்துக் கூறும்படி உத்தரவு பெற்று வந்திருந்தார்.

எங்கு திரும்பினாலும் ஒரே மக்கள் திரளாகவே காணப்பட்டது. பகல் பன்னிரண்டு மணி ஆகியது. எங்கும் நிசப்தம்! சில ஜெப முனங்கல்கள் தவிர ஒரே அமைதி! வானம் முழுவதும் நீலமாயிருந்து. ஒரு சிறு மேகம் கூட காணப்படவில்லை. ஆனால் சூரியனின் ஒளி மங்கத் தொடங்கியது. ஆகாயம் ஒரு வித பொன்னிறத்தில் காணப்பட்டது. ஒளி எவ்வளவு குறைந்து விட்டது என்றால், நட்சத்திரங்கள் கூட தெரிந்தது. திடீரென மகிழ்ச்சி ஒலிகள் கேட்டன. ஒரு உருண்டை வடிவமான வெண்மேகம் கிழக்கிலிருந்து புறப்பட்டு கம்பீரமாக ஆகாயத்தில் நீந்தி கீழே மெதுவாக இறங்கிக் கொண்டே மேற்கு நோக்கி வந்தது. அந்த மேகம் குழந்தைகள் மூவரும் இருந்த அஸின்ஹோரா மரத்தின் மீது இறங்கியதைப் பல ஆயிரம் கண்கள் அதைப் பார்த்தன. ஆனால் வேறு பலர் ஒன்றையும் காணவில்லை.

அதேசமயம் வானத்திலிருந்து மழை பொழிவது போல் வெண்மலர்களும், இதழ்களும் பொழியப்பட்டன. ஆனால் தரையில் விழுமுன் அவை மறைந்து போயின. பலர் தங்கள் தொப்பிகளில் அவற்றை சேகரிக்க முயன்றும் அகப்படவில்லை. இந்த மலர் மழை இதற்கு பிறகும் பல சந்தர்ப்பங்களில் திருயாத்திரை வேளைகளில் இதேபோல் பொழியப்பட்டதை திருப்பயணிகள் கண்டிருக்கிறார்கள். லெயிரியா ஆயரும் தம் கண்ணால் இதை கண்டிருக்கிறார்.

தேவ அன்னை சிறுவர்கள் மூவரையும் அன்புடன் பார்த்து கூறினார்கள்.

**இந்தப் போர் முடிவடையும்படி தொடர்ந்து ஜெபமாலையை செபித்து வாருங்கள். ஐப்பசி மாதம் நமதாண்டவரும் வியாகுல அன்னையும், கார்மேல் மாதாவும் ஆகிய நாம் இங்கு வருவோம் உலகத்தை ஆசீர்வதிக்க புனித சூசையப்பர் குழந்தை இயேசுவுடன் தோன்றுவார். உங்களுடைய பரித்தியாகங்களால் இறைவன் மகிழ்கின்றார். ஆனால் அந்த கயிற்றோடு நீங்கள் உறங்குவதை அவர் விரும்பவில்லை. அதை பகலில் மட்டும் அணித்துக்கொள்ளுங்கள்.**

(கயிறு என்றால் சிறுவர்கள் மூவரும் தபசுக்காக பெரிய சனல் கயிரை அணிந்திருந்தார்கள். அந்தக் கயிறு அவர்கள் மூவருக்கும் பெரும் வேதனையை கொடுத்தது. இந்த வேதனையை அவர்கள் பாவிகளுக்காக ஒப்புக் கொடுத்தார்கள்.

தேவ அன்னை இவ்வாறு பேசிய பின், லூசியா மக்கள் அவளிடம் கேட்டுக்கொண்ட விண்ணப்பங்களை கூறினாள். அதற்கு நம் அன்னை மறுமொழியாக


**'அவர்களின் சிலரைக் குணப்படுத்துவேன். மற்றவர்களை அல்ல, ஐப்பசி மாதம் எல்லோரும் நம்புபடி ஒரு அற்புதத்தைச் செய்வேன்'** என்றார்கள். லூசியாவின் பக்கத்தில் சிறுமி, லூசியாவிடம் Eau-de-cologne போத்தலை கொடுத்து அதை மாதாவுக்கு கொடுக்க சொன்னாள். லூசியாவும் அதை வாங்கி மாதாவிடம் நீட்டினாள். அதற்கு நம் அன்னை **'இது பரலோகத்தில் தேவைப்படாது'** என்றார்கள். இதன் பின் மாதா செல்ல எழுந்தார்கள். லூசியா கூட்டத்தைப் பார்த்து **'அவர்களை காண வேண்டுமானால் அதோ பாருங்கள்'** என்று கூறி **'அதோ அவர்கள் போகின்றார்கள்'** என்றாள். அந்த வெண்மேகம் எழுந்து வானில் மறைந்தது.

இவ்வைந்தாம் காட்சியில் குழந்தைகள் மூவரும் திடம் பெற்றார்கள். மிகுந்த ஆறுதலும் அடைந்தார்கள். மேலும் இரவு உறங்கும்போது கயிற்றை எடுத்து விடும்படி மாதா கூறியது உண்மையிலேயே அவர்களுக்கு பெரும் விடுதலையாகயிருந்தது. ஐந்தாம் காட்சிக்கு அதி சங் ஜோன் குவா ரெஸ மாவும் வந்திருந்தார். இவர் லெயிரியா மேற்றாசன அதி சிரேஷ்டர் தேவ அன்னையைக் காணாவிட்டாலும் அவர்களை பூமிக்கு கொண்டு வந்த வெண் மேகத்தைக் கண்டார். அது தனக்கு கிடைத்த பாக்கியம் என்று கருதினார். வானிலிருந்து பொழியப்பட்ட வெண் மலர்களையும் கண்டார்.ஆனால் இக்காட்சிகளை ஆராய்ந்து கூறும்படி அனுப்பப்பட்டிருந்த சங் டாக்டர் மனுவேல் நுன் போர்மிகோவுக்கு ஒன்றும் தென்படவில்லை. சூரிய ஒளி மங்கியதைக் கண்டார். ஆனால் அது ஆகாய மாற்றமாக இருக்கலாம் என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

**காட்சிகள் தொடரும்...**

# புனித யோண் மரிய வியானி

**ஆவணி 04ஆம் திகதி**



மறைமாவட்டக் குருக்களுக்கும் முன் உதாரணமாகவும், பாதுகாவலராகவும், மரிய வியானி விளங்குகின்றார். இவர் 1786ஆம் ஆண்டு மே 08ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் உள்ள லியொன்ஸ் என்னும் இடத்தில் பிறந்தார். 13ஆம் வயதில் தான் குருவாக வரவேண்டும் என்ற தனது விருப்பத்தை தந்தையிடம் தெரிவித்தார். இவருடைய தந்தை இவரை ஏவோயில் உள்ள கத்தோலிக்கப் பாடசாலையில் சேர்த்தார். ஆரம்பத்தில் லத்தீன் மொழியை படிப்பதில் மிகவும் சிரமப்பட்டார். லத்தீன் மொழியை படிக்க சிரமப்பட்டாலும் அதிவண. குரு கோர்பொன் இவரை பற்றி நன்கு அறிந்து, மிகுந்த அன்பு காட்டி குருவாக திருநிலைப்படுத்த பரிந்துரைத்தார்.

இவர் தமது முதல் அருட்பணியை பெல்லியன் (Bally) பங்கில் ஆரம்பித்தார். பின்னர் 1817ஆம் ஆண்டு ஆர்ஸில் மோம்பே என்ற இடத்திற்கு பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். ஏழைகள் நிறைந்த பங்காக இருந்தாலும் இறைவன் தந்த பணி என்று நினைத்துக் கொண்டு இந்தப் பங்கை ஒரு விசுவாசம் மிக்க பங்காக மாற்ற அயராது உழைத்தார். மரிய வியானியின் சிறப்பு அல்லது மிகப் பெரிய அற்புதம் என்னவென்றால் அவருடைய பாவசங்கீர்த்தனம் கேட்டும் தன்மை, மக்களின் பாவங்களுக்காக கண்ணீர் விட்டு அழுதார். தன்னை கசையால் அடித்துத் தண்டித்துக்கொண்டார். பல எதிர்ப்புக்கள் சோதனைகள் மத்தியிலும் சிறப்பான பணி செய்தார். ஏழைகளின் நண்பனாக திகழ்ந்தார். கைவிட்டப்பட்டவர்களுக்காக "இறைபராமரிப்பு" என்ற பெயருடன் மடம் ஒன்றை நிறுவி அவர்களைப் பாதுகாத்தார். அவருடைய மறையுரைகள் மிகுந்த அர்த்தமுள்ளவையாகவும் இருந்தன. இதன் விளைவாக பல மக்களை இவர் தனது வாழ்வாலும் பணியாலும் ஈர்த்துக்கொண்டார். இறுதியாக அவருடைய அயராத இறைபணி ஆகஸ்ட் 4ஆம் திகதி 1859ஆம் ஆண்டு முடிவடைந்தது. இவரது உயர்ந்த இறைபணி வாழ்வையும் ஆன்மீக வாழ்வையும் அறிந்து கொண்ட அன்றைய திருத்தந்தை 11ஆம் பயஸ் 1925ஆம் ஆண்டு இவரை பங்குக் குருக்களின் பாதுகாவலராகவும் மக்களுக்கு சிறந்த ஆன்ம வழிகாட்டியாகவும் பிரகடனப்படுத்தினார்.

## வையகம் போற்றும் மாமரி

மண்ணக மக்கள் நாளும் போற்றும்,
விண்ணக அன்னையே வாழி வாழி
எண்ணமெல்லாம் ஈடேற்றும் தாயவள்
கண்போல் காக்கும் மாணிக்கமானவள்

தங்கமயமிகு ஆலயமானவள்
எங்கும் உற்றது செய்யும் தூயவள்
பங்கமில்லா தயைமிகு பூமகள்
திங்களாய்த் திகழும் அன்பிலானவள்.

தாவீதரசன் உப்பரிகையானவள்
ஆவியானவர் அருள் நிலை பெற்றவள்
பாவியற்கடைக்கல அன்னையானவள்
கூவியழைப்போர் குறை கேட்பவள்

ஞானம் நிறை கன்னியானவள்
கானக மலராய் மனதில் மலர்பவள்
வானகத் தந்தை ஆசீர் பெற்றவள்
தானாய் வந்து கவலை களைபவள்

மாசில்லாத மனதால் நம்மில் நிறைபவள்
இலங்கை நாட்டின் காவலியானவள்
நேசிப்போர் மட்டில் நிறைந்து நிற்பவள்
பார் போற்றும் மாமரி வாழ்க!!!

## 01 ஒவ்வொரு பிள்ளையின்...

அவர்கள் இழக்கும் விதமான செயற்பாடுகளுக்கு திணிக்கப்பட்டும் வருகின்றார்கள். எனவே அத்தகைய விடயங்களில் இருந்து அவர்களை காப்பாற்றி, பாதுகாத்து இயேசு கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்ல வேண்டிய மேலான பொறுப்பு ஊக்குவிப்பாளர்களாகிய உங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது" எனவும் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் அண்மையில் கொழும்பு மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் உள்ளக அரங்கில் நடைபெற்ற திருப்பாலத்துவ சபையின் விசேட ஒன்றுகூடல் நிகழ்வில் உரையாற்றிபோது, சிறுவர்கள் குறித்து இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் திருப்பாலத்துவ சபையின் ஆரம்பம் முதல் இன்றுவரை பயிற்சிப் பெற்று பணியாற்றுகின்ற ஊக்குவிப்பாளர்கள், முன்னாள் தேசிய இயக்குனர்கள், மறைமாவட்ட இயக்குனர்களாக பணியாற்றிய அருட்தந்தையர்கள், வட்டார இயக்குனர்கள், திருப்பாலத்துவ சபையின் மூலம் உருவாக்கப்பட்ட அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்ததோடு, திருப்பாலத்துவ சபையின் ஆரம்ப கர்த்தாவான அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இவ்வொன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றதுடன், திருப்பாலத்துவ சபையின் இயக்குனர் அருட்பணி பெசில் ரொஹான் அடிகளாரின் வழிநடத்தலுடன், திருப்பாலத்துவ சபையின் பாப்பிறை மறைபரப்புச் சபைகள் அலுவலகத்தினால் இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

திருப்பாலர் சபையின் தேசிய இயக்குனர் அருட்பணி பெசில் ரொஹான் அடிகளார், தனது உரையில் "இயேசுவின் அன்பினை உலகெங்கும் எடுத்துச் சென்று அனைத்து மறைமாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு உட்புற பகுதிகளுக்கும் கொண்டு சென்று, திருப்பாலத்துவ சபையின் வழியாக சின்னஞ்சிறிய புனிதர்களை உருவாக்க இப்பணியின் ஊக்குவிப்பாளர்களாக பணியாற்றும் நாம் ஒவ்வொருவரும் முயற்சி எடுக்க வேண்டும், என்றும் நாளை தினம் எம் மத்தியில் இருந்தும் புனிதர்கள் உருவாகுவதற்கு நாம் இன்றிலிருந்தே இறை இயேசுவின் நற்செய்தி விழுமியங்களின் சிறந்த முன்மாதிரிகைகளின் வழியாக அவர்களுக்கு நல் வழிகாட்ட வேண்டும் தெரிவித்தார்.

இத்தேசிய பேரணியில் 20 வருடங்களுக்கு முன்பு மிகுந்த அர்ப்பணிப்புடனும், தியாக உணர்வுடனும் ஊக்குவிப்பாளர்களாக பணியாற்றிய பழைய அங்கத்தவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தகவல் : திலின அலஹகோன்**

**படங்கள் : பிரபாத் றுவந்த்த பர்னாந்து**

## 01 கொழும்பு செக்கடித்தெரு...

அன்றைய தினம் திருவிழா சிறப்புத் திருப்பலியை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை மற்றும் பங்குத் தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே, திருவிழாவில் மறையுரை ஆற்றிய அருட்தந்தை அருள்ராஜ் (C.M) இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். திருப்பலி நிறைவில் புனித அன்னம்மாளின் ஆசீர்வாதம் ஆண்டகையினால் வழங்கப்படுவதை படத்தில் காணலாம். **தகவல் : டிக்சன் பர்னாந்து**

## 01 திருத்தந்தையின்...

மரியாஞ்செலா கிரிஷோட்டி (Mariangela Crisciotti) என்ற கலைஞரால் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பதக்கத்தின் ஒரு புறம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் தலைமைப்பணிக்கென தெரிவுசெய்த இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இப்பதக்கத்தின் மறுபுறம், ஒரு மனிதர் தன் கரங்களை நீட்டி, மற்றொருவருக்கு உதவுவதுபோலும், அவருக்கு அருகே ஒரு பெண், குழந்தை ஒன்றை ஏந்தியிருப்பது போலும் சித்திரிக்கப்பட்டுள்ளது. உதவி பெறும் மனிதர் இயேசுவின் சாயலில் இருப்பதுபோல் உருவாக்கப்பட்டுள்ள இவ்வடிவத்தின் பின்னணியில், படகு ஒன்றும், "அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்" (மத். 25:35) என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆபத்தான கடல்பயணங்களை மேற்கொள்ளும் புலம்பெயர்ந்தோரைக் குறிக்கும் வண்ணம் இந்தப் பதக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 01 கத்தோலிக்க...

அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட ரீதியில் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதை அறியத் தருகிறோம். விண்ணப்பப்படிவங்கள் இதுவரை கிடைக்கப்பெறாத அல்லது விண்ணப்பப்படிவங்கள் போதுமானதாக இல்லாத மறைபாடசாலை முதல்வர்கள், கீழ்காணும் முகவரிக்கு அலுவலக நேரங்களில் வந்து அல்லது தமது பங்கிற்கு தேவையான விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு தபால் மூலமாக அல்லது கீழ்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

**முகவரி:- பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சை கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு. தொலைபேசி எண். 011-2785230 / 011-2177075**

**நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பங்கு ரீதியாக 24.08.2017 க்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.**

**அருட்பணி பியல் ஜானக்க**
**தேசிய மறைக்கல்வி இயக்குனர்.**

## 06 மன அமைதிக்கான வழி

அது நாளடைவில் ஓர் உணர்ச்சி வயப்பட்ட (கற்பனை ஏற்றமடைந்த) எண்ணமாக மாறிவிடும். பின், நாம் இயல்பு நிலைக்குத் திரும்புவதே கடினமாகி விடும். மனதிற்கும் அமைதி கிடைக்காமல் போய்விடும்.

ஆக, எண்ணங்களை அதன் உருவாக்கத்திலேயே ஆராய்ந்து செயல்பட்டு, ஆசையை ஒழுங்குபடுத்தி, கோபத்தை அறவே மறந்து, கவலையைத் தவிர்த்து, உலக மாந்தர்கள் அனைவரும் இந்த நாள் முதல், இனிதே தொடரும் நூற்றாண்டுகளிலும் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும், அமைதியுடனும், இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறையாற்றலைப் பிரார்த்திப்போம்.

## 11 ஒரு மணி நேரம்...

இளைஞன் வலியால் துடித்தவனாக, "ஆம் நீ சரியாகச் சொன்னாய். நான் விரும்புவது ஒன்றும், செய்தது வேறொன்றுமாக ஆகிவிட்டதை இப்போது உணர்கின்றேன். ஆயினும் பயனில்லையே" என்று விம்மி, விம்பி அழுதான். தேவதை அவனிடம், "இதோ பார், நீ அழுதே உன் ஐம்பது நிமிடங்கள் சென்று விட்டது. இன்னும் உனக்குப் பத்து நிமிடங்கள் தான் உள்ளது. உன் ஆசையை விரைந்து நிறைவேற்று" என்றது.

இளைஞன் தேவதையிடம், ஒரு பேப்பரும், பேனாவும் கேட்டான். தேவதை அவனுக்கு உடனே அதைக் கொடுத்தது. இளைஞன் அதில் வேகமாக எழுதினான். "அன்பு நண்பர்களே, ஒவ்வொரு நாளையும் இன்றே இறுதி நாள் என்று கருதிக் கொண்டு, ஒவ்வொரு நொடியையும் வீணாக்காமல் வாழுங்கள். காரணம் நேரம் உயிரை விட மேலானது" என்று எழுதினான். வலியோடு அவன் இந்த வார்த்தைகளை எழுதி முடித்ததும் தயவுசெய்து என் உடலைக் காணவரும் என் நண்பர்களிடம் இதைக் காட்டி என் இறுதி வேதனையைச் சொல்லிவிடு" என்று கூறினான்.

அதன் பிறகு அவன் அழவில்லை. அவன் உயிர் பிரிந்திருந்தது. கடிதத்தை நண்பர்களிடம் ஒப்படைக்க தேவதை பறந்தது. இந்தக் கதை கற்பனைக் கதையல்ல, உயிர்போகும் நேரத்தில் பலர் உணர்கின்ற ஒரு உண்மையின் வெளிப்பாடு. நேற்று வரை நம்மோடு இருந்த பலர் இன்று நம்மோடு இல்லை. எனவே, இன்று நமது இருப்பு என்பது ஏதோ ஒரு காரணத்திற்காக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்தக் காரணத்தை நல்ல காரணமாக மாற்றிக் கொண்டால் இந்த நாள் இனிய நாளாக அமையும். ஒவ்வொரு நாளும் இனிய நாளாக அமையும். ஒவ்வொரு நாளும் இன்று இறுதி நாளாக இருந்தால் எப்படி அந்த இளைஞனைப் போல உணர்வோமோ, அதை உணர்ந்து கொண்டு "ஆஹா, இந்த நிமிடம் முக்கியமானது, நான் இன்று நல்லவற்றைச் செய்துவிட வேண்டும்" என்று பயனுள்ள வகையில் நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தினால் நம் உழைப்பைக் காணும் எமதர்மன் கூட நம்மை நெருங்க அச்சப்படுவான்.

எப்போதும் பயனுள்ள வகையில் உழைக்கின்ற போது நேரத்தை நாம் ஆளுகை செய்கின்றோம். எனவே வாழ்க்கை நமக்கு இந்த நேரங்களில் எல்லாம் கூடுதல் மகிழ்ச்சியையும், பலத்தையும் தரும் என்பது நிதர்சனம்.

## XIX பொன்னான வாய்ப்பு

கோடான போடி நிறங்கள் உதய சூரிய ஒளிக்கதிர்களில் ஒளி வீசின. அக்கற்கள் அனைத்தும் விலை உயர்ந்த நவரத்தினக் கற்கள் எனக் கண்டு எல்லயில்லா மகிழ்ச்சியடைந்தனர். கற்களை எடுக்கத் தவறியவர்கள், ஆழ்ந்த துக்கத்தை அனுபவித்தனர்.

இவ்வுலக வாழ்க்கை நித்திய வாழ்விற்குப் பயன்கொடுக்கும் நற்கிரிகைகள் என்ற விலை மிகுந்த கற்களை சேகரித்துக் கொள்ள இறைவன் நமக்கு அளித்திருக்கும் பொன்னான வாய்ப்பு. இதை பயன்படுத்திக் கொள்வோம்.

## 01 கொழும்பு உயர்மறைமாவட்ட...

கொழும்பு உயர் மறைமாவட்டத்தால் 2017 ஆடி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவில், நமது கிருலப்பனை, திரு இருதயநாதர் ஆலய மறைப்பாடசாலையைச் சேர்ந்த செல்வன் மேஷாக் செபஸ்டியன் (தரம் - 7) முதலாம் இடத்தையும், செல்வி எரின் வனிசா பிரதீப்குமார் (தரம் - 8) மூன்றாம் இடத்தையும் தட்டி எம் ஆலயத்திற்கு புத்துணர்ச்சியை ஊட்டினர். எமது பங்கு சமூகத்தின் சார்பில் இவ்விருமாணவர்களுக்கும் எம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**தகவல் : ஆன் சஹானா**

### பிழை திருத்தம்

கடந்த ஆடி மாதம் 16ம் திகதி வெளியான ஞானஒளி பத்திரிகையில் 9ம் பக்கம் சுதேச குருக்கள் துறவியர் தினம் 31.07.2016 என தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது. 31.07.2017 என்பதே சரியானது.


**அனைத்துப் புனிதர்களின் முதியோர் சங்கம் திருமண அலுவலகம்**

அனைத்து புனிதர்களின் முதியோர் சங்கம், அனைத்து புனிதர் தேவாலயத்தின் அனுசரனையுடன் திருமணம் செய்யும் வயதிலுள்ள கிறிஸ்தவ இளைஞர், யுவதிகளின் வசதிக்காக (திருமண சேவை அலுவலகமொன்றை ஆரம்பித்துள்ளது). பொருத்தமான துணையை தேடிக் கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் இவ் அலுவலகத்தின் உதவியை நாடலாம். பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான மணமகன், மணமகள் தேடும் பணியும் இங்கு நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆர்வமுள்ளோர், தேவாலய பங்கு அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளும்படி ஆலோசனை வழங்கப்படுகின்றது. சிரேஷ்ட முதியோர் அங்கத்தவரை நடமாடும் தொலைபேசி 075 - 3200703 இலக்கத்தில் தொடர்பு கொள்ளமுடியும்.

ஒவ்வொரு மாதமும் 2ம், 4ம் திங்கட்கிழமைகளில் மாலை 300 மணிக்கும் 500 மணிக்கும் இடையில் முன்னரே சந்திக்கும் நேரத்தைப் பெற்று சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து கொள்ளவும். (N 2773)



**விற்பனைக்கு :** றாகமை புகையிரத நிலையத்திற்கும், வைத்தியசாலைக்கு 1½ m தூரம் ஆகும். தேவத்தை ஆலயத்திற்கு 100 m தூரத்தில் எல்லா வசதிகளுடனும் 3 அறைகள் கொண்ட வீடு (50 லட்சமாகும்).

**தொடர்புக்கு 077-8641608** (N 3076)


## 03 விண்ணேற்பு அடைந்த...

இருள் சூழ்ந்த இவ்வுலக வாழ்வில் அருள் ஒளிகாட்டி, இருகரம் நீட்டி இறைவனின் திருவுளப்படி தூய ஆவியானவரின் அருளைப் பெற்று, இறைஇயேசுவை மகனாய் ஈன்று திருநிறை அரசியாக வீற்றிருந்து தன்னைத்தேடி, ஆறுதலும் தேடுதலும் பெற தினம் தினம் ஓடிவரும் மக்களுக்கு நன்மைகளை நாள்தோறும் வாரி வழங்கிப் பாதுகாக்கும் பரலோக, பூலோக அரசியாம் ஆரோபண அன்னையை பணிந்து வணங்கினால் அனைவரும் அனைத்து நன்மைகளையும் பெறுவது உறுதி. எனவே அன்னையிடம் வேண்டினால் தோல்வி அடைய மாட்டோம். அன்னையைப் பார்த்தால் பரிதவிக்க மாட்டோம் என்பதை சிந்தனையிலே கொண்டு பிறப்பிலே மாசற்றவளே வாழ்க! இறப்பிலே தன் உடல் அழியாதவளே வாழ்க! விண்ணேற்பின் விடிவெள்ளியே வாழ்க! வாழ்க! என வாழ்த்தி தினமும் அன்னையைப் போற்றுவோம். அன்னை மரியாளிடம் நம்மையும் நாட்டையும் வைப்போம். அன்னை மரியாளின் விண்ணேற்பு நமது தனி மனித, சமுதாய விடுதலை உணர்வை நம்மில் ஏற்படுத்தட்டும். உண்மையான விடுதலை பெற்ற மக்களாக விண்ணகம் நோக்கி நடைபயிலும் திருப்பயணிகளாக வாழ முற்படுவோம்.

## XVI அல்சர்....

எதுக்களிப்பை ஏற்படுத்தும். அதனால் வயிற்றின் ஓரங்கள் எல்லாம் பாழாகும். ஏற்கனவே அல்சர் இருப்பவர்களின் நிலை இன்னும் மோசமாகிவிடும். அதிகம் மிளகாய் தூள், மிளகாய் சேர்த்த உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**காபி:**
"தொடர்ந்து காபி குடிப்பதாலும் பெப்டிக் அல்சர் ஏற்படும்" என்கிறது நவீன மருத்துவம். காபிக்கு பதிலாக, வயிற்றுக்கு இதம் தரும் மாதுளை ஜூஸ், ஆப்பிள் ஜூஸ் போன்ற வேறு ஏதேனும் பானங்களை அருந்தலாம். இவற்றால் வயிற்று புண் ஆறவும் வாய்ப்புள்ளது.

**குளிர்பானங்கள்:**
காபிக்கு பதிலாக விதவிதமான குளிர்பானம் குடிப்பவராக இருந்தாலும் அதுவும் பிரச்சினையே. சோடாவிலும் குளிர்பானங்களிலும் இருக்கும் சிட்ரிக் அமிலம், வயிற்றின் அமிலத்தன்மையை அதிகரிக்கக்கூடியது. இது, செரிமானத்திலும் பிரச்சினையை ஏற்படுத்தும். அல்சர் இருப்பவர்கள் சோடாவையோ, குளிர்பானங்களையோ அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**பால்:**
அல்சர் உள்ளவர்கள் பால் மற்றும் பால் உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. சிலர் பாலை குடித்தால் அல்சர் குணமாகும் என நினைக்கிறார்கள். ஆனால், பாலில் இருக்கும் புரத சத்தும் கொழுப்பு சத்தும் வயிற்று புண்ணுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். பால், வயிற்றின் அமில தன்மையை அதிகரிக்க செய்யும்.

**சிவப்பு இறைச்சி:**
இந்த இறைச்சி, வயிற்று ஓரங்களை பழுதடைய செய்யும். இதில் உள்ள அதிகளவிலான புரத சத்தும், கொழுப்பு சத்தும் செரிமானத்துக்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். அதனால், வயிற்றிலேயே அதிக நேரம் இறைச்சி உணவு தங்கிவிடும். இதனாலும், வயிற்றில் அமிலம் அதிகம் சுரக்க நேரிடும். இதுவும் அல்சரை அதிகரிக்க செய்யும்.

**சாப்பிட வேண்டியது:**
முதலில், அல்சர் உள்ளவர்கள் நேரத்துக்கு சாப்பிட வேண்டியது அவசியம். நார்ச்சத்துள்ள காய்கறிகள், பழங்கள் செரிமானத்தை சீராக வைத்திருந்து, அல்சரில் இருந்து காக்கும். முட்டை, தயிர், மீன், பீன்ஸ் ஆகியவற்றை அதிகமாக உட்கொள்ளலாம். உணவில் புதினாவை சேர்த்துக்கொள்ளலாம். தேங்காய்ப் பால், மணத்தக்காளி கீரை ஆகியவை வயிற்று புண்ணை ஆற்றும். தானியங்கள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை சேர்த்துக்கொள்ளலாம். தேவையற்ற உணவுகளை தவிர்த்தால், விரைவில் அல்சர் பிரச்சினையில் இருந்து மீளலாம்.







கர்ப்ப காலத்தில் சாதாரண காய்ச்சலைத் தாண்டி, பன்றிக்காய்ச்சல், டெங்கு காய்ச்சல் ஆகிய பிரச்சினைகள் ஏற்பட்டால் பெண்கள் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும்.

கர்ப்ப காலத்தில் காய்ச்சல் வருவது இயல்பானது. ஆனால், பன்றிக்காய்ச்சல், டெங்கு காய்ச்சல் ஆகிய பிரச்சினைகள் ஏற்பட்டால் கர்ப்பிணிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கர்ப்பத்தின் காரணமாக இவற்றின் விளைவுகள் கடுமையாகிவிடும் என்பதால் இந்த எச்சரிக்கை அவசியமாகிறது.
சாதாரண காய்ச்சல் ஏற்படும்போது கர்ப்பிணிக்கோ, கருவில் வளரும் சிசுவுக்கோ அவ்வளவாக ஆபத்து ஏற்படுவதில்லை. அப்படியே ஆபத்து இருந்தாலும் இன்றைய நவீன சிகிச்சைகளால் அதை எளிதில் எதிர்கொள்ள முடியும்.

**டெங்கு:**

டெங்கு (Dengue) எனும் வைரஸ் கிருமிகளின் பாதிப்பால் வருகிறது. கர்ப்பிணிகளுக்கு இந்த நோய் ஏற்பட்டால் ஆபத்துகள் அதிகம். குறைப்பிரசவம் ஆகவும், எடை குறைவான குழந்தை பிறக்கவும் அதிக வாய்ப்புண்டு. கர்ப்பிணியிடமிருந்து சிசுவுக்குக் கிருமிகள் பரவி, பிறக்கும் போதே குழந்தைக்கு டெங்கு வரலாம். கர்ப்பிணிக்கு அதிக இரத்தப்போக்கு ஏற்படலாம். வயிற்றிலும் நுரையீரலிலும் நீர் கோர்த்துக் கொள்ளலாம். கல்லீரலும் சிறுநீரகமும் பாதிக்கப்படலாம். இரத்த அழுத்தம் குறைந்து கர்ப்பிணியின் உயிருக்கு ஆபத்து வரலாம். எனவே, தட்டணுக்கள் பரிசோதனை, இரத்த உறைவுக்கான பரிசோதனைகள், கல்லீரல் மற்றும் சிறுநீரக செயல்பாட்டுப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு, இந்த விபரீத விளைவுகளைத் தடுப்பதற்கான சிகிச்சைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**பன்றிக்காய்ச்சல்:**

இன்ஃபுளுயன்சா A (H1N1) என்னும் வைரஸ் கிருமியால் பன்றிக்காய்ச்சல் நோய் வருகிறது. கர்ப்பிணிகளை இது பாதித்தால், காய்ச்சல் கடுமையாவதுடன், மூச்சுக்குழாய் அழற்சிநோய், நிமோனியா, சுவாசத்தடை நோய்(ARDS), மூச்சுச்-சிறுகுழாய் அழற்சி நோய், இதயத்தசை அழற்சி நோய், மூளைக்காய்ச்சல், சிறுநீரகச் செயலிழப்பு என்று பலதரப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தி உயிரிழப்பு வரை கொண்டு வந்துவிடும். இது கருவில் வளரும் குழந்தையையும் பாதிக்கும்.

குறிப்பாக, கருச்சிதைவு ஏற்படலாம். குறைப்பிரசவம் நேரலாம். குழந்தை இறந்தும் பிறக்கலாம். குழந்தைக்கு நரம்பு மண்டலத்தில் பிறவி ஊனங்கள் உண்டாகலாம். இந்த நோய் அடுத்தவர்களுக்குப் பரவுவதைத் தடுக்க, இந்த நோயுள்ளவர்கள் இருமும் போதும் தும்மும் போதும் மூக்கையும் வாயையும் சுத்தமான கைக்குட்டையால் மூடிக்கொள்ள வேண்டும். கைகளை அடிக்கடி சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும். கர்ப்பிணிகள் முகத்தை மூடிக்கொள்வதற்கு முகமூடி அணிவதாக இருந்தால், மூன்றடுக்கு முகமூடி அல்லது N95 ரக முகமூடி அணிந்தால்தான் நல்ல பலன் கிடைக்கும்.

வீரியம் குறைக்கப்பட்ட மூவகை நுண்ணுயிரித் தடுப்பூசி (Trivalent inactivated vaccine – TIV) பன்றிக் காய்ச்சலைத் தடுக்கிறது. கர்ப்பம் ஆவதற்கு முன்பும் இதைப் போட்டுக் கொள்ளலாம் கர்ப்பம் ஆன பிறகும் இதைப் போட்டுக் கொள்ளலாம். ஆனால், இது ஓராண்டுக்குத்தான் நோயைத் தடுக்கும். எனவே, வருடா வருடம் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்கிறவர்களுக்குப் பன்றிக்காய்ச்சல் எப்போதும் வராது. பன்றிக்காய்ச்சலைத் தடுக்க “நேசல் ஸ்பிரே தடுப்பு மருந்து” ஒன்று உள்ளது. இதை கர்ப்பிணிகள் பயன்படுத்தக் கூடாது.




மனித வாழ்வில் நாம் உண்ணும் உணவே நம்மை உயிரோடு வாழ வழிகாட்டுகிறது. எப்பொழுதும் ஒரே வகையான உணவை எடுத்துக் கொள்வது, உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல. பல வகையான இயற்கை உணவைக் கையாள்வது கடைப்பிடிப்பது உடல் ஆரோக்கியமாக இயங்கச் செய்யும். காரணம் என்னவென்றால், நமது உடல் பல உயிரணுக்களாகவும், பல இயக்கங்களாகவும் அமைந்திருக்கிறது. அதற்குத் தேவையான சத்துக்களை நாம் தருவது நமது கடமையாகும்.

இயற்கை உணவை நாம் பயன்படுத்தும் போது குணமாகும் நோய்களை, சுருக்கமாக இந்தக் கட்டுரையில் தெரிந்து கொள்வோம்.

**வெந்தயம் :**
சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தவும், குடல் புண்களை குணமாக்கவும், உடல் சூட்டினைக் குறைக்கவும் பயன்படும் மாமருந்து.

**சீரகம் :**
அஜீரணத்தைப் போக்கவும், உடலிலுள்ள கெட்ட நீரினை அகற்றவும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தவும் உதவும் அற்புத மருந்து.

**மிளகு :**
சளி, இருமல், சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வுகாண உதவும் தெய்வீக மருந்து.

**பூண்டு :**
கொழுப்பு சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வுகாண உதவும், ஆயுளும் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தைப் பலப்படுத்தும் ஆற்றல் மிக்க மருந்து.

**வெள்ளைக் கடுகு :**
வாயு சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண உடல் நரம்பு, எலும்பு சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு காண உதவும் அரிய மருந்து

**கொள்ளு :** இதனை வேகவைத்து அல்லது முளைக்கட்டி 2 வீதங்களில் சாப்பிட்டு வர உடல் எடை குறையும், உடல் இளமையாக, வலிமையாக மாற்றும் மாமருந்து


**சுக்கு :**
இதனைக் கசாயமாக வைத்துக் குடித்துவர, வயிறு சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு காணலாம். மேலும், உடல் சுறுசுப்பாக இயங்க உதவி செய்யும். உடல் நரம்புகள் பலம் பெற வழிகாட்டும் அற்புத மருந்து

**எள்ளு :**
இதனை அன்றாட உணவில் சேர்த்துவர உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகி, உடலைப் பாதுகாக்கும். மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற மகத்துவமான மருந்து.

இவ்வாறு நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவே நமது உயிராகிறது. இவ்வுலகைப் படைத்த இறைவன், அனைத்து உயிரினங்களுக்கும் சிறப்பாக, ஆரோக்கியத்துடன் வாழ வழி செய்கிறார். நமக்குக் கிடைத்த ஆரோக்கிய வாழ்வை நாம் சிறப்பாக பாதுகாப்பது, வழிநடத்துவது நமது கடமை. இறைவன் நமக்கு இயற்கை மூலமாகத் தரும் அனைத்து உணவும் உயிர் வாழ்வதற்காகத்தான். உணவே மருந்து அனைத்து உணவும் உயிர் வாழ்வதற்காகத்தான்.

உணவே மருந்து, அந்த மருந்து மனிதர்கள், மருத்துவர்கள் தரும் மருந்தல்ல, மாறாக, இறைவன் தரும் தெய்வீக மருந்தாகும்.

# ‘அல்சர் ....’ “அல்சர் ....” உள்ளவர்களுக்கான உணவுக் கட்டுப்பாடு!



**தவிர்க்கவேண்டியவை!**

**உண்ண வேண்டியவை!**

அல்சர் என்பது உணவுக்குழாய், இரைப்பை மற்றும் சிறுகுடலின் உட்சுவரில் உருவாகும் ஒருவகை புண். இது பாதிக்கப்பட்டவரை பலவித தொந்தரவுகளுக்கு ஆளாக்கும்.

ஆன்டாசிட்கள் (Antacids) அல்லது ஆன்டிபயாட்டி-க்ஸ்களை (Antibiotics) பயன்படுத்தி இதன் வீரியத்தை குறைக்கலாம். அல்சர் வருவதற்கான அறிகுறிகள் தெரியும்போதே தடுக்கலாம். அல்சரால் பாதிக்கப்பட்டவர்கள் எந்த வகை உணவுகளை சாப்பிடலாம், எவற்றைச் சாப்பிடக்கூடாது என்பதை தெரிந்துவைத்திருக்க வேண்டும். உணவு பழக்கத்தில் கவனமாக இருந்தாலே அல்சர் பிரச்சினையில் இருந்து எளிதாக விடுபடலாம். உணவுகளில் கவனமாக இருந்தால், செரிமானமின்மை, வாயுத்தொல்லை, வாந்தி எடுத்தல், உணவை பார்த்தாலே அருவருப்பாக உணர்தல் ஆகியவை தவிர்க்கப்படும். வயிற்றில் ஏற்படும் கடுமையான எரிச்சல் உணர்வையும் இதனால் தடுத்துவிடலாம். அல்சர் உள்ளவர்கள் அவசியம் தவிர்க்கவேண்டிய உணவு வகைகள் இதோ...

**ஆல்கஹால்:**
தொடர்ந்து மது பழக்கம் உள்ள ஒருவருக்கு, பலவகை நோய்களுடன் அல்சரும் வந்து சேரும். ஏற்கனவே அல்சர் இருப்பவர்கள் மது இருக்கும் பக்கம் திரும்பி பார்க்கவே கூடாது. குடிப்பழக்கத்தால் நம் வயிற்றில் அமிலம் மென்மேலும் அதிகரிக்கத்தான் செய்யும்.

**காரமான உணவுகள்:**
அல்சருக்கு ஆகவே ஆகாதது காரம். காரமான உணவுகளும் அதிக மசாலா சேர்த்த உணவுகளும் அமிலத்தின் அளவை அதிகரிக்கும்.....

15ம் பக்கம்




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"இறைவனும் மனிதனும் சந்திக்கும் புனித மலையாம் இயேசுவை நோக்கி அழைத்துச் செல்லும் பாதையில் அன்னை மரியா நம்மை வழிநடத்துவாராக"

"இனவெறியின் அனைத்து முறைகளையும், சகிப்பற்ற தன்மை மற்றும், மனிதர் பொருளாகப் பயன்படுத்தப்படுவதையும், நாம் விலக்கி நடக்க வேண்டும்"

"மாஃபியா கும்பல்களுக்குப் பலியானவர்களுக்காக நாம் செபிப்போம், ஊழலுக்கு எதிராக போராட்டங்களைத் தொடர்வதற்குத் தேவையான சக்தியைக் கேட்போம்"

"நமக்கு உதவி தேவைப்படும்போது, தந்தையாம் இறைவனை நோக்கி திரும்புவோம். அவரே நம்மை அன்போடு உற்று நோக்கி கவனித்து வருகிறார், மற்றும், அவர் நம்மை ஒருநாளும் கைவிடாதவர்"

"புனித இஞ்ஞாசியாரைப்போல் நாம் இயேசுவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவும், அவரால் வழி நடத்தப்படவும் நம்மை அனுமதித்து, பிறருக்கு சேவை புரிவதில் நம்மை அர்ப்பணிப்போம்"

"நவீன அடிமைத்தனத்தின் அனைத்து வடிவங்களையும் எதிர்த்துச் செயல்பட, நல்மனம் கொண்டோரையும், அனைத்து விசுவாசிகளையும் அழைக்கிறோம்"

"ஒவ்வொரு சமூகத்தின் மிக அவசியத் தேவையாக இருக்கும், மனித, மற்றும் சமய பாரம்பரியத்தை, அடுத்த தலைமுறைக்கு வழங்க, ஒவ்வொரு குடும்பத்திலும், தாத்தாவும், பாட்டியும், முக்கியமாக விளங்குகின்றனர்"

# கிழக்கு ஆப்ரிக்க மக்களுக்கு திருத்தந்தை நிதியுதவி



கடும் வறட்சி மற்றும், உணவுப் பாதுகாப்பின்மையால் துன்புறும் கிழக்கு ஆப்ரிக்க மக்களுக்கு, FAO எனப்படும், ஐ.நா.வின் உணவு மற்றும், வேளாண்மை நிறுவனம் ஆற்றிவரும் பணிகளுக்கு ஆதரவாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 25 ஆயிரம் யூரோக்களை வழங்கியுள்ளார்.

ஆடி 3ம் திகதி, FAO நிறுவனத்தின் கருத்தரங்கிற்கு, அனுப்பிய செய்தியில், பசியால் வாடும் மக்களுக்கு உதவுவதற்கு, அரசுகளை ஊக்குவிக்கும் விதமாக, தான் தூண்டுகோலாக இருப்பேன் எனக் குறிப்பிட்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதை நிறைவேற்றுவதன் அடையாளமாக, இந்நிதியுதவியை அனுப்பியுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இவ்வுதவி குறித்து, FAO நிறுவனத்தில், திருப்பீடத்தின் சார்பில் பணியாற்றும், பேரருள்திரு Fernando Chica Arellano அவர்கள், அந்நிறுவனத்தின் இயக்குனர், José Graziano da Silva அவர்களுக்கு, எழுதியுள்ள கடிதத்தில் அறிவித்துள்ளார்.

கிழக்கு ஆப்ரிக்காவில், ஆயுத மோதல்கள் மற்றும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் கிராமங்களில், வேளாண்மைக்கு உதவும் FAO நிறுவனத்தின் திட்டத்திற்கென, இந்நிதியுதவியை திருத்தந்தை வழங்கியுள்ளார் என, அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சொமாலியா, எத்தியோப்பியா, கென்யா, டான்சானியா, உகாண்டா ஆகிய ஐந்து கிழக்கு ஆப்ரிக்க நாடுகளில், இரண்டு கோடிக்கு மேற்பட்ட மக்கள், கடும் பசிக்கொடுமையை அனுபவிக்கின்றனர். இவ்வெண்ணிக்கை, 2016ம் ஆண்டின் இறுதியில் இருந்ததைவிட, ஏறக்குறைய முப்பது விழுக்காடு அதிகம் என, FAO நிறுவனம் கூறியுள்ளது.

தென் சூடானிலும், ஏறத்தாழ அறுபது இலட்சம் மக்கள், மிகக் கடுமையான பசிக்கொடுமையை அனுபவித்து வருகின்றனர் என, அந்நிறுவனம் மேலும் கூறியுள்ளது.

## பாலியல் தொழிலாளர் திருந்தி வாழ உதவும் அருள்சகோதரிக்கு...

பாலினத்தை மாற்றி வாழ்வதில் ஈர்ப்புடையவர்கள் ஈடுபட்டுவரும் பாலியல் தொழிலைக் கைவிடுவதற்கு, கடந்த 11 ஆண்டுகளாக உழைத்துவரும், ஓர் அடைப்பட்ட துறவு இல்லத்தின் அருள்சகோதரி ஒருவருக்கு, வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். அர்ஜென்டீனாவின் Neuquen என்ற நகரத்தில், கார்மேல் அடைப்பட்ட துறவு இல்லத்தில் வாழ்ந்துவரும் ஐம்பது வயது நிரம்பிய அருள்சகோதரி Monica Astorga அவர்கள், தனது துறவு இல்லத்திலிருந்து வெளியே செல்லாமல், இந்தச் சமூகநலப் பணியை ஆற்றி வருகின்றார்.

இச்சகோதரி ஆற்றிவரும் பணியை ஊக்குவித்து மின்னஞ்சல் செய்தி அனுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இச்சகோதரியுடனும், அவரது துறவு இல்லத்துடனும், அவரோடு சமூகநலப் பணியாற்றும் எல்லாருடனும் தான் ஒருமைப்பாட்டுணர்வு கொள்வதாக எழுதியுள்ளார். இச்சகோதரி இணைந்து பணியாற்றும் குழு, Neuquen நகரத்தில், முன்னாள் பாலியல் தொழிலாளர் பெண்களுக்கென, 15 குடியிருப்புகள் கட்டும் திட்டம் மற்றும், வயதானவர்களுக்கென ஓர் இல்லம் திறப்பது குறித்து தான் கேள்விப்பட்டு,




இச்செய்தியை அனுப்புவதாகவும், திருத்தந்தை அதில் குறிப்பிட்டுள்ளார்.திருத்தந்தை அனுப்பியுள்ள இச்செய்தியின் ஒரு பகுதி, அர்ஜென்டீனாவின் Neuquen நகரத்தின், LmNeuquen.com என்ற வலைத்தள தினத்தாளில், ஆடி 24, திங்களன்று வெளியானது.

பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்த சிறுமி ஒருவர், ஒருசமயம், அருள்சகோதரி Monica Astorgaவின் கார்மேல் துறவு இல்லத்திற்குச் சென்று, தனது உழைப்பில் பத்தில் ஒரு பாகத்தைக் கொடுக்க விரும்பினார். அப்போது, அவரது தொழில் பற்றிக் கேட்டறிந்த அருள்சகோதரி Monica, அச்சிறுமியும், இன்னும், இவர் போன்று தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களும் திருந்தி வாழ உதவியிருக்கிறார்.

## 7வது ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளின் விவரங்கள்



இந்தோனேசியா நாட்டின் யோக்யகர்த்தா (Yogyakarta) நகரில், ஆடி 30, ஞாயிறு முதல், ஆவணி 9ம் திகதி முடிய நடைபெறுகின்ற ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளின் விவரங்களை, செமராங் (Semarang) மறைமாவட்டம் வெளியிட்டுள்ளது.

"மகிழ்வு நிறைந்த ஆசிய இளையோர்! பன்முகக் கலாச்சாரமுடைய ஆசியாவில் நற்செய்தியை வாழ்வது" என்ற மையக்கருத்துடன் நடைபெறும் 7வது ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளை, ஆசிய ஆயர் பேரவையின், இளையோர் மற்றும் குடும்பம் பணிக்குழு ஒருங்கிணைக்கிறது.

இந்தோனேசிய இளையோரைத் தவிர, வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் 2000த்திற்கும் அதிகமான இளையோர் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளனர். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகள், 1999ம் ஆண்டு, தாய்லாந்து நாட்டில் முதல் முறை சிறப்பிக்கப்பட்டது என்பதும், 2003ம் ஆண்டு, இந்த இளையோர் நாள் விழா இந்தியாவின் பெங்களூர் நகரில் சிறப்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கன. 2014ம் ஆண்டு, ஆவணி 13ம் திகதி முதல் 18ம் திகதி முடிய, தென் கொரியாவின் Daejeon நகரில் சிறப்பிக்கப்பட்ட 6வது ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குழந்தை சார்லியை இறைத்தந்தையிடம் ஒப்படைக்கின்றேன்



லண்டனில், பிறக்கும்போதே மரபணு குறைபாட்டுடன் பிறந்துள்ள 11 மாதக் குழந்தை சார்லி கார்டு (Charlie Gard), ஆடி 28, வெள்ளி மாலையில் உயிரிழந்ததையொட்டி, சார்லியின் பெற்றோருக்கும், அக்குழந்தையை அன்புகூர்ந்த எல்லாருக்கும் ஆறுதலாக, டுவிட்டரில், செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அபூர்வ நோயால் தாக்கப்பட்டிருந்த சார்லிக்கு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் தொடர்ந்து சிகிச்சையளிப்பதற்காக, அவனின் பெற்றோர் நடத்திய நீண்ட கால சட்டமுறைப்படியான முயற்சிகளில், தனது ஆதரவைத் தெரிவித்துவந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சார்லி இறந்த செய்தி பற்றி அறிந்தவுடன், குழந்தை சார்லியை இறைத்தந்தையிடம் ஒப்படைக்கின்றேன் எனவும், சார்லியின் பெற்றோர் மற்றும், அக்குழந்தையை அன்புகூர்ந்த எல்லாருக்காகவும் செபிப்பதாகவும், கூறியுள்ளார். மேலும், குழந்தை சார்லியின் மரணத்தை அறிவித்த அவனின் தாய் Connie Yates அவர்கள், "எங்களின் அழகான சிறிய மகன் இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டான், மகனே, சார்லி, உன்னை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறோம்" எனக் கூறியுள்ளார்.

சார்லியின் இறப்பு செய்தியைத் தொடர்ந்து, இங்கிலாந்து கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ், திருப்பீட வாழ்வுக் கழகத்தின் தலைவர் பேராயர் வின்சென்சோ பாலியா, இத்தாலிய ஆயர் பேரவைத் தலைவர், கர்தினால் Gualtiero Bassetti உட்பட, பல சமய மற்றும், அரசியல் தலைவர்கள் தங்களின் இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

சார்லியின் பெற்றோருக்கும், சார்லிக்கு நீண்ட காலமாக சிகிச்சை அளித்துவந்த இலண்டனின் Great Ormond Street மருத்துவமனைப் பணியாளர்களுக்கும், பிரித்தானிய கத்தோலிக்க சமூகத்தின் செபங்களையும், ஆறுதலையும் தெரிவித்துள்ளார், இங்கிலாந்து கர்தினால் நிக்கோல்ஸ்.

தங்கள் மகனின் வாழ்வைப் பாதுகாப்பதற்கு, எல்லா வழிகளிலும் விடாது முயற்சி செய்த, சார்லியின் பெற்றோரின் (Chris Gard 32, Connie Yates 31) துணிச்சலான சான்று வாழ்வைப் பாராட்டியுள்ளதோடு, தனது செபங்களையும் தெரிவித்துள்ளார், இத்தாலிய கர்தினால் Bassetti.

உயிர்காக்கும் கருவிகள் அகற்றப்பட்ட நிலையில், ஆடி 27, வியாழனன்று, இறக்கும் நிலையிலுள்ளவர்களைப் பராமரிக்கும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட குழந்தை சார்லி, வெள்ளி மாலையில் காலமானான்.

லண்டனின் Bedfont பகுதியைச் சேர்ந்த Chris Gard தம்பதியருக்கு, கடந்த ஆண்டு ஆகஸ்ட் 4ம் தேதி பிறந்தான் சார்லி. அதற்கு அடுத்த மாதத்திலேயே இவனின் நோய் கண்டுபிடிக்கப்பட்டு, லண்டன் Great Ormond Street மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். சார்லி, பிறக்கும்போதே மரபணு குறைபாட்டுடன் பிறந்துள்ளதுடன், அவனுக்கு மூளைச் சேதமும் ஏற்பட்டுள்ளது. இதனால், தன் தோள்களையும், கால்களையும் அசைக்க முடியாமலும், தானாக மூச்சு விடவோ அல்லது உணவு உண்ணவோ முடியாமலும் இருந்தான் சார்லி.



# புனித யோசேவ்வாஸ்

## அடிச்சுவட்டில் பயணிக்கும் அருட்சகோதரிகள்

**‘இயேசு நற்செய்தியை அறிவிப்பதற்கு தமது சீடர்களை இருவர் இருவராக அனுப்பியது போன்று நாமும் இருவர் இருவராக அனுப்பப்பட்டோம்’**



இறை மனித தொடர்பின் உன்னத அடையாளம் பகிர்தலே ஆகும். இறைவன் மனிதனோடும் மனிதன் இறைவனோடும் கொண்டுள்ள தொடர்பு தனிப்பட்ட வாழ்வில் பெற்ற இறையனுபவங்களை பிறரோடு பகிர்ந்து கொள்வதன் மூலமும் தெய்வீக உறவில் நிலைத்திருப்பதன் மூலமுமே வெளிப்படுத்தப்படுகின்றது. அன்பைப் பகிர்வதால் வாழ்வும், அறிவைப் பகிர்வதால் ஆளுமையும், பண்பைப் பகிர்வதால் புகழும், பாசத்தைப் பகிர்வதால் உறவும் வளர்வதைப் போல் இறையனுபவத்தையும், வாழ்வையும் பகிரும் போது நீங்கமற நிறைந்திருக்கும் இறைவனோடு கொண்டிருக்கும் உறவையும் ஒன்றிப்-பையும் உரமூட்டிக் கொள்ள முடியும். இந்த வகையில் தான் புனித அக்குவைனாஸ் உயர் கல்விக் கல்லூரியில் உயர்கல்வி பயிலும் அருட்சகோதரிகள் தாம் பெற்ற இறையனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்காகவும் புதிய அனுபவங்களைப் பெற்று தம் வாழ்வை அர்த்தமுள்ளதாகவும், ஆக்கிக் கொள்ளும் ஆன்மீக வாஞ்சையால், உந்தப்பட்டவர்களாக, ஆன்மீகத் தாகத்தோடு இருந்த இறைமக்களின் இல்லங்களை நாடிப் பயணித்தோம்.



“என் கடன் பணி செய்து கிடப்பதே, என்பதை விருது வாக்காகக் கொண்டு, ஆயனில்லா ஆடுகள் போல் இருந்த இலங்கை கத்தோலிக்க மக்களுக்கு, இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றி, விசுவாசத்தில் அவர்களை ஆழப்படுத்தி, வழிநடத்திய புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் காலடித் தடங்கள் பதிந்த புனித மண்ணாகிய புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த சிலாபம் மறைமாவட்டத்தின் வனத்தவில்லுப் பங்கு 10 உப பங்குகளை உள்ளடக்கிய ஏறக்குறைய 700 கத்தோலிக்க குடும்பங்களைக் கொண்ட ஒரு பெரிய பங்காகும்.



வறண்ட காலநிலை இந்தப் பங்கின் பல உப பங்குகளில் வலுவாக உணரப்பட்டாலும், இயற்கையின் அமைதியான சூழ்நிலையானது, பெரும்பாலும், கடற்றொழிலையும் விவசாயத்தையும் தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ள இக்குடும்பங்களுக்கு கிடைத்த சிறந்த வரப்பிரசாதமாகும். எமது நாட்டின் அப்போஸ்தலரான புனித யோசேவ்வாசின் நற்செய்தியைப் பரப்புவதில் இருந்த ஆர்வம் எம்மிடையேயும் அதிகரிக்க, வாழ்க்கையின் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து வாழும் அம்மக்களின், அன்றாட வாழ்வாகிப்போன சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீக ரீதியில் மிகவும் பின் தங்கிய அடிப்படை வசதிகளே சரியாகக் கிடைக்காத நிலையில், சமூகத்தின் பாதைகள் மறைக்கப்பட்டு, விளிம்புகளின் எல்லையில் வாழும் மக்களோடு சில சவால்கள் இருந்த போதிலும் இறைமகன் இயேசுவிடத்தில் பொங்கி வழிந்த அன்புத்தீயால் தூண்டப்பட்டவர்களாக நாம் பெற்ற விசுவாசத்தை, இறையன்பை, மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற பேராவலோடு மிகவும் குறுகிய காலத்தில் அனைவரது இல்லங்களையும் தரிசித்து, அவர்கள் மத்தியில் விசுவாசத்தைப் பலப்படுத்தியதுடன் பல புதிய அனுபவங்களையும் பெற்றுக்கொண்டோம்.

இயேசு நற்செய்தியை அறிவிப்பதற்கு தமது சீடர்களை இருவர் இருவராக அனுப்பியது போன்று நாமும் இருவர் இருவராக அனுப்பப்பட்டோம். பங்குத் தந்தையினதும் அப்பங்கில் பணி புரியும் அருட்சகோதரிகளினதும் பூரண ஒத்துழைப்புடனும், உபபங்குகளின் தலைவர்களின் வழிகாட்டுதலுடனும் எமது பணியை ஆரம்பித்த நாம் பல சந்தர்ப்பங்களில் நெடுந்தூரங்களைக் கடந்து செல்லவதற்கு மிகச் சிறிய திறந்த வாகனங்கள் மூலமும், மோட்டார் சைக்கிள்கள் மூலமும், முச்சக்கர வண்டிகள் மூலமும் பயணித்ததுடன் புனித யோசேவ்வாஸ் பயணித்த ஒற்றையடிப் பாதைகளில் கால் நடையாகவும். பயணித்து அனைத்து மக்களின் இல்லங்களுக்கும் சென்று அவர்களைச் சந்தித்தோம்.



சொந்த மொழியால் தமது வாழ்க்கை அனுபவங்களை சொல்ல முடியாத துன்ப நிகழ்வுகளை வெளிப்படுத்தக் காத்திருந்த மக்களுக்கு எமது பிரசன்னம் உண்மையாகவே மன அமைதியையும் ஆறுதலையும் ஏற்படுத்தியதை அவர்களின் திறந்த மன அனுபவப் பகிர்வின் மூலம் நாம் உணர்ந்து கொண்டோம். மக்களிடையே பல்வகைத் தேவைகள் இருப்பதை உணர்ந்து கொண்ட நாம் அவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாக, இறைவன் உறுதியான விசுவாசத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, அவர்களின் சொந்த மொழிகளில் இளைஞர்கள், சிறுவர்கள், பெற்றோர்கள் என அவர்களது சொந்த ஆலயங்களிலேயே ஒன்றுகூடல்களை நடத்தியதுடன் இறைவார்த்தைப் பகிர்வு, மற்றும் இறைவழிபாடுகளை நடத்தி வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன் மக்களிடையே ஓர் ஒன்றிப்பும் மன அமைதியும், சந்தோசமும் ஏற்பட்டதை உணர்ந்து கொண்டோம்.

இம்மக்களுடன் தங்கியிருந்து பயணித்த இந்தக் குறுகிய காலப்பகுதியில் அம்மக்களின், இருப்பதைக் கொண்டு திருப்பதியடையும் எளிமையான வாழ்க்கை முறையும், இறைவனிடத்தில் கொண்டுள்ள மிக எளிமையான விசுவாசமும் துறவற வாழ்வின் ஆரம்பக் கட்டத்தில் பயணிக்கும் எமக்கு சவாலாகவும், எடுத்துக்காட்டாகவும் இருந்தது. இம்மக்களின் வாழ்க்கைப் பயணம் எமக்கு சவாலாக இருந்தபோதிலும், எமது பிரசன்னம் அவர்களிடையே இறைவனைத் தேடும் ஆன்மீகத் தாகத்தை அதிகரித்ததோடு அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் பலரின் இதயத்தில் இறையன்புத் தீ பற்றியெறிய இறைவன் எம்மை தமது கருவியாகப் பயன்படுத்தியுள்ளார் என்பதை அறிந்து கொண்டோம்.

அன்றாட வாழ்க்கையின் பிரச்சினைகள், இயற்கை அனர்த்தங்கள், பாதிப்புக்கள், போரின் வடுக்கள் எனப் பல சுமைகளால் சோர்ந்து போன மக்களின் துயர்படிந்த வரலாறுகளைக் கேட்டு இறைவார்த்தையின் ஒளியில் ஆறுதல் அளிக்க, வறுமையிலும் வளமையைக் கொண்டாடும் இம்மக்களோடு சில நாட்கள் தங்கியிருந்தமை எமது துறவற வாழ்வில் எமக்குக் கிடைத்த ஓர் அருமையான, அனுபவம் நிறைந்த சந்தர்ப்பம் என்றால் அதில் ஐயமில்லை.

சமூகத்தின் பல்வேறுபட்ட கோணங்களிலும் பாதிக்கப்பட்டு பின் தங்கிய நிலையில் வாழும் வனத்தவில்லுப் பங்கு மக்களுடனான எமது குறுகிய கால மறைத்தூதுப் பணியில் நாம் பெற்றுக்கொண்ட இறையனுபவங்களினால் வலுப்பெற்றவர்களாக, தொடர்-ந்தும் புனித யோசேவ்வாசின் பாதையில், கொழும்பு மறைமாவட்டத்தின் சில பங்குகளைத் தரிசித்து மக்களின் பல்வேறுபட்ட அனுபவங்களுடன் எம்மை இணைப்பதன் மூலம் எதிர்காலத்தில் கத்தோலிக்க விசுவாசத்தில் மக்களையும் வலுப்படுத்தி, எம்மையும் இறையுறவில் ஆழப்படுத்தும் நோக்கில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இயேசுவைக் கொடுப்பதன் மூலம் இயேசுவின் அன்பையும் அமைதியையும் எங்கும் எப்போதும் பரப்பிடும் நோக்கில் தொடர்ந்தும் பயணிக்கின்றோம்.



**அன்பைப் பகிர்வதால் வாழ்வும், அறிவைப் பகிர்வதால் ஆளுமையும், பண்பைப் பகிர்வதால் புகழும், பாசத்தைப் பகிர்வதால் உறவும் வளர்வதைப் போல் இறையனுபவத்தையும், வாழ்வையும் பகிரும் போது நீங்கமற நிறைந்திருக்கும் இறைவனோடு கொண்டிருக்கும் உறவையும் ஒன்றிப்பையும் உரமூட்டிக் கொள்ள முடியும்.**

# புத்தரின் புன்னகை



புத்தரின் புகழ் பல இருந்தது. அவர் ஒவ்வொரு இடங்களாகச் சென்று தனது போதனைகளை எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்திக் கொண்டிருந்தார். ஒருமுறை அவரைப் பார்ப்பதற்காக ஒருவர் வந்தார். அவரது கைகள் இரண்டு மலர்களை ஏந்தியிருந்தது. அந்த மலரை புத்தருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டு வந்திருந்தார்.

அவரைப் பார்த்து புன்னகைத்த புத்தர், "கீழே போடு"என்றார்

வந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை. "எதைக் கீழே போடச் சொல்கிறார்?" என்று குழப்பிப் போனார். "நம்முடைய கையில் இருப்பது மலர்கள்தான். மலரை யாராவது தரையில் வீசச் சொல்வார்களா? ஒரு வேளை நான் இடது கையிலும் மலர்களை வைத்திருப்பதைச் சுட்டிக்காட்டி தான் இப்படிச் சொல்கிறாரோ. இடது கையால் ஏந்தி வந்த மலர்களால் அர்ச்சிக்கக் கூடாது என்று நினைக்கிறாரோ? என்னவோ? என்று நினைத்தார்.

உடனே இடது கையில் வைத்திருந்த மலர்களைத் தரையில் எறிந்து விட்டு, வலது கையில் மலர்களுடன் நின்றார். அப்போது அவரைப் பார்த்து "கீழே போடு!" என்றார் புத்தர்.

இப்போது வலது கையில் இருந்த மலரையும் தரையில் வீசிவிட்டு வெறும் கையுடன் நின்றார் அந்த நபர்.

மீண்டும் அதே புன்னகையுடன் "கீழே போடு! என்றார் புத்தர்.

வந்தவரோ திகைப்புடன் "இரண்டு கைகளில் இருந்ததையும் கீழே போட்டு விட்டேன். இனி கீழே போடுவதற்கு என்ன இருக்கிறது?" என்றார்.

புத்தர் கூறினார், "நான் கீழே போடச் சொன்னது மலர்களை அல்ல, நீ மலர்களோடு சேர்த்துக் கொண்டு வந்த "நான்" என்ற எண்ணத்தைத் தான். நான் இதைச் செய்தேன். அதைச் செய்தேன். என்று கூறும்போது, அங்கு "நான்" என்ற அகந்தையே பிரமாண்டமாக உயர்ந்து நிற்கிறது" என்றார்.

# மனம், பயம்,

## மனம்



எல்லா முயற்சிகளுக்கும் முன்னோடியாக இருப்பது மனம், உணரும் திறன்கள், அனைத்திலும் மிக உயர்ந்தது மனம், எண்ணங்கள் அனைத்தும் உதிக்கும் இடமும், மனம், தூய மனத்துடன் பேசுபவரிடம், செயல் புரிபவனிடம் ஆனந்தம் அவனது சொந்த நிழலைப் போன்றே உடன் இருக்கும்.

(புத்தர்)

## பயம்



நீ எப்போதும் பயத்திற்கு இடம் கொடுக்க எண்ணிக் கொண்டிருக்காதே. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். காலத்திற்கு எல்லையில்லை, ஆகையால் முன்னேறு திரும்பத் திரும்ப உன் இயல்பைத் வலியுறுத்து, ஒளி வந்தே தீரும்

(சுவாமி விவேகானந்தர்)

## ஜெபம்



உன் கடமையைச் செய்தே ஆக வேண்டும். அதனை மறுப்பதற்கில்லை. அதேவேளையில் காலையிலும், மாலையிலும் இதனைச் செய்ய வேண்டும். முறையான ஜெபம் என்பது படகுக்கு துடுப்பு போல் செயல்படுகிறது.

(சாரதா தேவி)

# முடிந்ததும் முடியாததும்

பணத்தைக் கொண்டு நாம் எதை வேண்டுமானாலும் சாதித்து விட முடியுமா? "முடியாது" என்று ஒரு சீனக்கவிதை சொல்கிறது. அந்த கவிதைத் தரும் சில ஆழமான எடுத்துக்காட்டுக்கள் இதோ,



- ☆ **பணத்தைக்** கொண்டு நாம் வீட்டை வாங்கலாம், ஆனால் **குடும்பத்தை** வாங்க முடியாது.
- ☆ **கடிகாரத்தை** வாங்கலாம், ஆனால் **நேரத்தை** வா ங்க முடியாது.
- ☆ **கட்டில், மெத்தை** வாங்கலாம், ஆனால் **தூக்கத்தை** வாங்க முடியாது.
- ☆ **புத்தகத்தை** வாங்கலாம், ஆனால் **அறிவை** வாங்க முடியாது.
- ☆ **மருந்தை** வாங்கலாம், ஆனால் உடல் **நலத்தை** வாங்க முடியாது.
- ☆ **பதவியை** வாங்கலாம், ஆனால் **மரியாதையை** வாங்க முடியாது.
- ☆ **இரத்தத்தையே** வாங்கலாம், ஆனால் உயிரை வாங்க முடியாது.

இந்த வரிகளை மீண்டும் மீண்டும் வாசியுங்கள்

**பொருள் மட்டும் வாழ்வாகி விடாது. உறவில்லாமல் வாழ்வில்லை. உறவை விலைக் கொடுத்து வாங்க வழி இல்லை**

**உலகில் ஆற்றல் மிக்கது ஜெபமேயாகும்.**
**இறைவன் அளித்த பிறப்புரிமை அன்பு செய்தலாகும்.**
**ஞானத்தின் ஊற்று கற்றலேயாகும்.**
**வல்லமையின் ஊற்று சிந்தனையேயாகும்.**
**மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் பாதை நட்பேயாகும்**
**வாழ்வுகுறுகியது: எனவே சுயநலத்திற்கு இடமளிக்காது**
**இளமையின் இரகசியம் உடற்பயிற்சியிலே உளது**
**ஆன்மாவின் கீதம் புன்னகையிலே**
**வெற்றியின் விலை உழைப்பு**

# பொன்னான வாய்ப்பு



முன்பு ஒரு காலத்தில் ஒட்டகப் பயணிகளின் கூட்டம் ஒன்று கற்பாறை நிறைந்த பாலை நிலத்தின் வழியாக வெகு சிரமத்துடன் பயணம் செய்து கொண்டிருந்தது. பாலைவன வழிகாட்டி, வரையறுக்கப்படாத வழிகளின் வழியாக, வேகாத வெயிலில் பயணிகளை வழி நடத்திக் கொண்டிருந்தான். வழிகாட்டியின் மேல் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து அவர்கள் பயணத்தைத் தொடங்கியிருந்தனர். அனைத்துப் பயணிகளும் தங்கள் உடலையும், ஆன்மாவையும் வழகாட்டியிடமே ஒப்படைத்திருந்தனர். பகலில் எவ்வளவு வெயிலாக இருந்தது என்றால், பகலில் பயணம் செய்வது இயலாத காரியமாக இருந்தது. எனவே, இரவில் பயணம் செய்வது என்று வழிகாட்டி தீர்மானித்தான். பகலில் ஓரளவு கிடைத்த கூடார நிழலில் சற்று கண்ணயர்ந்தனர். நீண்ட கடினமான பயணத்திற்குப் பின்னர். ஓர் இரவு பயணிகள் அனைவரும் களைத்து, இளைத்து, தவித்து, பலங்குன்றிக் காணப்பட்டனர். கரடு முரடான, அனுதாபமும் ஈவு இரக்கமும் அற்ற பயணத்தில் இருந்தனர். கொஞ்சமாவது இளைப்பாற்றிக் கிடைக்காதா என்று இளைப்பாற்றிக்காக ஏங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் அவர்கள் சக்தியை உறிஞ்சி எடுப்பதாக இருந்தது. திடீரென்று இரவின் பேரமைதியை வழிகாட்டியின் குரல் கலைத்தது. "நில்லுங்கள், நில்லுங்கள்" என்றான் வழிகாட்டி. சற்று ஓய்வு கிடைக்கும் என்று எண்ணி அனைவரும் நின்றனர். "கற்கள் நிறைந்த பாதையிலே நாம் இப்பொழுது சென்று கொண்டிருக்கின்றோம் என்பது உங்களுக்குத் தெரியும். உடனே குனிந்து தரையில் கிடக்கும் கற்களைப் பொறுக்கி உங்கள் பைகளில் போட்டுக் கொண்டு வீட்டிற்குப் போக தயாராகுங்கள். என்னுடைய கட்டளையை நீங்கள் நிறைவேற்ற உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் கொடுக்கின்றேன்" என்றான் வழிகாட்டி. வழிகாட்டியின் கட்டளையைக் கேட்டு பயணிகள், "என்ன இது? நமது வழிகாட்டி, மதி மயங்கிப் போய் விட்டாரா என்ன? நாங்கள் நடப்பதே தர்மச் சங்கடமாக இருக்கும்போது, கற்களை சுமந்து கொண்டு எப்படி நடப்பது, முடியாது, முடியாது. எங்களால் முடியவே முடியாது, நாங்கள் என்ன பொதி சுமக்கும் பொதிமாடா? என்று அவர் சொல்வதை நாங்கள் கேட்க மாட்டோம்" என்று கொண்டே தங்கள் பையில் ஒரு சில கற்களைப் பொறுக்கிப் போட்டுக்கொண்டனர். "எழுந்து நடங்கள்" என்று வழிகாட்டி மீண்டும் கட்டளையிட்டான்.

பாதையில்லா பாலை நிலத்திலே, பயணிகள் மீண்டும் தங்கள் பயணத்தை வீடு நோக்கித் தொடர்ந்தனர். இரவின் அமைதியில், பயணிகளின் காலடித் தொணியைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை. வழிகாட்டி கொடுத்த வினோத கட்டளையின் பொருள் என்னவாக இருக்கலாம் என்று வியந்து கொண்டே கால்கள் பின்னிப் பின்னிப் நடந்து கொண்டிருந்தனர். நெடுந்தூரத்திலிருந்த தொடுவானத்தில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தது. சூரியனின் ஒளிக்கதிர்கள் நீண்ட இரவின் இருளை விரட்டியடித்துக் கொண்டிருந்தன. புதியதொரு நாள் புலர்ந்தது. கூடாரத்தை அடித்து, உறங்கத் தயாரானார்கள் ஒரு சிலர். கற்களைப் பொறுக்கித் தங்கள் பைகளில் போட்டவர்கள் அக்கற்களைத் தேடினார்கள். என்ன அதிசயம்! வானவில்லின் ஏழு நிறங்களும் அக்கற்களில் ஒளிவிட்டு சுடர் வீசின.

# வரலாற்று சிறப்புமிக்க வஹாக்கோட்டை
# புனித அந்தோனியார் தேசிய திருத்தலம்
## புனித அந்தோனியாரின் பிறப்புத் திருவிழா – 2017



இரத்தினப்புரி ஆயர்
**மேதகு கிளீட்டஸ் சந்திரசிறி (பு.ஆ.ச)**
ஆண்டகையின் தலைமையில்

**திருவிழா சிறப்புத் திருப்பலி – 2017.08.20**
**காலை 8.30 மணிக்கு**

(N3096)

**மாலை ஆராதனை 2017.08.19 – இரவு 7.00 மணிக்கு**

**ஏனையத் திருப்பலிகள் : நண்பகல் 12.00, மாலை 5.00**

* வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, திருத்தலத்தின் மதிப்பினை பாதுகாக்கும் வண்ணம் நடந்து கொள்ளவும்.
* இப்புனித பூமி அமைந்துள்ள இடத்திற்குள் மதுபானம், இசைக்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், மற்றும் செல்லப்பிராணிகள் ஆகியவற்றை கொண்டுவருவதை தவிர்க்கவும்.
* திருத்தலத்தின் உள்ளேயும், வெளியேயும் சாதாரண உடை அணியவும், உங்களது கூடாரங்களில் இருக்கும்போதும் ஒழுக்கமான உடைகளை அணிவது அத்தியாவசியமாகும்.
* தேவையற்ற விதமாக தங்க நகைகள், பணம், மற்றும் பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதை தவிர்க்கவும்.
* திருத்தல பூமியில் உள்ள வீடுகளை பெற்றுக்கொள்பவர்கள் அவற்றை துப்பரவாகவும் சேதம் விளைவிக்காத வண்ணமும் பாவிப்பது அவசியம் என்பதை கருத்திற் கொள்ளவும்.

அருட்பணி : டொம் சன்சன வசார (பு.ஆ.ச) திருத்தல பரிபாலகர்,
புனித அந்தோனியார் தேசிய திருத்தலம், வஹாக்கோட்டை 0775 – 515616 066-2289210

# புனித திரேசாள் ஆலயம், திம்பிரிகஸ்யாய, கொழும்பு – 05

(N2281)

### இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும்
### இரட்சகர் சபை குருக்கள் வழங்கும்
# பொது தியானம் 2017

**தியான நாட்கள் : 2017 ஆகஸ்ட் 16 முதல் 25 வரை**
**காலை மற்றும் மாலை**
**தியான நிகழ்வுகள் : ஜெபமாலை, திருப்பலி, சிறப்பு மறையுரை, சிறப்பு ஆராதனை, குணமளிக்கும் வழிபாடு, தீய கட்டுகள் உடைய ஜெபம்**



கடவுளுடைய அன்பு, அமைதி, மன்னிப்பு, விடுதலை மற்றும் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள குடும்பமாக வாருங்கள்.

அன்புடன் பங்கு பணியாளர்கள் மற்றும் தியான குருக்கள்.

# மாத்தறை மாதா தேசிய திருத்தலம்
## 110வது வருடாந்த திருவிழா – 2017

## புரட்டாதி 08,09 மற்றும் 10

- ஆவணி மாதம் 31ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொடியேற்றம்
- புரட்டாதி 01ஆம் திகதி தொடக்கம் 07ஆந் திகதி வரை தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும், நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.
- புரட்டாதி 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணை பவனி, காலி மறைமாவட்ட குரு முதல்வர் அதி வண. சாள்ஸ் ஹேவாவசம் அடிகளாரின் தலைமையில் நடத்தப்படும்.
- புரட்டாதி மாதம் 09ஆம் திகதி – சனிக்கிழமை காலை 8.30 திருப்பலி, காலை 10.00 திருப்பலி, காலை 11.30 திருப்பலி
- புரட்டாதி 09ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்களையும் வரவேற்றல்.



**மாலை ஆராதனை: புரட்டாதி 09ஆம் திகதி சனிக்கிழமை 4.30 மணிக்கு**
திருச்செபமாலை தியானம், மற்றும் மன்றாட்டு, மாலை ஆராதனை மற்றும் மாத்தறை அன்னையின் திருச்சுரூப பவனி
யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையில்

**புரட்டாசி 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**
காலை 4.00 திருப்பலி – சிங்களம்
காலை 5.00 திருப்பலி – தமிழ் மற்றும் சிங்களம்
காலை 6.00 திருப்பலி – ஆங்கிலம் மற்றும் சிங்களம்
காலை 11.30 திருப்பலி – சிங்களம்
மாலை 4.00 திருப்பலி – சிங்களம்
மாலை 6.00 திருப்பலி – சிங்களம்

(Q17N3097)

**திருவிழா திருப்பலி : புரட்டாதி 10 ஞாயிறு காலை 8.00 மணி**
காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை மற்றும், யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோரின் தலைமையில்

* புரட்டாசி 09ஆம் திகதி சனிக்கிழமை சிலாபத்திலிருந்து (பங்கதெனிய) மாத்தறை வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
* புரட்டாசி 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தறையிலிருந்து சிலாபம் (பங்கதெனிய) வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
* புரட்டாசி மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை முதல், வருகைதரும் பக்தர்களுக்காக பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

## உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்

திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை கொலின் நிக்சன் அடிகளார் மற்றும் உதவிப் பங்குதந்தை அருட்தந்தை லசந்த பொன்சேக்கா அடிகள்
0fficial web : www.ourladyofmathara.lk
E-mail: fradministrator@ourladyofmatara.lk
frcolinm@gmail.com
தொ.பேசி 041-2222056



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்